மலர் : 51 இதழ் : 09

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மார்ச் 2020
விலை ரூ.20



மார்ச் 8 : சர்வதேச மகளிர் தினம்

தடைக் கற்களை படிக் கற்களாக மாற்றி சாதனை படைக்கும் பெண்களாக உயர்ந்து விளங்கிட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
"சர்வதேச மகளிர் தின" வாழ்த்துச் செய்தி – 08.03.2020

பெண்களின் சிறப்பினையும், மாண்பினையும் போற்றும் வகையிலும், சமுதாய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பினை உலகிற்கு உணர்த்திடும் வகையிலும், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளில் அனைத்து மகளிருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், பெண்களின் வாழ்வு மேன்மையுறவும், பெண்களின் நல்வாழ்விற்காகவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இல்லத்தரசிகளுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கும் திட்டம், கிராமப்புற பெண்களின் பொருளாதாரம் மேம்பட விலையில்லா ஆடுகள், மாடுகள் வழங்கும் திட்டம், படித்த பெண்களை ஊக்குவிக்க திருமண நிதியுதவியுடன் தாலிக்கு தங்கம் திட்டம், பெண்களுக்கு விலையில்லா சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், இந்தியாவிற்கே முன்னோடியாக பெண்களுக்கு எதிரான குற்றங்களை களைந்திட 13 அம்ச திட்டம், அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஒன்பது மாத காலம் மகப்பேறு விடுப்பு, உழைக்கும் மகளிர் பயன்பெறும் வகையில் "அம்மா இருசக்கர வாகனத் திட்டம்", வேலைக்குச் செல்லும் மகளிர் பாதுகாப்பான வசிப்பிடத்தில் தங்கிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள், பெண்களின் பொருளாதார தேவையை பூர்த்தி செய்திடவும், அவர்களை சுயசார்புடையவர்களாக உயர்த்தும் பொருட்டும் சமூகநலத்துறையின் கீழ், 123 மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பினை முழுமையாக உறுதி செய்வதற்கு சென்னை பெருநகரில் பல்வேறு இடங்களில் நிர்பயா நிதியின் கீழ் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல், மகளிர் பாதுகாப்பை உறுதிசெய்திட "காவலன்" கைப்பேசி செயலி, தமிழ்நாட்டில் பெண் சிசுக் கொலையை தடுத்தல், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளித்தல் மற்றும் பாலின விகிதத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்கள் உரிமைகள், பாலியல் வன்கொடுமை மற்றும் பணியிடங்களில் உருவாகும் அசாதாரண நிலையை குறித்து புகார் தெரிவிக்க பெண்களுக்கென பிரத்யேகமாக இணையத்தளத்தில் வடிவமைக்கப்பட்ட "புகார் பெட்டி (SHe Box)" ஏற்படுத்தப்பட்டு சமூக நலத்துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடி உதவிகள் வழங்குவதற்கு ஏதுவாக 24 மணி நேரமும் செயல்பட கூடிய மகளிர் உதவி மையத்தை தொடர்புகொள்ள 181 என்ற கட்டணமில்லா தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது. தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு "ஒருங்கிணைந்த சேவை மையம்" (One Stop Centre) என்ற திட்டத்தின் கீழ் பெண்களுக்கு ஆதரவையும், ஒருங்கிணைந்த சேவையாக தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, மனநல ஆலோசனை போன்ற சேவைகளும் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

பெண்கள் வாழ்வில் எதிர்வரும் சோதனைகளை உறுதியுடன் எதிர்கொண்டு, தடைக் கற்களை படிக் கற்களாக மாற்றி, சாதனை படைக்கும் பெண்களாக அனைத்து மகளிரும் உயர்ந்து விளங்கிட வேண்டும் என்று வாழ்த்தி, இந்த இனிய நாளில், அனைத்து மகளிருக்கும் எனது இதயப்பூர்வமான மகளிர் தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2050 – 51
விகாரி வருடம் : மாசி – பங்குனி
மார்ச் 2020
மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 9

ஆசியாவிலேயே முதலீட்டுக்கு ஏற்ற சிறந்த இடமாக தமிழ்நாடு உயர்வடைய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிர்ணயித்த இலக்கை நோக்கி, எனது தலைமையிலான அரசு பயணித்து வருகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. சரவணன்
இணை இயக்குநர் (நினைவகங்கள்) /
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (கூ.பொ.)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
மு.அ. ரோசன் குர்சிதா பேகம்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
மாய குமரேசன்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

இந்த இதழில்...

★ **மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் தேதியை "மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக" அனுசரிக்கப்படும்!**
*சட்டப்பேரவை விதி 110இன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிவிப்பு–19.02.2020*.......5

★ **பட்டி, தொட்டி மக்களிடம் வார இதழ் படிக்கும் பழக்கத்தை உருவாக்கித் தந்தவர் மறைந்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்!**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரபாண்டியபட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தினை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை – 22.02.2020*.......24

★ **11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கி 1,650 மருத்துவ இடங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கியுள்ளது!**
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 04.03.2020*.......37

★ **கிராமம் முதல் நகரம் வரை மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிப்பதிலே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது!**
*சென்னையில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 03.03.2020*.......63

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக இணைந்துள்ள 14 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/– வைப்பீட்டு தொகைக்கான பத்திரங்களை வழங்கினார்கள் – 24.02.2020

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் தேதியை "மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக" அனுசரிக்கப்படும்!

சட்டப்பேரவை விதி 110இன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிவிப்பு–19.02.2020

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குழந்தைகள் மீது மிகுந்த பற்றும், மாறாத அன்பும் கொண்டு, குழந்தைகளைக் காணும்போதெல்லாம் அவர்களை உச்சி முகர்ந்து வாழ்த்தி மகிழும் தாயுள்ளம் கொண்டவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். குறிப்பாக, பெண் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, அவர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர், நமது மாண்புமிகு அம்மா அவர்கள்.

அன்னை தெரசா அவர்களாலேயே பாராட்டப்பட்ட "தொட்டில் குழந்தைகள் திட்டம்", "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்", "அங்கன்வாடி குழந்தைகளுக்கு வண்ணச் சீருடைகள்", பெண் கல்வியை ஊக்குவிக்க, படித்த பெண்களுக்கு "ஊக்கத் தொகையுடன் கூடிய தாலிக்குத் தங்கம்", அன்பும் அரவணைப்பும் கிடைக்கும் வண்ணம் "ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் முதியோர்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல்" போன்ற புதுமையான திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளுக்காக, குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உயர்ந்த சேவையினை நினைவு கூரத்தக்க வகையில், அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் தேதியை, "மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக" அனுசரிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது. **மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவினை சிறப்பிக்கும் வகையில், ஆதரவற்ற பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்கான ஐந்து புதிய திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்த உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

1) அரசு இல்லங்களில் வாழும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், 21 வயதை நிறைவு செய்யும்போது, அவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் அவர்களது பெயரில் வங்கியில் செலுத்தப்படும். அரசு இல்லங்களை விட்டு வெளியேறும் குழந்தைகள், சமுதாயத்தில் தங்கள் வாழ்க்கையை நிறைவாக அமைத்துக் கொள்ள இத்தொகை ஏதுவாக அமையும்.

2) பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத பெண் குழந்தைகள், 18 வயது முடிந்து, அரசு குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியே சென்ற பின்னர், அவர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைக்கு பாதிப்பு ஏற்படுமானால், மாண்புமிகு அம்மாவின் அரசு, தாய் தந்தை நிலையிலிருந்து அவர்களின் சமூக, பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு சிறப்பு உதவித் தொகுப்பினை வழங்கும். இந்த உதவித் தொகுப்பில் மேற்கல்வி பயிலுதல், திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய தொழில் செய்தல் போன்றவை அடங்கும். அப்பெண்களுக்கு 50 வயது நிறைவடையும் வரை இவ்வுதவி வழங்கப்படும்.

3) தமிழ்நாட்டில் உள்ள பராமரிப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தைகள், நல்ல குடும்ப சூழ்நிலையில் வளர்வதற்கு, தகுந்த குடும்பங்களை அடையாளம்

கண்டு, அக்குழந்தைகளை சிறந்த முறையில் வளர்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் வளர்ப்பு பெற்றோர்களுக்கு தற்போது 3 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை, மாதம் 4,000 ரூபாயாக உயர்த்தி 5 ஆண்டுகளுக்கு வளர்ப்பு பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.

4) பெண் சிசுக் கொலைகளை தடுத்திட தொட்டில் குழந்தை திட்டத்தினை நாட்டிலேயே முதன் முதலாக அறிமுகப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ்நாட்டில், பெண் சிசுக் கொலைகள் குறைந்து வரும் நிலையில், சில மாவட்டங்களில் மட்டும், குழந்தைகள் பாலின விகிதம் சராசரி பாலின விகிதத்தை காட்டிலும் குறைவாக உள்ளது. அதனை கருத்திற்கொண்டு, குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிருவாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் வழங்கப்படும்.

5) சமூகப் பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கும், காப்பகங்களில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய இல்ல வாசிகளுக்கும், சமூகப் பாதுகாப்புத் துறையில் ‘C’ மற்றும் ‘D’ பிரிவில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத காலிப் பணியிடங்களில் பணியமர்த்த தற்போது அரசாணை உள்ளது.

அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள, முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் கீழ் இயங்கும், சமூகநலத் துறை, சமூக பாதுகாப்புத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் **தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியிடங்களில், வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.**

இதைத் தவிர, சத்துணவு திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும், தகுதிக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலமாக்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை 1,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

1. தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்று வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகிய உலமாக்களுக்கு தற்போது 1,500/– ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. உலமாக்களுக்கு வழங்கப்படும் இந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகை 1,500/– ரூபாயிலிருந்து 3,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

2. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு ஹஜ் குழுவின் மூலம் 4,000 பயணிகள் சென்னை விமான நிலையம் வழியாக ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர். கடந்த ஆண்டு ஹஜ் பயணத்தின் போது 4,300–க்கும் மேற்பட்டோர் ஹஜ் பயணம் மேற்கொண்டனர். ஹஜ் பயணிகள் தங்களுடைய பயணத்திற்கு முன்பு தங்கி கடவுச்சீட்டு, பயண உடமைகள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை சிரமமின்றி மேற்கொள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையில் ஒதுக்கீடு செய்யும் நிலத்தில் ஒரு ஹஜ் இல்லம் கட்ட 15 கோடி ரூபாயினை அரசு ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்டப்படும்.

3. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வக்ஃப் நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இந்த பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனங்கள் வாங்க 25,000 ரூபாய் அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவீதம் இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து அமைகிறேன்.

“சத்துணவுத் திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும், தகுதிக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பணியாற்றிய சிறுமிக்கு விருது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.02.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளான மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, பெண் குழந்தைகளின் சமூக முன்னேற்றத்திற்காக சிறப்பாக பணியாற்றிய சிறுமி ச. பவதாரணி அவர்களுக்கு பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருதும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக இணைந்துள்ள 14 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/– வைப்பீட்டு தொகைக்கான பத்திரங்களையும், இத்திட்டத்தில் இணைந்து தற்போது 18 வயது பூர்த்தியடைந்த 7 பெண்களுக்கு முதிர்வுத் தொகைக்கான காசோலைகளையும் வழங்கினார்கள்.

பெண் குழந்தைகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, அவர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உயர்ந்த சேவையினை நினைவு கூறும் வகையில், அவரது பிறந்த நாளான பிப்ரவரி 24ஆம் நாளை 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம்'–ஆக அனுசரிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 அன்று சட்டப்பேரவை விதி எண்:110இன் கீழ் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி, பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அனைத்து பெண் குழந்தைகளும் 18 வயது வரை கல்வி கற்றலை உறுதி செய்யவும், பெண் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிக்கவும், பெண் குழந்தை திருமணங்களைத் தடுக்கவும் பாடுபட்டு, வீரதீர செயல்புரிந்த 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைக்கு வழங்கப்படும், இந்த ஆண்டிற்கான பெண் குழந்தை முன்னேற்றத்திற்கான மாநில விருது, போஷன் அபியான் திட்டம், நெகிழி பயன்பாட்டைத் தவிர்த்தல், வாக்களிக்க மக்களை ஊக்குவித்தல், கண்தானம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொண்டதற்காக, கடலூர் மாவட்டம், மாலுமியர்பேட்டையைச் சார்ந்த 9 வயது சிறுமி ச. பவதாரணி அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் மாநில அரசின் விருதிற்கான 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், பாராட்டு பத்திரமும் வழங்கி, பாராட்டினார்கள்.

மேலும், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், புதிதாக இணைந்துள்ள 14 பெண் குழந்தைகளுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் அக்குழந்தைகளின் பெயரில் தலா ரூ.25,000/– வைப்பீட்டு தொகை செய்யப்பட்டதற்கான பத்திரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தில் இணைந்து, தற்போது 18 வயது பூர்த்தியடைந்த 7 பெண்களுக்கு முதிர்வுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தமிழர்களின் உரிமைகளை காப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதும் உறுதியுடன் செயல்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.02.2020 அன்று, சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட "பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்" குறித்த சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும்" என்பதை நான் ஏற்கெனவே பலமுறை எடுத்துரைத்துள்ளேன். இரவு பகல் பாராமல், வெயில், மழை பொருட்படுத்தாமல் இரத்தத்தை வியர்வையாக மண்ணில் சிந்தி உழைக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு எங்களுடைய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. நானும் ஒரு விவசாயி என்பதால், வேளாண் பெருமக்களின்

பிரச்சினைகளையும், அவர்களின் தேவைகளையும் உணர்ந்து நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, மாண்புமிகு அம்மாவை தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசும் வேளாண்துறையில் பல்வேறு முத்திரைகளை பதித்து வருகிறது.

சுமார் 28 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் 33 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யும் காவேரி டெல்டா பகுதியானது, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது.

- இப்பகுதி விவசாயிகள் வெள்ளம், வறட்சி மற்றும் புயல் போன்ற இயற்கை சவால்களை அடிக்கடி எதிர்கொண்டாலும், விவசாய உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.
- காவேரி டெல்டா பகுதி ஆழ்துளை மூலமும், கிணறு மூலமும் பாசனம் செய்யும் விவசாயப் பகுதியாக உள்ளதால், ஹைட்ரோ கார்பன் திட்டங்களால் நிலத்தடி நீருக்கு பாதிப்பு ஏற்படுவதோடு அங்கு ஏற்கெனவே இருக்கும் ஆழ்துளை கிணறுகளுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும்.
- விவசாய உற்பத்திக்கு முக்கிய பகுதியாக உள்ள காவேரி டெல்டா பகுதி, கடல் சார்ந்த பகுதியாக உள்ளதால் நிலத்தடி நீர் வெளியேற்றப்பட்டால் கடல் நீர் உட்புக வாய்ப்புள்ளது. இதனால் பெரும் பாதிப்பு ஏற்படும்.
- காவேரி டெல்டா பகுதி சதுப்புநிலக் காடுகள் அமைந்துள்ள பகுதியாகும். இவ்வகை திட்டங்களால் சுனாமி போன்ற பேரழிவுகளுக்கு அரணாக விளங்குகின்ற சதுப்புநிலக் காடுகள் பாதிக்கப்படும்.
- காவேரி டெல்டா பகுதியானது, தொல்லியல் மற்றும் கலாச்சார பாரம்பரியமிக்க மண்டலமாகும். ஹைட்ரோ கார்பன் திட்டங்களால் கலாச்சார பாரம்பரிய சின்னங்கள் சேதம் அடையும் ஆபத்து உள்ளது.

இதனால், இப்பகுதியை பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழர்களின் உணர்வோடு இரண்டறக் கலந்துள்ள பாரம்பரியம் மிக்க காவேரி டெல்டா பகுதியினை மேலும் பல்லாயிரம் ஆண்டுகள் பாதுகாத்திடவும், வேளாண் தொழிலுக்கு எவ்வித இடையூறும் எப்போதும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை 09.02.2020 அன்று தலைவாசலில் நடந்த கால்நடைப் பூங்கா நிகழ்ச்சியில் "தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாட்டின் உணவு பாதுகாப்பினை உறுதிபடுத்திடவும், காவேரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் சில டெல்டா பகுதிகளை "பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றப்படும்" என்ற அறிவிப்பை நான் வெளியிட்டேன்.

அத்தோடு நில்லாமல் 10.02.2020 அன்றே, அதாவது அறிவிப்பின் மறுநாளே இவ்வறிப்பு தொடர்பாக இயற்றப்படும் சட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டி மத்திய அரசிற்கு கடிதம் ஒன்றை எழுதினேன். மேலும் அதனை மூத்த அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஜெயக்குமார் அவர்களின் தலைமையில் ஒரு குழு நேரடியாக புதுதில்லி சென்று அதனை சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சில எதிர்க்கட்சியினர் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்த முடியாது, இது நடக்காது என பல கருத்துக்களை, ஊடகங்களில் வெளியிட்டு மக்களை திசை திருப்ப முயற்சித்தனர். அவர்களின் எண்ணம் மக்களிடம் ஈடேறவில்லை. அதற்கு மாறாக, அனைத்து விவசாய சங்கங்களும், வேளாண் பெருமக்களும் இந்த அறிவிப்பினை வரவேற்று பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

கடந்த 10.02.2020 தேதியிட்ட கடிதத்திற்கு பதில் எழுதியுள்ள மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றங்கள் துறை அமைச்சர் அவர்கள், தனது 19.02.2020 தேதியிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

We would like to bring to your notice the fact that the current notification dated 16.01.2020 does not prevent the State Government from taking appropriate action in the matter.

Any project proponent will, in the present scheme of things, have to apply to State Environmental Impact Assessment Authority, which is an organ of the State Government and SEIAA will take a final call in the matter. Therefore, the final decision as to whether to allow any particular project in any particular Region would continue to vest with the State Government". என்று மாநில அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

வேளாண் பெருமக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, வேளாண் பெருமக்களின் வாழ்வில் பெரிதும் அக்கறை கொண்டு மிக குறுகிய காலத்திலேயே சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து, தகுந்த

வழிமுறைகளை ஆராய்ந்து, இன்று, ''பாதுகாக்கப்பட்ட காவேரி டெல்டா வேளாண் மண்டலத்திற்கான ஒரு தனிச் சட்டத்தினை'' சட்டசபையில் அறிமுகம் செய்து வரலாற்று சாதனையை நிகழ்த்தியுள்ளது.

வேளாண் பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சில முக்கிய நடவடிக்கைகளை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

❖ 2016–2017இல் நிலவிய வறட்சியின் பிடியில் இருந்து விவசாயிகளைக் காக்க, நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், வறட்சி நிவாரணமாக 2,247 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

❖ 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் 90 இலட்சம் விவசாயிகள் பயன் பெறும் வகையில், 48 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

❖ பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் இந்தியாவிலேயே ஒரு வரலாற்றுச் சாதனையாக விவசாயிகளுக்கு 7,618 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக பெற்றுத் தந்த அரசு எங்களுடைய அரசு.

❖ மானாவாரி சாகுபடி மூலம் அதிக இலாபம் ஈட்டும் வகையில் நீடித்த, நிலையான மானாவாரி இயக்கம் என்ற திட்டத்தின் மூலம் 25 இலட்சம் ஏக்கர் பரப்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 9 இலட்சத்து 44 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

❖ முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், விவசாயிகள் மற்றும் அவர்தம் குழந்தைகளின் பல்வேறு நிவாரணங்களுக்காக இதுவரை 1,868 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது.

❖ அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் மக்காச்சோளப் பயிர்கள் பாதிக்கப்பட்ட போது, அவ்விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அவர்களது இழப்பினை ஈடு செய்ய 186.25 கோடி ரூபாய் அந்த விவசாயிகளுக்கு அம்மாவுடைய அரசு நிவாரணமாக வழங்கியது.

❖ இவ்வாண்டு படைப்புழு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த, 47 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசே பூச்சி மருந்தை தெளிக்க நடவடிக்கை எடுத்து விவசாயிகளை காப்பாற்றிய அரசு அம்மாவின் அரசு.

❖ தென்னை விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டும் வகையில் தென்னம்பாளையிலிருந்து ''நீரா'' பானத்தை உற்பத்தி செய்வதற்கு உரிய சட்ட திருத்தத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றிய அரசு அம்மாவின் அரசு.

❖ பழங்கள் மற்றும் காய்கறிகள் பயிரிடும் விவசாயிகளின் அறுவடைக்குப்பின் இழப்பினைக் குறைக்க, 585 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 மாவட்டங்களில் விநியோகத் தொடர் மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

❖ அதேபோல, தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் 217 கோடி ரூபாய் மதிப்பில் உணவுப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

❖ கடந்த 3 ஆண்டுகளில், 3.3 இலட்சம் எக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம் சுமார் 1,480 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

❖ வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு விவசாயிகள் பெற 1,665 இயந்திர வாடகை மையங்கள் கிராம மற்றும் வட்டார அளவில் 234 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

❖ இதுவரை 6 இலட்சம் சிறு குறு விவசாயிகளை 200 கோடி ரூபாய் செலவில், கூட்டுப் பண்ணையத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைத்து 6 ஆயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ டெல்டா பகுதிகளில் பருவ மழை பொய்த்த 2016, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி சாகுபடி செய்ய சிறப்பு குறுவை தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்தியது.

ஏரிகளை தூர்வாரி பராமரித்து நீரின் கொள்ளளவை உயர்த்தியும், காவேரியில் கடைமடை வரை வாய்க்கால்களை தூர் வாரி, நீர் கொண்டு சென்ற காரணத்தாலும், இந்த ஆண்டில் 7 இலட்சம் ஏக்கர் கூடுதலாக தமிழ்நாட்டில் வேளாண் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்ட விவசாயிகள் நீராதாரம் பெறுவதற்கு பொன்னியின் **செல்வி மாண்புமிகு அம்மா அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் நடத்திய சட்டப் போராட்டத்தின் காரணமாக, மாண்புமிகு உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர்**

முறைப்படுத்தும் குழு ஆகியவை அமைக்கப்பட்டு, காவேரியில் உள்ள தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது. இவை அனைத்தையும் செய்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரியில் நமக்குள்ள உரிமையை நிலை நாட்டுவதற்காக அமைக்கப்பட்ட காவேரி நடுவர் மன்றம், தனது இறுதி ஆணையை 05.02.2007 அன்று வழங்கியது. மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய சட்டப் போராட்டத்தின் காரணமாக காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19.02.2013 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டதும் மாண்புமிகு அம்மாவின் அரசால் தான்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, பரம்பிக்குளம், முல்லைப்பெரியாறு போன்ற பிரச்சினைகளில் தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, சட்டரீதியான நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், பிற நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. அதற்கு உதாரணமாக, மேற்கண்ட நதிநீர் பிரச்சினைகள் சம்பந்தமாக, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களை நானே நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினேன். இந்த முயற்சியால் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தை தற்பொழுதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வாறு பல திட்டங்களையும் இன்னும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளையும் எடுத்த காரணத்தால், வேளாண் பெருமக்களின் வருமானம் வெகுவாக உயர்ந்து, கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் உரிமைகளை காப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதும் உறுதியுடன் செயல்படும்.

என்னையும், இந்த அரசையும் பொருத்தவரை, பிறரைப் போல அரசியலுக்காக உள்ளத்தில் ஒன்றை வைத்துக் கொண்டு, வெளியில் ஒன்றைப் பேசுபவர்கள் அல்ல நாங்கள். விவசாயிகளின் பிரச்சினைகள் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை ஆராய்ந்து, முறையான நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கண்டு வருகிறோம்.

உதாரணத்திற்கு இந்த பாதுகாக்கப்பட்ட காவேரி டெல்டா வேளாண் மண்டலத்திற்கான அறிவிப்பினை கடந்த 9ஆம் தேதி நான் வெளியிட்டேன். அதற்குப் பிறகு, பத்தே நாட்களில் பல சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து, அதற்கான சட்டத்தினைக் கொண்டு வந்து இந்த அவையில் அறிமுகப்படுத்தி உள்ளோம். இவ்வாறான எங்களது நடவடிக்கைகளை மக்கள் கூர்ந்து கவனித்து வருகிறார்கள். எனவே, எப்போதும் மக்கள் எங்களுடனே இருப்பார்கள்.

வேளாண் பெருமக்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் இந்த சட்டம் வரலாற்று சிறப்புமிக்க சட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, பல்வேறு சந்தேகங்களை எழுப்பி இருக்கின்றார்கள். 10ஆம் தேதி கடிதத்திற்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் என்ன தகவலை தெரிவித்தார்கள் என்று கேட்டார்கள். அதை நான் என்னுடைய பதிலிலே தெரிவித்திருக்கின்றேன். அதேபோல பழைய திட்டங்கள் தொடருமா என்று கேட்டு இருக்கின்றார்கள். அந்த திட்டங்கள் தொடர்வது பற்றி இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். நாங்கள் சட்ட வல்லுநர்களோடு கலந்து ஆலோசிக்கின்ற போது, பழைய திட்டங்களை தடை செய்தால் பல்வேறு சட்ட சிக்கல்கள் ஏற்படும் என்ற கருத்தை தெரிவித்த காரணத்தினாலே, முதலில் இச்சட்டமுன்வடிவை நாம் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக இந்த சட்டமுன்வடிவை தாக்கல் செய்திருக்கின்றோம். அதேபோல அதிகார அமைப்பு குறித்து சொல்லி இருக்கின்றீர்கள். அந்த அதிகார அமைப்பை பொறுத்தவரையில், ஒரு வருடம் எம்.எல்.ஏ., எம்.பி., அவற்றில் இடம் பெறுவார்கள் என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். அப்பகுதியை சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ ஓர் ஆண்டு காலத்திற்கு அல்லது அவரது பதவிகாலம் முடியும் வரையோ இதற்கு எது முந்தையதோ, அதுவரையில் பதவியில் இருப்பார். அதற்காகத்தான் ஒரு வருடம் என்று குறிப்பிட்டு இருக்கின்றோம். அவர்கள் அந்த பதவியில் உறுப்பினர்களாக இடம் பெற்றவுடன் தேவைப்படின் நீட்டித்து கொடுக்கலாம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

“இரவு பகல் பாராமல் இரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைப்பவர்கள் விவசாயிகள். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகளுடைய நிலத்தை விற்க முடியாது என்று நாம் சட்டத்திலே கொண்டு வந்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்ற அடிப்படையிலே அதை தவிர்த்திருக்கின்றோம்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

அதேபோல இந்த டெல்டா மாவட்டங்களில் திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் மாவட்டங்கள் விடுபட்டதாக இங்கே தெரிவித்தார்கள். திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்கள் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. ஆகையால் அவற்றை எடுத்துக்கொள்ள முடியவில்லை. இப்பகுதிகள் எல்லாம் பாதிப்பிற்கு உள்ளாகவில்லை. ஆகவே தான், இந்த திட்டத்திலே எடுத்துக்கொள்ள முடியவில்லை என்பதையும், இந்த சட்டமுன்வடிவில் கொண்டு வரவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். டெல்டா மாவட்டங்களிலே தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் தான் முழுமையாக இருக்கின்ற டெல்டா மாவட்டங்கள். கடலூர் மாவட்டத்தில் ஒரு பகுதி, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு பகுதி, அந்தப் பகுதிகளை நாங்கள் குறிப்பிட்டு இருக்கின்றோம். இந்த மூன்று மாவட்டங்கள் முழுமையாக டெல்டா பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பிரதிநிதிகளை இந்த அதிகார அமைப்பில் உறுப்பினர்களாக இடம்பெற செய்வோம்.

அதேபோல, ரியல் எஸ்டேட் பற்றி குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களை தேவைப்படின் விற்பனை செய்ய ஏதுவாக தான் இச்சரத்து இச்சட்டமுன்வடிவில் சேர்த்துக் கொள்ளவில்லை. ஏனென்றால், இரவு பகல் பாராமல் இரத்தத்தை வியர்வையாக சிந்தி உழைப்பவர்கள் விவசாயிகள். ஆகவே, அப்படிப்பட்ட விவசாயிகளுடைய நிலத்தை விற்க முடியாது என்று நாம் சட்டத்திலே கொண்டுவந்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு விடுவார்கள் என்ற அடிப்படையிலே அதை தவிர்த்திருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, இந்த அமைப்பு அதிகாரம் படைத்த அமைப்பு, இதனை வேளாண் மண்டலமாக அறிவித்ததே, வேளாண்துறையின் மூலமாக கொண்டுவரப்பட்ட சட்டம். அதனால் இந்த சட்டத்திற்கு முழுமையான அதிகாரம் இருக்கின்றது என்ற அடிப்படையிலே தான் வேளாண்துறையின் மூலமாக இந்த சட்டத்தை கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டம், பாதுகாப்பான சட்டம், யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. ஆகவே, இந்த சட்டமுன்வடிவை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றி தர வேண்டும் என்று மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கருணையும் தகுதியும்

மிகக் கொடூரமான குற்றவாளிகளையும் மன்னித்து, விடுவித்து விடும் மனப்பாங்கு ஒரு காவல்துறை அதிகாரியிடம் இருந்தது. கொடுங் குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் மீதும் வழக்குப் பதிவு செய்யாமல், அவர்கள் திருந்த வாய்ப்பளிப்பது தான் அகிம்சை என்று அவர் நினைத்து இருந்தார். பல கொள்ளைகளை நிகழ்த்திய கடும் குற்றவாளி ஒருவன் அவர் முன் நிறுத்தப்பட்டான். அதற்கான தகுந்த ஆதாரங்களும் காட்டப்பட்டன. இருப்பினும், அந்தக் குற்றவாளிக்கும் கருணை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில், குற்றவாளிக்கு அறிவுரை வழங்கி, அவனை அனுப்பிவிட்டார். ஒரு நாள் அத் திருடன் அந்தக் காவல்துறை அதிகாரியின் வீட்டிற்கே திருடச் சென்றான். நகைகளையும், பொருட்களையும் திருடும்போது, அதிகாரியின் மனைவி அங்கு ஏற்பட்ட சத்தத்தால் விழித்துக் கொண்டுவிட்டார். அதைப் பார்த்த குற்றவாளி, சற்றும் தயங்காமல், அதிகாரியின் மனைவியையே கொன்றுவிட்டு தப்பித்துவிட்டான்.

எனவே, தகுதியானவர்களிடம்தான் கருணை காட்ட வேண்டும்.

– புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உரைகளில் மலர்ந்த முத்தான கதைகள் எனும் நூலிலிருந்து...

ரூ.565 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் அணையின் உபரிநீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி, இருப்பாளி ஊராட்சியில் நடைபெற்ற மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை–04.03.2020

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி. நான் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபொழுதும், 2011இல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அமைச்சரவையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக பணியாற்றிய காலத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குபெற்றிருக்கின்றேன். ஆனால், எந்த நிகழ்ச்சியிலும் கிடைக்கப் பெறாத மகிழ்ச்சி எனக்கு இந்த நிகழ்ச்சியில் கிடைத்திருக்கிறது.

இந்தப் பகுதியானது வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற பகுதி. எனக்குத் தெரிந்தவரை இங்குள்ள 100 ஏரிகளும் இதுவரை வறண்டுதான் இருந்திருக்கின்றன. இதுபோன்ற வறண்ட ஏரிகளில் பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீரை நிரப்ப வேண்டுமென்பதற்காக சுமார் 565 கோடி ரூபாயில் இந்தத் திட்டம் இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இன்னும் 11 மாதங்களில் நிறைவேற்றப்பட்டு, மேட்டுப்பட்டி ஏரி நிரம்பி, இந்தப் பகுதியில் வேளாண் பணிகள் சிறக்கும், குடிநீர்ப் பிரச்சினை முழுவதும்

தீர்க்கப்படும். சொன்னதைச் செய்கின்ற ஒரே அரசு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு. திட்டத்தை அறிவித்துவிட்டு மக்களை ஏமாற்றுகிற அரசு எங்கள் அரசல்ல. 2011இல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்தும், அவர் மறைவிற்குப் பிறகும் அவர் கண்ட கனவை எங்களுடைய அரசு தொடர்ந்து நனவாக்கிக் கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் தொடங்கிய திட்டங்கள் அனைத்தையும் சிந்தாமல், சிதறாமல் மக்களிடம் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, அம்மா அவர்களால் அறிவிக்கப்படாத, அம்மா அவர்கள் மனதில் இடம்பெற்ற திட்டங்களையும், அம்மா கண்ட கனவையும் எங்கள் அரசு இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

கிராமங்களில் வாழ்கின்ற ஏழை மக்களின் வாழ்வு செழிக்க வேண்டுமென்றால், கிராமப் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச்செய்ய வேண்டுமென்றால், அதற்கு நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டுமென்றும், அதற்குநீர் மேலாண்மைத் திட்டத்தை நாம் முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களிடம் சொல்வார்கள். துரதிருஷ்டவசமாக அம்மா மறைந்துவிட்டார்கள். அம்மா மனதில் துளிர்த்த எண்ணங்கள் எங்களுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஒன்றே முக்கால் ஆண்டுகளுக்கு முன்பு, கடலில் வீணாகக் கலக்கின்ற மழைநீரை சேமிப்பதற்காக திட்டம் வகுப்பதற்கு, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றக்கூடிய திறமைமிக்க 2 தலைமைப் பொறியாளர்கள், 3 கண்காணிப்புப் பொறியாளர்கள் என 5 ஓய்வுபெற்றப் பொறியாளர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்க நான் ஆணையிட்டேன். அக்குழுவினருடன் பலமுறை ஆலோசனைகள் நடத்தப்பட்டு, அதனடிப்படையில் ரூபாய் 565 கோடியில் வறண்ட 100 ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்புகின்ற திட்டம் வகுக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர்கள் மூலமாக இன்றைக்கு செயல்படுத்தியிருக்கின்றோம். ஒரு திட்டம் தீட்டுகின்றபொழுது, அதனை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றவேண்டும். திட்டம் தீட்டுவது எளிது, அதை நடைமுறைப்படுத்துவது கடினம். திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் முடிக்க வேண்டுமென்பதற்காக நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி, இத்திட்டம் மிகச்சிறப்பாக இன்றைக்கு தமிழகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், இது எங்களுடைய அரசு எடுத்த நடவடிக்கை என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு, குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கி, பரிட்சார்த்த முறையில் 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதில் 1,513 ஏரிகளில் பணிகள் நிறைவுபெற்றன. இது ஒரு சிறப்பான திட்டமாக மக்கள், விவசாயிகளிடத்தில் வரவேற்பைப் பெற்ற காரணத்தினால், விவசாயிகள் இத்திட்டத்தை முழுமையாக விரிவுபடுத்த வேண்டுமென்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 40 ஆயிரம் ஏரிகளில் 14 ஆயிரம் பொதுப்பணித் துறையின் மூலமாக பராமரிக்கப்படுகிறது, மீதமுள்ள 26 ஆயிரம் ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக பராமரிக்கப்படுகின்றன. ஏரிகள், குட்டைகள், ஊரணிகள் என்று பிரித்து பல்வேறு நீர்நிலைகள் இருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற சுமார் 40 ஆயிரம் ஏரிகளும் படிப்படியாக தூர்வாரப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, மதகுகள் சீரமைக்கப்பட்டு, வரப்பு வாய்க்காலை சரிசெய்து, உபரி நீரைச் சேமிக்க, இரண்டாவது முறையாக ரூபாய் 329 கோடி ஒதுக்கப்பட்டு, 29 மாவட்டங்களில் இத்திட்டத்தை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டத்தில் 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு 1,439 பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன.

2019–2020இல் மேலும், மாவட்டங்களில் உள்ள பிற ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, சுமார் 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 1,829 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு, 949 பணிகள் முடிவுற்றன, எஞ்சிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் குடிமராமத்துத் திட்டம், முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்புடன் நிறைவேற்றப்படுகிறது.

சொன்னதைச் செய்கின்ற ஒரே அரசு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு. திட்டத்தை அறிவித்துவிட்டு மக்களை ஏமாற்றுகிற அரசு எங்கள் அரசல்ல.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஸ்டாலின் அவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு, குடிமராமத்துத் திட்டத்திலே முறைகேடு நடைபெற்றதாக ஒரு தவறான செய்தியை, பொய்யான செய்தியை மக்களிடத்திலே பரப்பி வருகிறார், அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்தக் குடிமராமத்துத் திட்டத்தை முழுக்க முழுக்க விவசாயிகளிடத்திலே ஒப்படைக்கிறோம், விவசாயிகள் தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள் ஆழப்படுத்தப்படுவதோடு, ஏரிகளில் அள்ளப்படுகின்ற வண்டல்மண் அந்த விவசாயிகளின் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுகிறது. இது அற்புதமான திட்டம். திரு.ஸ்டாலின் அவர்களே, தயவுகூர்ந்து, தெரிந்தால் பேசுங்கள், விவசாயிகளை தயவுசெய்து குறை கூறாதீர்கள். இந்தத் திட்டம் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் வரவேற்புடன் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் ஏரிகள் தூர்வாரப்பட்டதன் விளைவாக, ஏரிகள் நிறைந்து, கோடை காலங்களில் நிலத்தடி நீர் உயர்ந்து வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீரும், குடிப்பதற்குத் தேவையான நீரும் கிடைக்கிறது. இந்த அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்த அரசு எங்களுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஓடை மற்றும் நதியின் வழியாக வீணாக கடலில் கலக்கிறது. எனவே தடுப்பணைகள் மூலம், அந்த மழைநீர் முழுவதையும் சேமித்து வைத்து, நிலத்தடி நீர் உயர்த்தப்பட வேண்டுமென்று அதிகாரிகளோடு கலந்தாலோசித்து முடிவெடுத்து, மூன்றாண்டுகால திட்டமாக அதனை நாங்கள் அறிவித்தோம். அதன் அடிப்படையில் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது, தற்பொழுது ரூ.650 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. **எங்கெங்கெல்லாம் ஓடையின் வழியாக, நதியின் வழியாக நீர் செல்கின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணைகள் கட்டப்படுகிறது.** ஆதனூர் குமாரமங்கலத்தில் சுமார் ரூ.400 கோடி செலவில், தடுப்பணை கட்டப்படுகிறது. அதில் 30 சதவீதப் பணிகள் நிறைவடைந்துள்ளன. காவேரி உபரிநீர் கடலிலே கலப்பதை தடுப்பதற்காக, ஆங்காங்கே கதவணைகள் கட்டுதல், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாப்பதற்காக தடுப்பணைகள் அமைத்தல் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு.

இன்றைக்கு தமிழகத்திலே சுமார் 60 சதவீதம் பேர் வேளாண் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான நீரை எப்படி வழங்க வேண்டும் என்பதை திட்டமிட்டு, இன்றைய தினம்

குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள் ஆழப்படுத்தப்படுவதோடு, ஏரிகளில் அள்ளப்படுகின்ற வண்டல்மண் அந்த விவசாயிகளின் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுகிறது. இது அற்புதமான திட்டம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

முதற்கட்டமாக, பரிட்சார்த்த முறையிலே, சேலம் மாவட்டத்தில், 565 கோடி ரூபாய் செலவில் 100 வறண்ட ஏரிகளை நிரப்புவதற்கான சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, இருப்பாளி ஊராட்சி, மேட்டுப்பட்டி ஏரியில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள வறட்சியான பகுதிகளை செழிப்பாக்குவதற்கான திட்டம் தான் இந்தத் திட்டமாகும். விவசாயிகள் செழிப்போடு வாழ வேண்டும், விவசாயத் தொழிலாளிக்கு நிரந்தர வேலைவாய்ப்பு பெற்றுத் தரவேண்டும் என்பதுதான் எங்கள் இலட்சியம், அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய முதல் பணி என்ற நோக்கத்தில் இன்றைய தினம் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை, அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டுகின்றபொழுது, திறந்து விடப்படும் உபரிநீர் கடலில் வீணாக கலக்கிறது. அந்த உபரிநீரை எடுத்து 100 ஏரிகளிலும் நிரப்பப்படுகிறது. எங்கே தண்ணீர் எடுக்கப்படுகிறது, எங்கே மின்மோட்டார் மூலமாக தண்ணீரை சேமித்து அதிலிருந்து எப்படி மின்மோட்டார் மூலமாக மற்ற ஏரிகளுக்கு நிரப்பப்படுகின்றது என்பதை தெளிவாகச் சொன்னோம். நாங்கள் செய்கின்ற திட்டங்களை முழுமையாக நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எதிர்க்கட்சியினர் எல்லாம் வாய்ச்சொல் வீரர்கள், நாங்கள் அப்படியல்ல, செயல் வீரர்கள், செயலிலே நாங்கள் காட்டிக் கொண்டிருக்கின்றோம். 11 மாதங்கள் கழித்துப் பார்க்கின்றபொழுது, முதலமைச்சர் இருப்பாளியிலே பேசினார், அதற்கு இன்றைக்கு செயல்வடிவம் கொடுத்திருக்கின்றார், நாங்கள் கண்ட காட்சி கனவல்ல, அது நனவாக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி உங்கள் மனதில் இடம்பெற வேண்டும். நான் இந்த அறிவிப்பை வெளியிட்டவுடன், நமது பொதுப்பணித் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்கள் உட்பட அனைத்து பொறியாளர்களும் ஒருங்கிணைந்து, இரவு, பகல் பாராமல் வெகு சிறப்பாக செயல்பட்டது பாராட்டுக்குரியது. அதேபோல், நீர் மேலாண்மைத் திட்டத்திற்கு அமைக்கப்பட்ட பொறியாளர்கள் இணைந்து செயல்பட்டு, இந்த 100 ஏரிகளில் நீரை நிரப்புவதற்கான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு, விவசாயிகளின் எண்ணங்களை பிரதிபலிப்பதற்காக, வடிவமைத்துக் கொடுத்த பணி இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கிறது. அதற்காக உங்கள் சார்பாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையிலும், இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் பொதுப்பணித் துறை பொறியாளர்களுக்கு மனமார, உளமாற, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இத்திட்டத்தை நிறைவேற்ற நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு துணைநின்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் மக்களின் சார்பாக, வேளாண் பெருமக்கள் சார்பாக, எனது சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வளவு திட்டங்கள் போட்டாலும், அந்தத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திலே நிறைவேற்றக்கூடிய பணி அதிகாரிகளிடத்திலே தான் இருக்கிறது. எனவே, நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்றுவரை ஐ.ஏ.எஸ் அதிகாரி முதல் அனைத்துத் துறை அதிகாரிகளும் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எனவேதான், அரசு போடுகின்ற திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றப்படுகின்றது என்பதை நான் மனமார உளமாற சொல்லிக்கொள்கிறேன். அதனால் தான், எதிர்க்கட்சிக்காரர்கள், எதுவும் பேசமுடியாமல் இன்றைக்கு தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள். **ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் என்று சொன்னால், ஒன்று நாம் நடத்தும் அரசு, மற்றொன்று அதிகாரிகள். இரண்டு சக்கரமும் சரியாக இருந்தால்தான் இலக்கினை அடைய முடியும். இப்பொழுது இரண்டு சக்கரமும் சரியாக இருக்கின்றது, இலக்கை நோக்கி தமிழகம் சென்று கொண்டிருக்கின்றது.** எனவேதான், துறைகள் வாரியாக பல்வேறு விருதுகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு, இந்தியாவிலேயே அதிகமாக தேசிய விருதுகளை பெற்ற முதல் மாநிலம் தமிழ்நாடு. தமிழகத்தில் என்ன நடைபெற்றது என்று சில எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்கிறார்கள். இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், துறைகள் வாரியாக சிறப்பான திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்கள் பயன்பெற்றதன் விளைவாக, இந்தியாவில் தமிழ்நாடு முதன்மையான மாநிலமாக விளங்குகின்ற காரணத்தினால்தான் மத்திய அரசு பல்வேறு விருதுகளை வழங்கிக் கொண்டிருக்கிறது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் வேண்டுமென்றே திட்டமிட்டு, அரசின் மீது தவறான குற்றச்சாட்டுகளை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு குற்றச்சாட்டுகள் சொன்னாலும் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. எங்கள் மடியிலே கனமில்லை, அதனால் வழியிலே பயமில்லை, எங்களுடைய மனம் திடமாக இருக்கின்றது, எடுக்கின்ற முடிவும் திடமானது. அந்த திடமான எண்ணத்தின் அடிப்படையில், நிறைய திட்டங்களை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மக்கள் தான் எங்களுக்கு

எஜமானர்கள், மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய இலட்சியம், அந்த இலட்சியப் பயணத்திலே நாங்கள் தொடர்ந்து வெற்றி பெறுவோம் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

விவசாய பெருமக்களின் நலன் கருதி மேட்டூர் அணையின் உபரிநீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டப் பணிக்கு, இருப்பாளி ஊராட்சியில் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்தில் சரபங்கா வடிநிலத்தில் உள்ள 100 வறண்ட ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நீர் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, சுமார் ரூ.565 கோடி மதிப்பிலான பணியை செயல்படுத்தும் வண்ணம் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேட்டூர் அணையின் முழு கொள்ளளவான 120 அடியை எட்டும் போது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள உபரிநீரை கால்வாய் மூலம் திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையத்திற்கு கொண்டு செல்லப்படும். திப்பம்பட்டி பிரதான நிலையத்தில் ஒரு புறத்தில் 940 குதிரைத் திறன் கொண்ட 10 மின் மோட்டார்கள் மூலம் நீரேற்றம் செய்து 2.2 விட்டமுள்ள குழாயின் வழியாக விநாடிக்கு 126 கன அடி வீதம் 12 கி.மீ தூரத்தில் உள்ள எம்.காளிப்பட்டி ஏரிக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 23 ஏரிகளில் தண்ணீர் நிரப்பப்படும்.

அதேபோல, வெள்ளாளபுரம் ஏரியில் அமைக்கப்படும் துணை நீரேற்று நிலையம் மூலம் மொத்தம் 640 குதிரைத் திறன் கொண்ட 4 மின் மோட்டார்கள் மூலம் 1.6 மீட்டர் விட்டமுள்ள குழாயின் வழியாக 5.50 கி.மீ தூரத்திலுள்ள வடுகப்பட்டி அருகே அமைக்கப்படும் கீழ்நிலை நீர்த் தொட்டிக்கு விநாடிக்கு 88 கன அடி வீதம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து 14 ஏரிகளில் நீர் நிரப்பப்படும். இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் 9 ஒன்றியங்களிலுள்ள 12 பொதுப்பணித் துறை ஏரிகள் மற்றும் 88 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் குட்டைகள் என மொத்தம் 100 ஏரிகளின் பாசனப் பரப்பான 4,238 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும். அதுமட்டுமல்ல, அந்த ஏரிகளை நிரப்புகின்றபொழுது, இப்பகுதியிலுள்ள கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் ஆகியவற்றின் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இத்திட்டத்திற்கு தேவைப்படும் மொத்த நீரின் அளவான 555 மில்லியன் கன அடி நீரானது, விநாடிக்கு 214 கன அடி வீதம் 30 நாட்களுக்கு வழங்கும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேட்டூர் அணையானது 13.08.2019 முதல் 04.03.2020 வரை 205 நாட்கள், 100 அடிக்கு குறையாமல் நிரம்பியிருக்கிறது, இப்பொழுது 100 அடிக்கு மேல் தண்ணீர் இருக்கிறது. 2019ஆம் ஆண்டு 4 முறை மேட்டூர் அணை அதன் அதிகபட்ச கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது. மேலும் 2019ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் தொடர்ந்து 120 அடியிலேயே 42 நாட்கள் இருந்தது. ஆகவே, நமக்குத் தேவையான நீரை முழுமையாக கொண்டுவந்து நிரப்பிவிடலாம். சென்ற ஆண்டு மொத்தமாக 79 நாட்கள் 120 அடி வரை தண்ணீர் இருந்தது.

இதில் பயன்பெறுகின்ற ஏரிகள் 100 ஏரிகள் காளிப்பட்டி குட்டை, ராயப்பன் ஏரி, சின்ன ஏரி, மானாத்தாள் ஏரி, டி.மாரமங்கலம் ஏரி, பெரியேரிப்பட்டி ஏரி, மல்லிக்குட்டை

ஏரி, அமரகுந்தி காத்தான் ஏரி, அமரகுந்தி புது ஏரி, கசுவாரெட்டிப்பட்டி ஏரி, செட்டி ஏரி, பெரிய காடம்பட்டி ஏரி, தாரமங்கலம் ஏரி, சேடப்பட்டி குட்டை, ஆரூர்ப்பட்டி ஏரி, குறுக்குப்பட்டி, துட்டம்பட்டி, கொலந்தம்பட்டி ஏரி, வெள்ளாளபுரம் ஏரி, செங்குட்டை ஏரி, அரசன்குட்டை, ஈஜான் ஏரி, நாகசமுத்திரம் ஏரி, ஆவனிப்பேரூர் பெரிய ஏரி, ஏகாபுரம் ஏரி, சின்ன ஏரி, வழையசெட்டிபட்டி ஏரி, கஸ்பா ஏரி, பாப்பம்பட்டி புது ஏரி, கச்சுப்பள்ளி ஏரி, கோர்னம்பட்டி ஏரி, அய்யம்பாளையம் ஏரி, கொருக்குப்பட்டி ஏரி, கொல்லப்பட்டி ஏரி, ராமகவுண்டன் குட்டை, கண்ணந்தேரி கஸ்பா ஏரி, கொங்கணாபுரம் புது ஏரி, பாவாய் குட்டை, செங்கன் குட்டை, எட்டிக்குட்டை, வண்ணான் குட்டை, மாங்குட்டப்பட்டி பெரிய ஏரி, மாங்குட்டப்பட்டி சின்ன ஏரி, பாளப்பட்டி குட்டை, நல்ல தண்ணீர் குட்டை, பஞ்சாங்க குட்டை, பெரிய ஏரி, மூலைவிட்டான் குட்டை, குட்டை, குன்டன் ஏரி, கட்சாரையா குட்டை, ஆடிகாட்டு குட்டை, பெரிய ஏரி, குட்டை, குட்டை, ராகாஸ் குட்டை, பழனி கவுண்டன் குட்டை, ராஜா கவுண்டன் குட்டை, நொட்ட காரன் குட்டை, நல்ல தம்பி கவுண்டன் குட்டை, குப்பையா கவுண்டன் குட்டை, தொப்பம் குட்டை, காட்டன் குட்டை, வேப்பம் குட்டை, காளி கவுண்டன் குட்டை, அட்டகாரன் குட்டை, ஆச்சம்பள்ளி ஏரி, புங்க ஏரி, எடப்பாடி பெரிய ஏரி, எடப்பாடி சின்ன குட்டை, நங்கவள்ளி குட்டை / பிள்ளு குட்டை, வனவாசி ஏரி, கனக்கன் ஏரி, வாத்தியப்பட்டி ஏரி, வைரன் ஏரி, செலவடை ஏரி, ரங்கப்பன் ஏரி / கஞ்சப்பன் செட்டி ஏரி, குப்பம்பட்டி குட்டை, கோட்டமேடு வைத்தியர் குட்டை, ஜலகண்டாபுரம் ஏரி, காட்டம்பட்டி ஏரி, கட்டிநாய்கன் பட்டி ஏரி, இலவம்பட்டி ஏரி, பணங்கொட்டை ஏரி, அய்யன் ஏரி, அம்மாபாளையம் ஏரி, மேட்டுபூபட்டி ஏரி, கொட்டபுளிபாளையம் ஏரி, சர்க்கார் ஏரி, வேம்பனேரி, அம்மன் ஏரி, பொம்மசமுத்திரம் ஏரி, ஆவனிப் பேரூர் சின்ன ஏரி, குண்டியாம்பட்டி ஏரி, ஆச்சம்பட்டி ஏரி, மொன்னன்சேரி குட்டை, சித்தூர் ஏரி, ரெட்டிப்பட்டி ஏரி, பிள்ளுக்குறிச்சி ஏரி, குட்டை (Near East Bank Canal).

நான் குறிப்பிட்ட இந்த 100 ஏரிகளில் நீர் நிரப்புவதற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஒரு அரசாங்கம் எந்த அளவிற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக குறிப்பிட்டேன். **இந்த ஏரிபாசன பகுதிகளெல்லாம் அடுத்த வருடம் செழிப்போடும், உங்கள் முகமலர்ச்சியோடும் காணப்படும். வானம் பார்த்த பூமியாக இருப்பதையெல்லாம், செழிப்பான பூமியாக அரசு உருவாக்கித் தரும்** என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நஞ்சைப் புகழூர் கிராமத்தில் காவேரியாற்றின் குறுக்கே கதவணை கட்டும் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது, அந்தப் பணியும் விரைவாகத் தொடங்கவுள்ளது. எங்களுடைய கனவுத் திட்டமான காவேரி–கோதாவரி திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது, தமிழகத்திற்கு சுமார் 200 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும், அதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் இதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்தப் பணிகள் விரைவாக நிறைவு பெறும். தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு மூன்று மாநிலங்களும் இணைக்கப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இதனால் டெல்டா மாவட்டங்கள் மட்டுமன்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளும் நீர் ஆதாரம் பெறும். மேலும், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்பொழுது, காவிரிக்கரையின் இரு பகுதிகளிலும், 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள வறண்ட ஏரிகள் அனைத்தும் நீரேற்றம் மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு நிரப்பப்படும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், ரூபாய் 565 கோடி மதிப்பீட்டில் நீரேற்று பணியை துவக்கியிருக்கின்றோம். அதேபோல, இரண்டாம் கட்டமாக, வசிஷ்ட நதியில் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் அம்மா அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களிடம் காவேரி–கோதாவரி இணைப்பிற்கு பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று நான் கடிதம் மூலமாக கேட்டிருந்தேன், அவரும் சம்மதித்துள்ளார். எனவே, முதற்கட்டமாக, இன்றையதினம் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை

இந்த ஏரிப்பாசன பகுதிகளெல்லாம் அடுத்த வருடம் செழிப்போடும், உங்கள் முகமலர்ச்சியோடும் காணப்படும். வானம் பார்த்த பூமியாக இருப்பதையெல்லாம், செழிப்பான பூமியாக அரசு உருவாக்கித் தரும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

அமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களை சந்தித்து என்னுடைய கடிதத்தை அவர்களிடம் வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் அவர்களையும் சந்திப்பதற்கு நேரம் கேட்டுள்ளோம், அவர்களும் விரைந்து நேரம் வழங்குவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, மூன்று முதலமைச்சர்களும் ஒன்றாக இணைந்து, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவுத் திட்டமான இத்திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து ஆய்வு செய்து, அதனை மத்திய அரசிடம் சமர்ப்பித்து நிறைவேற்றுவோம். இத்திட்டத்தின் மூலம் வரும் தண்ணீரை கரூர் கதவணையில் தேக்கி, அங்கிருந்து, கிட்டத்தட்ட 14 ஆயிரம் கோடி ரூபாயில் வெட்டப்படும் பிரதான கால்வாய்கள் மூலமாக திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த வறண்ட பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு நீர் வழங்கப்படும். இதனால், தென் மாவட்டங்கள் முழுவதும் செழிக்கும், இதுதான் எங்கள் இலட்சியம். அம்மா அவர்கள் எண்ணியதை நாங்கள் நனவாக்கிக் கொண்டிருக்கின்றோம். காவேரி–கோதாவரி இணைப்புத் திட்டம் சுமார் 64,000 கோடி ரூபாயில் நிறைவேற்றப்படும் என்று மத்திய அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். **மத்தியில் இணக்கமான உறவு இருக்கின்ற காரணத்தினால்தான் பல்வேறு பணிகள் சாத்தியமாக இருந்து கொண்டிருக்கிறது. நல்லது நடக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.** நிச்சயமாக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியோடும், வேளாண் பெருமக்களின் ஆசியோடும் இந்தத் திட்டம் நிறைவேறும்.

அதுமட்டுமல்ல, 100 ஏரிகளில் பெரும்பாலான ஏரிகள் ஊராட்சி ஒன்றியத்திற்கும், சில ஏரிகள் பேரூராட்சி, நகராட்சி, பொதுப்பணித்துறைக்கும் உட்பட்டவையாக இருப்பதினால், இவற்றையெல்லாம் பொதுப்பணித் துறையின் கீழ் கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் என்று உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதையும் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். இந்த 100 ஏரிகளிலும், நீர் நிரப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த ஏரிகளை முழுமையாக சீரமைக்கத் தேவையான நிதியைக் கொடுப்பதற்கு அம்மாவின் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரை பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், நான் எடப்பாடி சட்டமன்ற வேட்பாளராக கழகத்தின் சார்பாக போட்டியிட்டபொழுது, பல்வேறு பிரச்சினைகளை மக்கள் என்னிடத்தில் சுட்டிக்காட்டினார்கள், கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். எனவே, ஏழை, எளிய மக்கள் நிறைந்த பகுதியில் குறைந்த கட்டணத்தில் மாணாக்கர் உயர்கல்வி படிக்க கல்லூரி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று, 2011ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் முதல் கோரிக்கையாக வைத்தேன். உடனே, அம்மா அவர்கள் ஒரு புதிய அரசுக் கலைக் கல்லூரியைக் கொடுத்தார்கள். சுமார் இரண்டாயிரம் மாணாக்கர் உயர்கல்வி பயில்கின்றனர். உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது. பாலிடெக்னிக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஏற்ப, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி தொகுதிகளுக்கு மத்தியில் நங்கவள்ளியில் ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் பாலிடெக்னிக் கல்லூரி உருவாக்கி, ஆயிரக்கணக்கானவர்கள் பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம். கொங்கணாபுரம் மக்களின் கோரிக்கையை ஏற்று, எட்டிக்குட்டைமேட்டில் பி.எட். கல்லூரி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் சிறக்க, எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று

உருவாக்கப்பட்டு வருகிறது, அது விரைவில் திறக்கப்படும். அதற்குத் தேவையான மின்சார வசதிக்காக துணை மின்நிலையம் ஒன்று அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். **நங்கவள்ளி, எடப்பாடி, கொங்கணாபுரம் என மூன்று ஒன்றியங்களிலும் மாதிரிப் பள்ளிகள் வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் வாழ்கின்ற ஏழைக் குழந்தைகளும் ஆங்கிலக் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம்.**

பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கிடைப்பதற்கு ரூபாய் 21 கோடி ரூபாயில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள். இப்பொழுது மேட்டூரில் 30 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எடப்பாடியில் ரூபாய் 4 கோடியில் கூடுதல் மருத்துவமனைக் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளதோடு, சுமார் 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் வாங்கிக் கொடுத்து சிறப்பான சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறைக்கான கோட்ட அலுவலகம் உருவாக்கித் தந்துள்ளோம். எடப்பாடியில் மாவட்டக் கல்வி அலுவலகம் கொடுத்துள்ளோம். அம்மா அவர்கள் எடப்பாடி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்த, புறவழிச்சாலை திறக்கப்பட்டு மக்கள் எளிதாகச் சென்று வருகின்றனர். ஜலகண்டாபுரத்தில் புறவழிச் சாலை அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. தாரமங்கலத்தில் புறவழிச்சாலை அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக்காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

எடப்பாடி–மகுடஞ்சாவடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி பகுதி மக்களுக்கு தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட காவிரித் தண்ணீர் வழங்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் சொன்னதை செயல்வடிவாக்கியுள்ளோம். கூடுதலாக, விடுபட்டுள்ள கிராமங்களுக்கும் மேல்நிலைத்தொட்டி அமைத்து குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 158 கோடி மதிப்பீட்டில் எங்கள் அரசால் நிறைவேற்றப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கூடுதலாக, விடுபட்டுள்ள கிராமங்களுக்கும் மேல்நிலைத்தொட்டி அமைத்து தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, அதிகாரிகளே உங்களைச் சந்தித்து மனுக்களைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள முதன்முதலில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, நங்கவள்ளியில் துவக்கினேன். இந்தத் திட்டம் சிறப்பானதென்று தமிழ்நாடு முழுவதும் மக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சேலம் மாவட்டத்தில் மட்டும் 58,218 மனுக்கள் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்து, தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எடப்பாடியைப் பொறுத்தவரை, பெறப்பட்ட 4,154 மனுக்களில் 3,616 மனுக்களுக்கு எங்களுடைய அரசால் தீர்வு காணப்பட்டு, 528 மனுக்கள் மறுபரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. மனுக்கள் பெற்று மூன்றே மாதத்தில் குறைகள் தீர்க்கப்பட்டுள்ளனவென்றால், இந்த அரசு எந்தளவிற்கு நிருவாகத் திறமைமிக்க அரசு என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

சேலம் மாவட்டம் மட்டுமன்றி தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பாலங்கள் கட்டிக் கொடுத்துள்ளோம், சாலைகள் அமைத்துக் கொடுத்துள்ளோம், சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. பேருந்து வசதிகள் செய்து கொடுத்துள்ளோம். சேலத்திலிருந்து பெங்களூரு, கோயம்புத்தூர் போன்ற நகரங்களுக்கு நேரடியாகச் செல்வதற்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

சங்ககிரி, வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் விரைவாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். நாமக்கல் மாவட்டத்திற்கும் காவேரியின் உபரி நீரை நீரேற்று மூலமாகக் கொண்டு சென்று ஏரிகளில் நீர் நிரப்பும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஒரே அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக்கின்றோம்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

அமெரிக்கன் படைப்புழு தாக்கி மக்காச்சோளப் பயிர் பாதிக்கப்படுவதைத் தடுக்க ரூபாய் 186.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள அரசு எங்களுடைய அரசு. இந்த ஆண்டு ரூபாய் 47.64 கோடி மதிப்பீட்டில் பூச்சிக்கொல்லி மருந்தை அரசே தெளித்ததன் விளைவாக விவசாயிகள் அதிக மக்காச்சோள மகசூல் பெற்றுள்ளனர். தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2,962 கோடி ரூபாய் ஒதுக்கி, செயல்படுத்த அரசு முடிவெடுத்துக் கொண்டிருக்கிறது. 3,746 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. 966 தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. பயிர்காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் 36.44 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 7,618 கோடி இழப்பீட்டுத் தொகை பெற்றுத் தந்து, இந்தியாவிலேயே விவசாயிகளுக்கு அதிகமான இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தந்த ஒரே அரசு எங்கள் அரசுதான். சுமார் 34 இலட்சம் விவசாயிகளுக்கு ரூபாய் 22 ஆயிரம் கோடி வட்டியில்லா பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ரூபாய் 304 கோடி வட்டி ஊக்கத் தொகை கொடுக்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனத் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்றது, இதன்மூலம் ரூபாய் 1,582 கோடி மானியமாக வழங்கப்பட்டு சுமார் 3.25 இலட்சம் விவசாயிகள் இதன் மூலம் பயன் பெற்றுள்ளனர். உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 681 கோடி நிதி ஒதுக்கப்பட்டு 8.81 இலட்சம் விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். சிறு, குறு விவசாயிகளுக்காக, கடந்த 2 ஆண்டுகளில் கூட்டுப்பண்ணைத் திட்டம் மூலம் 20 ஆயிரம் குழுக்கள் அமைக்கப்பட்டு அதிலிருந்து 4,000 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டன. அரசு வழங்கிய மூலதன நிதியைப் பயன்படுத்தி 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பண்ணை இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, தொடர்ந்து ஐந்தாண்டு காலம் உணவு தானிய உற்பத்தியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று, இந்தியாவிலேயே உணவு தானிய உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்ற மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளதோடு அதற்காக 5 முறை தேசிய விருதான “கிருஷி கர்மான்” விருதை பெற்றுள்ளது என்பதை பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன்.

“உழவன்” கைபேசி செயலி என்ற திட்டத்தின் மூலம் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களில் விதை, உரம் இருப்பு, பூச்சிக்கொல்லி மருந்து, பயிர்க் காப்பீடு குறித்த தகவல்கள், விளைபொருட்களின் சந்தை விலை, வேளாண் இயந்திரங்களின் வாடகை மையங்கள், வானிலை, வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்கள் போன்றவற்றைத் தெரிந்து கொள்ளலாம். இவையெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக வழங்கப்பட்ட திட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆத்தூர் அருகே தலைவாசல் கூட்டு ரோட்டில் பிரம்மாண்டமாக ரூ.1,000 கோடி செலவில், 1,866 ஏக்கர் பரப்பளவில் கால்நடை பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த கால்நடை பூங்காவில் நாட்டு இன காளைகள், நாட்டு இனப் பசுக்கள், ஆடுகள், கலப்பினப் பசுக்கள் உருவாக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தரவிருக்கிறோம். ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடைப் பூங்கா அமைந்துள்ள மாநிலம் என்ற பெயரை பெறவிருக்கின்றது.

இந்தியாவிலேயே ஒரே வருடத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை பெற்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. டெல்டா பாசன விவசாயிகளின் உரிமைக்குரலை நிலைநாட்டுவதற்காக, எங்களுடைய அரசு, டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திருக்கின்றது. வேளாண் பெருமக்களுக்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்து, வேளாண் பெருமக்கள், வேளாண் தொழிலாளர்கள் செழித்து வாழவேண்டும் என்பதே எங்களுடைய இலட்சியம். கிராமப்புற பொருளாதாரம் செழிக்கின்றபொழுது நாடு செழிக்கும். ஆகவே, மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவு, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட கனவு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா கண்ட கனவு எங்களுடைய அரசால் நனவாக்கப்படுகின்றது. இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள இத்திட்டமானது இன்னும் 11 மாத காலத்திலே நிறைவேற்றப்பட்டு, மீண்டும் இந்தத் திட்டம் துவக்குகின்ற நிகழ்ச்சியும் விரைவிலே நடைபெறும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்ற அத்தனை விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும், இந்த விழா சீரும் சிறப்புடன் நடைபெறுவதற்கு இரவு, பகல் பாராமல் பணியாற்றிய பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அனைத்துத் துறை அதிகாரிகளுக்கும், இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து விவசாயிகள் சங்க நிருவாகிகளுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

கடமை

நினைவில் நின்றவை

மக்கள் சக்தியை மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கடமை மிகப்பெரியது. விவசாயிகள், தொழிலாளர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், மலைவாழ் பெருங்குடி மக்கள், தாய்மார்கள், ஆதரவற்ற தாய்மார்கள், இவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் வாழ்கிற நாள் என்றோ அந்த நாள் தான் மகாத்மா காந்தி அடிகள் எதிர்பார்த்த நாள் என்றும், நம்மை ஆளாக்கிய அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்பார்த்த நாள் என்றும், நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எந்த ஒரு தனி அரசியல் கட்சியோ எந்த ஒரு தனி மனிதனோ அந்தப் பெரும் தலைமை நினைத்ததையெல்லாம் செய்ய முடியாது. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, நமக்குள் இருக்கிற கருத்து வேறுபாடுகளைக் கொள்கை வேறுபாடுகளாக ஆக்காமல் தெளிவான கருத்துக்களை நேர்மையான வழியில் தெரிவித்துக்கொள்கிற பாங்கை நாம் பெற்றிருக்கிறோம்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின்
எழுச்சிமிகு உரைகள் எனும் நூலிலிருந்து ...

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முழுவதும் 72 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.02.2020 அன்று, தலைமைச் செயலகம் எதிரில் மகிழம் மரக்கன்றினை நட்டு, மரக்கன்றுகள் நடும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 72ஆவது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு முழுவதும் 72 இலட்சம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பொருட்டு, மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.02.2020 அன்று, சென்னை, தலைமைச் செயலகம் எதிரில் மகிழம் மரக்கன்றினை நட்டு, திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் வனம் மற்றும் மரங்களின் பரப்பை அதிகரித்து, பசுமைப் போர்வையை மேம்படுத்தும் உன்னத நோக்கிலும், வனப்பகுதியில் மட்டுமின்றி வனத்திற்கு வெளியே இருக்கும் காலியிடங்களில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கவும் மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு **புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளையொட்டி** தமிழ்நாடு முழுவதும், கடந்த, 2012ஆம் ஆண்டு 64 இலட்சம் மரக்கன்றுகளும், 2013ஆம் ஆண்டு 65 இலட்சம் மரக்கன்றுகளும், 2014ஆம் ஆண்டு 66 இலட்சம் மரக்கன்றுகளும், 2015ஆம் ஆண்டு 67 இலட்சம் மரக்கன்றுகளும், 2016ஆம் ஆண்டு 68 இலட்சம் மரக்கன்றுகளும், 2017ஆம் ஆண்டு 69 இலட்சம் மரக்கன்றுகளும், 2018ஆம் ஆண்டு 70 இலட்சம் மரக்கன்றுகளும், 2019ஆம் ஆண்டு 71 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டு இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு பல்வேறு தரப்பினரிடையே மிகுந்த வரவேற்பு உள்ளதால், இந்த ஆண்டும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 72ஆவது பிறந்த நாளையொட்டி மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 72 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

இந்த மரக்கன்றுகளை நடும் பணியானது பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும். மேலும், இம்மரக்கன்றுகள் வனப் பகுதிகளிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், அரசு மற்றும் தனியார் அலுவலக வளாகங்களிலும், சாலையோரங்களிலும், பூங்காக்களிலும், பெரிய அளவிலான குடியிருப்புகளிலும் நடப்பட்டு பராமரித்து பாதுகாக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டு பருவநிலை மற்றும் மண்வளத்திற்கு ஏற்ற மரக்கன்றுகளான ஆல், இலுப்பை, புன்னை, மந்தாரை, புங்கன், மகிழம், பூவரசு, வேம்பு போன்ற பல்வேறு மரக்கன்றுகள் நடப்படும். இந்த மாபெரும் மரக்கன்றுகள் நடும் திட்டம், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளால் இணைத்து செயல்படுத்தப்படும்.

பட்டி, தொட்டி மக்களிடம் வார இதழ் படிக்கும் பழக்கத்தை உருவாக்கித் தந்தவர் மறைந்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்
தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரபாண்டியபட்டணத்தில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தினை திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை – 22.02.2020

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரபாண்டியபட்டணம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களின் மணிமண்டபத்தினை திறந்து வைத்து விழா பேருரையாற்றுகின்ற ஒரு நற்பாக்கியம் கிடைத்தமைக்கு முதலில் இறைவனுக்கு நன்றியை செலுத்தி, பத்திரிகை, விளையாட்டு, கல்வி, தொழில் முதலான பல்வேறு துறைகளிலும் இந்திய துணைக் கண்டத்தில் பெரும் சாதனையாளராகத் திகழ்ந்த டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் அவரது வாழ்க்கையினை போற்றிடும் வகையில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட மணி மண்டபத்தை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பான தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் சகோதரர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் திரு. க.பாண்டியராஜன் அவர்களே!

மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லூர் ராஜு அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திருமதி ராஜலட்சுமி அவர்களே! டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு.தளவாய் சுந்தரம் அவர்களே! மற்றும் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்று இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு.எஸ்.பி.சண்முகநாதன் அவர்களே! வரவேற்புரை வழங்கிய தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு.க.சண்முகம் அவர்களே!

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன் அவர்களே!

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே!

மற்றும் தினத்தந்தி நாளிதழின் இயக்குநர் மரியாதைக்குரிய திரு.சி.பாலசுப்பிரமணியன் ஆதித்தன் அவர்களே! அவர்களின் புதல்வர்கள் திரு.ஆதவன் ஆதித்தன் அவர்களே! திரு.சிவந்தி ஆதித்தன் அவர்களே! மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜிலா சத்யானந்த் அவர்களே! திரு.விஜயகுமார் அவர்களே! மரியாதைக்குரிய திரு.வசந்த குமார் அவர்களே! முன்னாள் மக்களவை துணைத் தலைவர், முன்னாள் மத்திய அமைச்சர் திரு.தம்பிதுரை அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற கடையநல்லூர் சட்டப் பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.முகமது அபுபக்கர் அவர்களே! மரியாதைக்குரிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் அண்ணன் திரு.ஜி.கே.வாசன் அவர்களே! முன்னாள் அமைச்சர் திரு.சி.த. செல்லப்பாண்டியன் அவர்களே! முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மனோஜ் பாண்டியன் அவர்களே! சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் நடிகர் திரு.சரத்குமார் அவர்களே! புதிய நீதிக் கட்சியின் தலைவர் அண்ணன் திரு.ஏ.சி.சண்முகம் அவர்களே! மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு.என்.ஆர்.தனபாலன் அவர்களே! விஜிபி குழுமத்தின் தலைவர் திரு.வி.ஜி.சந்தோஷம் அவர்களே! சமத்துவ மக்கள் கழகத் தலைவர் திரு.எர்ணாவூர் நாராயணன் அவர்களே!

மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஜான் பாண்டியன் அவர்களே! மரியாதைக்குரிய திரு.வைகுண்டராஜன் அவர்களே!

மரியாதைக்குரிய திரு.கரிக்கோல் ராஜ் அவர்களே! மரியாதைக்குரிய திரு.விக்கிரமராஜா அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்களே, நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற தொழில் அதிபர்களே, நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் திரு.பெ. மோகன் அவர்களே!

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ரா.சுதாகர் அவர்களே! ஆவின் தலைவர் திரு.சின்னத்துரை அவர்களே! மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவர் திரு.அன்புராஜ் அவர்களே! மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு.ரா.சத்யா அவர்களே! திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி செல்வி வடமலைபாண்டியன் அவர்களே! மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திருமதி அ.பிரம்ம சக்தி அவர்களே! ஊராட்சி மன்றத் தலைவர் வீரபாண்டிப் பட்டணம் திரு.மூ.எல்லமுத்து அவர்களே! ஒன்றியக்குழு துணைத் தலைவர் திரு.ரெஜிபர்ட் பர்னாந்து அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நாடார் சமுதாயத்தின் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிருவாகிகளே, தலைவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பெருந்திரளாக இடம்பெற்றிருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகையாளர்களே! மற்றும் ஊடக நண்பர்களே!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற பொறுப்பாளர்களே, அத்தனை பேருக்கும் முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டின் வளர்ச்சிக்கு உரமாக இருப்பது பல விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகங்கள் மற்றும் சாதனையாளர்களின் தன்னலமற்ற தொண்டு தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட சாதனையாளர்களில் ஒருவர் தான் மதிப்பிற்கும்,

மரியாதைக்கும் உரிய மறைந்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், நாட்டிற்காக பெரும் தொண்டாற்றி பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையிலும், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் மணி மண்டபங்களை உருவாக்கி சிறப்பு செய்து தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களில் உயர்ந்து நிற்கிறார்கள்.

அவர்கள் காட்டிய வழியில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடந்த 9 ஆண்டுகளில் 20 நினைவகங்கள், 4 தலைவர்களுக்கு முழு திருவுருவச் சிலை, ஒரு நினைவுச் சின்னம், 2 நினைவு வளைவுகள் ஆகியவற்றை திறந்து வைத்துள்ளது. இது மட்டுமல்லாமல், **உன்னதத் தலைவர்களின் சிறப்பினை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், 47 தலைவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களில் அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. மேலும், 11 தியாக சீலர்களுக்கு நினைவகங்கள் கட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.** அதன்படி, தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள மறைந்த மரியாதைக்குரிய டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் மணி மண்டபத்தினை திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

திரு.சி.பா.ஆதித்தனார் – கோவிந்தம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது புதல்வராக 1936ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் தேதி மரியாதைக்குரிய மறைந்த டாக்டர்பா.சிவந்திஆதித்தனார்பிறந்தார்.பள்ளிப்பருவத்தில் சென்னை, இராமகிருஷ்ணா உயர்நிலைப் பள்ளியில் படித்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள், பின்னர், மாநிலக் கல்லூரியில் தனது படிப்பைத் தொடர்ந்து, பி.ஏ. பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும்போதே தேசிய மாணவர் படை (NCC) தளபதியாக இருந்ததுடன், சென்னை மாநகரில் உள்ள அனைத்துக் கல்லூரிகளின் NCC படைகளுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவரது தந்தையார் திரு. சி.பா.ஆதித்தனார் அவர்கள், படிக்காத பாமர மக்கள் நாட்டு நடப்பை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உயரிய எண்ணத்தின் அடிப்படையில் 15.10.1942 அன்று, முதன் முதலாக மதுரையில் '**அன்றைய செய்தியை அன்றே படியுங்கள்**' என்ற முழக்கத்துடன் '**தந்தி**' என்ற பெயரில் நாளிதழ் ஒன்றினை தொடங்கினார்.

பின்னர் இதுவே, சென்னையில் '**தினத்தந்தி**' என்ற பெயரில் தொடங்கினார். இதன் மூலம் தமிழ்நாட்டில் பத்திரிகை வாசிக்கும் பழக்கம் அதிகரிக்க வழிவகுத்தார்.

'**விளையும் பயிர் முளையிலே தெரியும்**' என்ற பழமொழி போல், திரு. சிவந்தி ஆதித்தனார் பள்ளியில் படிக்கும் பொழுது ஒரு நாள் தினத்தந்தியில் வெளியிட ஒரு சிரிப்பு துணுக்கு ஒன்றினை தன் தந்தையிடம் கொடுத்தார். அந்த சிரிப்பு துணுக்கு என்னவென்றால்,

ஆசிரியர் மாணவரிடம் கேட்கிறார் – பாம்பு என்று எழுதச் சொன்னால் 'பம்பு' என்று எழுதியிருக்கிறாயே ?

அதற்கு மாணவன், பாம்புக்குத் தான் கால் கிடையாதே சார் **என்று பதில் கூறுகிறார்.**

தனது மகனின் பத்திரிகை ஆர்வத்தை உணர்ந்த திரு.சி.பா.ஆதித்தனார் அவர்கள் பத்திரிகைத் தொழிலில் தனது வாரிசாக அவரை உருவாக்கினார். 1958ஆம் ஆண்டு திரு. சிவந்தி ஆதித்தன் தனது பட்டப்படிப்பை முடித்தவுடன், அவரை அழைத்து பத்திரிகைத் துறையில் பயிற்சி அளித்தார்.

“பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்
அறிவூட்டும் தந்தை நல்வழி காட்டும் தலைவன்”

என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கேற்ப, அவரது தந்தையார், சிவந்தி ஆதித்தனுக்கு பயிற்சி அளித்தார். அச்சு கோர்ப்பாளராக, அச்சிடுபவராக, பார்சல் கட்டி அனுப்புவராக, நிருபராக, துணை ஆசிரியராக என்று பத்திரிகைத் துறையின் அத்தனை அம்சங்களிலும் அவருக்கு பயிற்சி கொடுத்தார். பின்னர் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் நெல்லைக்கு சென்று **‘மாலை முரசு’** பத்திரிகையை தொடங்கினார். அவரது அயராத உழைப்பினால் **‘மாலை முரசு’** நாளிதழ் நெல்லை மக்களின் பேராதரவைப் பெற்றது. இதன் எதிரொலியாக மற்ற மாவட்டங்களிலும் மாலை முரசுகள் தோன்றின.

பத்திரிகையின் அனைத்து துறைகளிலும் கற்றுத் தேர்ந்த டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் ஆற்றிய பணியினை கண்ட அவரது தந்தையார், ‘தினத்தந்தி’–யின் நிருவாகப் பொறுப்பை 1959ஆம் ஆண்டு ஒப்படைத்தார். அச்சமயத்தில், சென்னை, மதுரை, திருச்சி ஆகிய மூன்று இடங்களில் இருந்து மட்டுமே தினத்தந்தி நாளிதழ் வெளிவந்து கொண்டிருந்தது.

டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் நிருவாகத் திறமையால், தினத்தந்தி நாளுக்கு நாள் வளர்ந்து, இப்போது பெங்களூர், மும்பை, புதுச்சேரி உள்பட 15 நகரங்களில் பதிப்பாகி வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்த பெருமைக்குச் சொந்தக்காரர் மறைந்த டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தான் என்றால் அது மிகையாகாது.

தினத்தந்தி வெள்ளி விழா நிகழ்ச்சியில் பங்கேற்று அன்று தலைமை உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் கீழ்கண்டவாறு குறிப்பிட்டார்.

“ஓர் அமைப்பை தோற்றுவிப்பது என்பது கடினம். ஆனால் நல்ல முறையில் அமைந்த ஓர் அமைப்பினை யாரிடத்தில் ஒப்படைக்கிறோமோ, அவர்கள் அதில் ஒரு துளிகூட அக்கறை காட்டவில்லை என்றால், எவ்வளவு திறமையாக அந்த அமைப்பை அமைத்து இருந்தாலும், வெகு விரைவிலேயே அது கலைந்து விடக்கூடிய ஆபத்து உண்டு.

அந்த விதமான நிலையில்லாமல் திரு.ஆதித்தனார் அவர்கள் அமைத்துக் கொடுத்த ‘தினத்தந்தி’ நல்ல முறையில் இன்னும் நல்ல வளர்ச்சி அடையத்தக்க வகையில், மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் விரும்பி படிக்கும் தன்மையிலேயே தினத்தந்தி நாளிதழ் இன்றைய தினம் நடக்கிறது என்றால், அதன் நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருக்கும் நம் மதிப்பிற்குரிய நண்பர் ஆதித்தினாரின் திருமகன் சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு உரிய பங்கு உண்டு என்று அப்பொழுது தெரிவித்தார்.

ஆதித்தினார் ஒரு நல்ல அமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தது மட்டும் அல்லாமல், அந்த அமைப்பை தொடர்ந்து நடத்த தக்க பிள்ளையையும் பெற்றெடுத்தார் என்பது அவரது தனிச் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்” என்று, திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களை பாராட்டிப் பேசினார்கள்.

தினத்தந்தி பத்திரிகை பல கோடி வாசகர்களுடன், நூற்றாண்டை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருப்பதை நினைத்துப் பார்த்தால் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது நூற்றுக்கு நூறு சரியாக இருப்பதை உணர முடிகிறது.

திரு.ஆதித்தனார் அவர்கள் அமைத்த நிறுவனங்களை அவருடைய மகன் திரு.சிவந்தி ஆதித்தன் கட்டிக் காத்து வருவதுடன், மெச்சத் தகுந்த வழியில் வளர்த்து வருகிறார்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

“தினத்தந்தி நாளிதழ் மூலம் தமிழகத்தில் பாமரரும், பத்திரிகை படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியவர் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அவர்கள். இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரரும் ஆவார். இவர் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவராக திறம்பட பணியாற்றியது மிகவும் குறிப்பிடத்தக்கது. இவர் எளிமையானவர் மற்றும் பழகுவதற்கு இனிமையானவர்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தினத்தந்தி பத்திரிகை மட்டுமின்றி, 1962ஆம் ஆண்டு ‘ராணி’ வார இதழ் தொடங்கப்பட்டது. திரு. ஆதித்தனார் அவர்கள் பாமர மக்களையும், நாளிதழ் படிக்க வைத்தார் என்றால், பட்டி தொட்டி மக்களிடம் வார இதழ் படிக்கும் பழக்கத்தை உருவாக்கித் தந்தவர் மறைந்த டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள். இதனைத் தொடர்ந்து ‘ராணி முத்து’, ‘ராணி காமிக்ஸ்’ ஆகிய இதழ்களையும் தொடங்கினார்கள். தமிழ்நாடு மக்களின் வீடுகளை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் ‘ராணி முத்து’ காலண்டர்களை வெளியிட்டவரும் திரு. பா.சிவந்தி ஆதித்தன் அவர்கள்தான்.

இவர் திருச்செந்தூர் பகுதியில் பல கல்வி நிறுவனங்களை நிறுவி, அப்பகுதியில் உள்ள ஏழை மக்கள் கல்வி கற்க வழிவகை செய்தார்.

“இளைஞர்கள் படிக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயமும், நாடும் முன்னேற்றம் அடையும். படிக்க எந்த ஊரில் பள்ளிக்கூடம் இல்லையோ, அந்த ஊரில் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன்” என்று கூறியதோடு மட்டுமல்லாமல், அதை செயல்படுத்தவும் செய்தார் மரியாதைக்குரிய மறைந்த திரு.சிவந்தி ஆதித்தன் அவர்கள். தமிழ்நாடு முழுவதும் ஏராளமான இடங்களில் புதிய பள்ளிக்கூடங்கள் அமைக்கவும், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளுக்கு கட்டடங்கள் கட்டவும் தாராளமாக நிதி உதவி செய்தார். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் 15 ஆயிரம் சதுர அடி பரப்பளவில், சி.பா. ஆதித்தனார் நூற்றாண்டு மாளிகையை கட்டிக் கொடுத்தவரும் மரியாதைக்குரிய சிவந்தி ஆதித்தனார் அவர்கள்.

புரட்சித்தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்கள் ஏழை, எளிய குழந்தைகளுக்காக சத்துணவுத் திட்டத்தை தொடங்கியபோது, முதலில் திருச்சி பாப்பாக்குறிச்சியில் தன் தந்தை அமரர் சி.பா.ஆதித்தனார் பெயரில் முதல் சத்துணவுக் கூடத்தை கட்டிக் கொடுத்தவர் மரியாதைக்குரிய மறைந்த டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அவர்கள்.

டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் கல்வி வளர்ச்சியில் காட்டிய அதே அக்கறையை, விளையாட்டுத் துறை வளர்ச்சியிலும் காட்டினார்.

தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவராக இருந்த அவர், 1987ஆம் ஆண்டு இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆசிய ஒலிம்பிக் சங்க துணைத் தலைவர் பதவி வகித்த அவர், ஆசிய ஒலிம்பிக் சங்கம், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் பல விருதுகளைப் பெற்று இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்தவர். இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் வாழ்நாள் தலைவராக 2000ஆவது ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1982 மற்றும் 1983 ஆகிய இரு வருடங்களிலே திரு.சிவந்தி ஆதித்தனார் அவர்களை சென்னை நகர ஷெரீப் ஆக நியமித்து கௌரவப்படுத்தினார்.

இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காக 2008ஆம் ஆண்டு மத்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ பட்டம் வழங்கி கௌரவித்தது. இவருக்கு பல்வேறு பல்கலைக்கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தன.

இந்திய துணைக் கண்டத்தில், பத்திரிகை, விளையாட்டு, கல்வி, தொழில் முதலான பல்வேறு துறைகளிலும் பெரும் சாதனையாளராகத் திகழ்ந்த டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் தொண்டினை வருங்கால சமுதாயத்தினரும் அறிந்து கொள்ளும் வகையிலும், அன்னாருக்கு வரலாற்றில் நீங்கா இடம் கிடைத்திடும் வகையிலும், டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் பெருமைக்கும், புகழுக்கும் சிறப்பு சேர்க்கும் வகையில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், வீரபாண்டியன்பட்டணம் கிராமத்தில் அரசு சார்பாக மணி மண்டபம் அமைக்கப்படும் என்று, 22.11.2017 அன்று தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் நான் அறிவித்தேன்.

அதனை செயல்படுத்தும் விதமாக, ஒரு கோடியே 34 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் 60 சென்ட் நிலத்தில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களின் மணி மண்டபம் அமைக்க 10.10.2018 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இந்த மணிமண்டபத்தினை அமைக்கும் பணிகள் துரிதமாக முடிக்கப்பட்டு, திறந்து வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வாக்குறுதிகளை கொடுப்பதோடு நிற்காமல், அதனை உடனடியாக நிறைவேற்றும் ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவரிடம் பயிற்சி பெற்ற நாங்களும், “சொன்னதைச் செய்வோம், சொல்லாததையும் செய்வோம்” என்ற கொள்கையின் அடிப்படையில், செயல்பட்டு வருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், எங்கள் அரசும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி, தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

★ ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த பெண்கள் திருமண வயதை அடையும்பொழுது, பொருளாதார சூழ்நிலையின் காரணமாக, திருமணம் செய்ய முடியாத நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த பெண்கள் திருமண வயதை அடைகின்றபொழுது, திருமணம் செய்வதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாலிக்குத் தங்கம் என்ற அற்புதமான திட்டத்தை தமிழ்நாட்டிலே உருவாக்கி, இன்றைய தினம், தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 4,399 பயனாளிகளுக்கு ரூ.25,000 வீதம் 23.31 கோடி ரூபாய் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

★ அதேபோல, 5,378 பயனாளிகளுக்கு ரூ.50,000 வீதம் 1 பவுன் தங்கம் கொடுக்கப்பட்டு அதற்காக அம்மாவினுடைய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி 42 கோடி ரூபாய். ஆகவே, ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்கள் திருமண வயதை அடைகின்றபொழுது, திருமணம் நடைபெறுவதற்காக உதவி செய்து கொண்டிருக்கும் அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

★ பருவ காலங்களிலே பெய்கின்ற மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றது. அப்படிப்பட்ட நீரை சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா எண்ணிய எண்ணத்தை, கண்ட கனவை எங்களுடைய அரசு நிறைவேற்றுகின்ற விதமாக, குடிமராமத்து என்ற திட்டத்தைக் கொண்டுவந்து, இன்றைக்கு தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 39 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்காக பத்தரை கோடி ரூபாய் செலவழித்து, குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு, தூத்துக்குடி மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் ஏரிகள், குளங்கள் நிரம்பி வழிகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அதேபோல, தற்போது 28 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக பதினொன்றரை கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி கிராமத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள் நிரம்புகின்றபொழுது, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கும், வேளாண் பணிகளும் சிறக்கும். குடிநீர் பிரச்சினை முழுவதும் நிரந்தரமாக தீர்க்கப்படும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம் குடிமராமத்துத் திட்டம் ஆகும்.

★ இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2016 சட்டமன்றத் தேர்தலின்போது, கழக அரசு அமைந்தவுடன், உழைக்கும் மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்த திட்டத்தை துவக்குவதற்கு முன் மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தார்கள். ஆனாலும், அம்மாவினுடைய அரசால் அம்மாவினுடைய திட்டத்தை நிறைவேற்றுகின்ற விதமாக, தூத்துக்குடி மாவட்டத்தில் மட்டும் 5,489 பயனாளிகளுக்கு 13.75 கோடி ரூபாய் மானியம் அளித்து அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

★ தற்போது, வல்லரசு நாடுகளில் கூட விலையில்லா மடிக்கணினி வழங்குவது கிடையாது. ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ் மண்ணிலே, ஏழை குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகள் அறிவுபூர்மான கல்வி, உலகத் தரத்திற்கேற்ற கல்வி, சர்வதேச அளவிலே மாணவ, மாணவிகள் சிறந்த அறிவைப் பெற வேண்டும், பொது அறிவை பெருக்கிக் கொள்ளவேண்டும், வேலைவாய்ப்புக்கு செல்ல வேண்டும், தொழிற்கல்விக்கு செல்ல வேண்டும், அப்படிப்பட்ட கல்வி கிடைக்க வேண்டுமென்று சொன்னால் அந்த மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்க வேண்டும். ஆகவே, திறமையான மாணவர்களாக

> **“ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.”**
>
> – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இது போதாது என்று மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தவுடன், ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்தவர்கள் நோய்வாய்ப்பட்டால், அவர்கள் பூரண குணமடைவதற்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் சிகிச்சை பெறுவதற்கு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில், 49 ஆயிரத்து 811 கர்ப்பிணிப் பெண்களுக்கு 47 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இருந்தாலும், குடும்பத்திலே வசதி இல்லாமல் பொருளாதார சூழலின் காரணமாக அவர்கள் அந்த கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்று கருதி, அரசாங்கமே முழுச் செலவை ஏற்று, விலையில்லா மடிக்கணினிகளை வழங்கிய ஒரே அரசு இந்தியாவிலேயே அம்மாவின் அரசுதான். அதில் மட்டும், பத்தொன்பதரை கோடி ரூபாய் செலவில், 16,162 மடிக்கணினிகள் நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

★ அதுபோல, கிராமப்புற பொருளாதாரம் முன்னுக்கு வரவேண்டும், ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்தவர்கள், விவசாயத் தொழிலாளிகள், பெண் தொழிலாளிகள் சொந்தமாக பொருளாதாரத்தை ஈட்ட வேண்டும், அவர்களுடைய ஜீவாதாரத்தை அவர்களே நிர்ணயிக்கக்கூடிய அளவிற்கு அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையுடன் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள், கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தை கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக 10,327 பயனாளிகளுக்கு பதிமூன்றரை கோடி ரூபாய் அளவிற்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

★ மேலும் விலையில்லா மிதிவண்டிகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். கடந்த காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, தனியார் மருத்துவமனையில், 2 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். அதையே, அம்மாவினுடைய அரசு,

★ தை என்றாலே தமிழர் திருநாள். அனைவரும் தைப்பொங்கல் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக பொங்கல் தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அறிவித்தார்கள். அதையே நாங்கள் கடைபிடித்து, அம்மாவின் அரசு பொங்கல் தொகுப்புத் திட்டத்தின் மூலமாக தைப்பொங்கலன்று விலையில்லா அரிசி, சர்க்கரை,முந்திரி,திராட்டை,ஏலக்காய்கொடுத்தோடு, 1,000 ரூபாய் எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசுதான்.

★ இன்றைக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்கடன் 188 கோடி ரூபாய் இந்த மாவட்டத்தில் மட்டும் வழங்கியிருக்கிறோம்.

★ மீன்பிடி தடை கால நிவாரணமாக 19 ஆயிரத்து 232 மீனவ குடும்பங்களுக்கு 22 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், 22 ஆயிரத்து 482 மீனவ மகளிருக்கு 25 கோடி ரூபாய் நிதயுதவி வழங்கிய அரசும் அம்மாவினுடைய அரசு.

★ பசுமை வீடுகள் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

★ நெடுஞ்சாலைகள் துறையின் மூலம் பல்வேறு சாலைகளை நாம் சீர்செய்திருக்கின்றோம்.

★ திருச்செந்தூர், சாத்தான்குளம், விளாத்திகுளம் ஆகிய தீயணைப்பு நிலையங்களுக்கு 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

★ பொதுப்பணித்துறையின் மூலமாக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இங்கே கூட, நீர்வள ஆதாரத் துறையின் மூலமாக, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே முக்காணியில் 25 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

★ வைப்பாறு ஆற்றின் குறுக்கே வேம்பாறு பகுதியில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெறுகின்றன. இப்படி பல திட்டங்கள் தூத்துக்குடி மாவட்டத்திலே அம்மாவினுடைய அரசு இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

★ தூத்துக்குடி மாநகராட்சியில் ‘ஸ்மார்ட் சிட்டி’ திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மேலும் இன்று நடைபெறும் இந்த விழாவில், தூத்துக்குடி மாநகராட்சி மூலம் நிறைவேற்றப்பட உள்ள 102 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட உள்ள 72 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள், மின்சாரத் துறை மூலமாக நிறைவேற்றப்பட்ட 34 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள், உட்பட 260 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 47 திட்டங்களுக்கு நான் இந்த அற்புதமான நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்றைக்கு அற்புதமான நாள். இந்த நன்நாளில், இத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட 23 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள், மருத்துவத் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்ட 18 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பணிகள் உட்பட 71 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 15 பணிகளை நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.3.5 கோடி மதிப்பிலான இருதய இரத்த நாள ஆய்வகத்தை திறந்து வைக்க உள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் 6,944 பயனாளிகளுக்கு சுமார் ரூ.32 கோடியே 42 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை நான் வழங்கியுள்ளேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் நூற்றாண்டு விழாவில் இம்மாவட்டத்தில் 35 அறிவிப்புகளை நான் அறிவித்தேன். அதில் 15 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 20 அறிவிப்புகளின் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக்கொண்டு விருதுகளை குவித்து வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த ஆளுமைமிக்க மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன். ஒரு சிலர் போல் நாங்கள் இல்லை.வாய்ச்சொல் வீரராக நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளிக்காமல், சாத்தியமான திட்டங்களை மட்டும் அறிவித்து மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது, மூன்று பேர் சேர்ந்து ஒரு லாட்டரி சீட்டு வாங்கினார்கள். பரிசு விழுந்தால் கடவுளுக்கு சம பங்கு தருவோம் என்று முடிவு செய்தார்கள். சில நாட்களில் அவர்கள் வாங்கிய லாட்டரி சீட்டுக்கு பரிசு விழுந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. பணத்தை வாங்குவதற்கு முன் மூன்று பேருக்கும் ஒரே சிந்தனை தோன்றியது. கடவுளுக்கு ஒரு பங்கு தருவோம் என்று சொன்னோமே, அப்படி தரக்கூடாது என்று முடிவு செய்தார்கள்.

அவசரப்பட்டு கடவுளுக்கு ஒரு பங்கு தருவதாக சத்தியம் செய்து விட்டோமே, அதிலிருந்து எப்படி தப்புவது என்ற சிந்தனையே மூவரின் மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது.

சரி எவ்வளவு பங்கு ? எவ்வளவுதான் கொடுக்கலாம் ? என யோசித்த போது,

முதல் நபர், ‘‘தரையில் ஒரு சிறிய வட்டம் வரைவோம், எல்லாப் பணத்தையும், நாணயங்களாக்கி மேல் நோக்கி எறிவோம். சின்ன வட்டத்துக்குள் விழுவது கடவுளுக்கு’’, என்றான்.

இரண்டாவது நபரோ, ''கூடாது, கூடாது. மிகப் பெரிய வட்டம் வரைவோம். நடுவில் நின்று கொண்டு பணத்தை மேல் நோக்கி எறிவோம். அந்த வட்டத்துக்கு வெளியே எவ்வளவு பணம் விழுகிறதோ அது கடவுளுக்கு'', என்றான்.

இருவரும் சொன்னதைக் கேட்ட மூன்றாவது நபர், ''சிறிய வட்டமாவது, பெரிய வட்டமாவது – பணத்தை மேலே வீசி எறிவோம். மேலே நின்று விடுகின்ற பணம் கடவுளுக்கு, கீழே விழுகின்ற பணம் நமக்கு'', என்றான்.

இவர்களிடம் நற்குணம் இல்லாதது மட்டுமல்ல, கடவுளை விட தாங்களே கெட்டிக்காரர்கள் என்ற ஆணவமும் இருந்தது. இவர்களைப் போன்ற சிலர், செய்ய முடியாதவற்றை எல்லாம் செய்வோம் என உண்மைக்கு மாறானவற்றை மக்களிடம் கூறி நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று விட்டனர். ஆனால் அவர்கள் இந்த மூன்று நபர்களைப் போல் சொன்னதை செய்யவில்லை. அதற்கு வேறு விளக்கங்கள் கொடுத்து வருகின்றனர். ஆனால், அவர்களைப் பற்றி நன்கு அறிந்து கொண்ட மக்கள், அவர்களுக்கு தக்க தண்டனையை சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களிலும் வழங்கினார்கள். இனிமேலும் இதனை தொடர்ந்து வழங்கிக் கொண்டே இருப்பார்கள் என நான் உறுதியாக கூறுகிறேன்.

அதேபோல, தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்பார்கள். ஆனால் சிவந்தி ஆதித்தன் அவர்கள் 8 அடி பாய்ந்தால், அவர் மகன் திரு.பாலசுப்பிரமணியன் ஆதித்தன் அவர்கள் 16 அடி அல்ல, 32 அடி பாய்ந்து டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களின் நினைவை போற்றும் வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு திருச்செந்தூரில் மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்பை செய்தவுடன், அடிக்கல் நாட்டு விழாவிலிருந்து, மணிமண்டபம் திறப்பு விழாவான இன்று வரை முழு ஈடுபாட்டுடன் இதை வெற்றிகரமாக நடத்த மாவட்ட நிருவாகத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்கிய திரு.பாலசுப்பிரமணியன் ஆதித்தன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். தன் தாத்தா சி.பா.ஆதித்தனார், தந்தை சிவந்தி ஆதித்தன் உருவாக்கிய 'தினத்தந்தி'–யை மேலும் வளர்த்து இன்று துபாய், இலங்கை போன்ற வெளிநாடுகளிலும் தொடங்கப்பட்ட முதல் தமிழ் பதிப்பு என்ற பெருமையையும் 'தினத்தந்தி' குழுமத்துக்கு பெற்று தந்துள்ளார்.

நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். திரு. பாலசுப்பிரமணியன் தாத்தா 'தமிழர் தந்தை' சி.பா. ஆதித்தனார் அவர்கள் சிறந்த பத்திரிகையாளர் என்று. அவர் தந்தை சிவந்தி ஆதித்தன் அவர்கள் சிறந்த நிருவாகி என்று. ஆனால் திரு. பாலசுப்பிரமணிய ஆதித்தன் தன் தாத்தா, தகப்பனாரின் கலவையாக சிறந்த பத்திரிகையாளராகவும், சிறந்த நிருவாகியாகவும் இருக்கிறார் என்பதற்கு அவரது நிருவாகத்தில் இயங்கும் 'தினத்தந்தி', டி.டி. நெக்ஸ்ட் ஆங்கில பத்திரிகை, மாலை மலர், தந்தி டி.வி., ஹலோ எப்.எம்., மற்றும் சில வார, மாத இதழ்களே சாட்சி. இப்போது தன் மகன்களான சிவந்தி ஆதித்தன், ஆதவன் ஆதித்தன் ஆகியோருக்கும் பயிற்சி அளித்து வருகிறார். அந்த இளைஞர்களும் தன் பூட்டனார், தாத்தா, தந்தை போல பத்திரிகை துறையில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்.

ஏற்கெனவே மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகம் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பரந்து விரிந்து தொழில் செய்யக்கூடிய ஒரு சமுதாயம் என்று சொன்னால் அது நாடார் சமுதாயம் தான் என்று சொல்லலாம். எந்த மூலைக்கு சென்றாலும், உழைக்க பிறந்தவர்கள், உழைப்பில் வாழ்கின்ற அந்த சமுதாய மக்களுக்கு அதை போற்றுவதற்காக இன்றைக்கு அந்த சமுதாயத்திலே பிறந்து வளர்ந்தாலும், ஒருவர் பிறக்கின்றார், வாழ்கின்றார், மறைகின்றார். ஆனால் இடைப்பட்ட காலத்திலே, தன் வாழ்க்கையிலே தன் சமுதாயத்திற்கு என்ன செய்தார், இந்த நாட்டிற்கு என்ன செய்தார் என்று பார்க்கின்றபோது தான் மறைந்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தான் சொன்னதை செய்தார். அவர் செய்த சாதனைகள் இன்றைக்கு மண்ணிலே நிலைத்து நிற்கின்றது. ஆகவே தான், இந்த விழாவிற்கு அரங்கமே நிரம்பி

''மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக் கொண்டு விருதுகளை குவித்து வருகிறது. இந்தியாவிலேயே சிறந்த ஆளுமைமிக்க மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றது.''

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

கடல் போல் மக்கள் வெள்ளம் காட்சியளிக்கின்றது. ஒருவர் மறைந்ததற்கு பிறகு, அவருக்கு செய்கின்ற புகழ் தான் அவர் செய்த சாதனைகளுக்கு கிடைத்த பரிசு. அந்த பரிசை இங்கே அமர்ந்திருக்கின்ற மக்கள் வழங்கி கொண்டு இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு நல்லவர்கள் வாழ்ந்து மறைந்தாலும், அவர்கள் வாழ்ந்த காலத்திலே செய்த சாதனைகள், அந்த சாதனைகளுக்கு இன்றைக்கு இயற்கை அன்னையே மழை பொழிந்து வாழ்த்தி கொண்டு இருக்கின்ற காட்சியை இன்றைக்கு பார்க்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு நல்ல வேளையில் எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, என்னுடைய தொகுதிகளிலும் நாடார் சமுதாயத்தினர் அதிகமாக இருக்கின்றனர். என்னுடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதியிலே என்னுடைய நண்பர் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த திரு. மாதேஷ் என்பவர் இரண்டுமுறை எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக பதவி வகித்தார். இப்பொழுதும் அவரது மனைவி திருமதி எம். குப்பம்மாள் எடப்பாடி ஒன்றிய சேர்மனாக பதவி வகிக்கிறார். ஆகவே, இன்றைக்கு இந்த சமுதாய மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பேராதரவை அளித்துக் கொண்டு இருக்கின்றார்கள். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் காலத்திலும் சரி, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் காலத்திலும் சரி, அவர்கள் மறைந்த பிறகு நாங்கள் இப்பொழுது இயக்கத்தில் இருக்கின்ற போதும் சரி, எங்களோடு துணை நின்றவர்கள், நிற்பவர்கள் இந்த சமுதாயத்தை சேர்ந்தவர்கள். அந்த சமுதாயத்தை சேர்ந்தவர்கள் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நாங்கள் பெருமையாக கருதுகிறோம் என்பதை **இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சியிலே புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.**

அறிவிப்புகள்

1. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆலந்தலையில் 52 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் (தூண்டில் வளைவு) கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

2. தாமிரபரணி ஆற்றின் வெள்ள நீரை வறட்சிப் பகுதிகளுக்கு திருப்பி பாசன நிலங்கள் பயன் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள தாமிரபரணி, கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டத்தின் நிலை–IV –க்கான பணிகள் விரைவில் துவங்கி இந்த ஆண்டுக்குள் நிறைவு பெற்று இந்தப் பகுதி மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

3. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், அமராபுரம் கிராமத்தில் கருமேனியாற்றின் குறுக்கே 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை புதிதாக கட்டப்படும்.

4. தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்திற்கு 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தாலுகா அலுவலகம் கட்டப்படும்.

5. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டத்திற்கு 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தாலுகா அலுவலகம் கட்டப்படும்.

6. தூத்துக்குடி மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு அணியாபரநல்லூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அலுவலகம் கட்டப்படும். அங்கு பால் பண்ணை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

7. கடம்பூர் பேரூராட்சி, விளாத்திகுளம் பேரூராட்சி, புதூர் பேரூராட்சி மற்றும் 180 கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

8. சாத்தான்குளம் மற்றும் திருவைகுண்டம் பேரூராட்சி சந்தைகள் தலா 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருச்செந்தூர் பேரூராட்சி சந்தை 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், உடன்குடி பேரூராட்சி சந்தை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மேம்படுத்தப்படும்.

9. ஆழ்வார்திருநகரி குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், நாசரேத் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பெருங்குளம் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்ச்சி நல்ல முறையில் சீரோடும் சிறப்போடும் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களுக்கும், இதற்கு துணையாக நின்ற சட்டப்பேரவை உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதேபோல இந்த துறையினுடைய உயர் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!

படமும்/செய்தியும்

இராமநாதபுரம் மாவட்டம், ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 01.03.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் **ஹர்ஷ் வர்தன்** அவர்கள் ஆகியோர் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 05.03.2020 அன்று நாமக்கல் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் நடைபெற்ற விழாவில், புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் திரு. **அஸ்வினி குமார் சௌபே** அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது, பூம்புகார் மாநில விருது மற்றும் பட்டு விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள் (19.02.2020)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 2019–2020ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை 10 கைவினைஞர்களுக்கும், பூம்புகார் மாநில விருதுகளை 10 கைவினைஞர்களுக்கும், பட்டு வளர்ச்சித் துறை சார்பில் மாநில விருதுகளை 3 சிறந்த பட்டு விவசாயிகளுக்கும் வழங்கி கௌரவித்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் என்ற பெயரில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவித்து வருகிறது.

தமிழ்நாட்டில் கைத்திறன் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு **"வாழும் கைவினைப் பொக்கிஷம்"** என்ற உயரிய விருது வழங்கப்படும் என்று 08.05.2013 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்: 110இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, "வாழும் கைவினைப்

பொக்கிஷம்'' என்ற விருது 2013ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது, தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும்.

2019–2020ஆம் ஆண்டிற்கான "வாழும் கைவினைப் பொக்கிஷம்'' விருதுகள் திரு.ஜி.வித்தியா சங்கர் ஸ்தபதி, திரு.எம்.ராஜமாணிக்கம், திரு.கே.வெங்கடாசலம், திரு.டி.வெள்ளைக்கண்ணு, திரு.என்.ஜெகதீஸ்வரன், திரு.ஆர்.ராமலிங்கம், திரு.எம்.பொன்னுசாமி, திரு.எம்.துரைராஜ், திரு.எம்.கணேசன், திரு.வி.பலராமன் ஆகிய 10 விருதாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு, 8 கிராம் தங்கப் பதக்கம், ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த 10 கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் "பூம்புகார் மாநில விருது'' தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள், 50 ஆயிரம் ரொக்கப் பரிசுடன், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் ஆகியன உள்ளடக்கியதாகும். இவ்விருது பெறும் கைவினைஞர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஒய்வூதியம் ரூ.3,500/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

2019–2020ஆம் ஆண்டு பூம்புகார் மாநில விருதுகளை திரு.எம்.முருகராஜ், திரு.வி.மோகன், திரு.ஆர்.பிரசன்ன வெங்கடேஷ், திரு.கே.பால்ராஜ், திரு.ஜி.சுந்தரம், முனைவர் எம்.சந்திரசேகரன், திருமதி என்.கைருன்னிஸா, திருமதி எம்.கண்மணி, திரு.ஆர்.குமரகுரு, திருமதி எம்.டி.வனிதா ஸ்ரீ ஆகிய 10 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

2019–2020ஆம் ஆண்டிற்கான பட்டு வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2019–2020ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசுக்கான ஒரு இலட்சம் ரூபாய் வங்கி வரைவோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.நா.அன்பழகன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசுக்கான 75 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ப.பிரபு அவர்களுக்கும், மூன்றாம் பரிசுக்கான 50 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த திரு.து.செந்தில் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கி 1,650 மருத்துவ இடங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கியுள்ளது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை (04.03.2020)

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே!

முன்னாள் மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பித்துரை அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் அவர்களே!

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் செயலாளர் திருமதி பீலா ராஜேஷ் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.பிரபாகர் அவர்களே!

மாவட்ட ஊராட்சித் தலைவர் அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிருவாகிகளே!

பெரியோர்களே, தாய்மார்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாங்கனியின் சுவையும், ரோஜா மலரின் வாசனையும் நிரம்பிய கிருஷ்ணகிரி மாவட்டம் போலுப்பள்ளியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள புதிய மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிருஷ்ண தேவராயாின் ஆட்சி காலத்தில் இருந்து, இப்பகுதி “கிருஷ்ணகிரி” என அழைக்கப்படுகிறது. அவரால் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி கோட்டைக் கொத்தளம் இன்றைக்கும் இங்கு உள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள தளி என்ற ஊரை ஆங்கிலேயர்கள் குட்டி இங்கிலாந்து என்று அழைப்பார்கள். 1824ஆம் ஆண்டு, 1,642 ஏக்கர் பரப்பளவில், ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட “குதிரை வளர்ப்பு மையம்” இந்த மாவட்டத்தில் தான் உள்ளது.

ஓசூர் பல பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட நகரமாக விளங்குகிறது.

1992ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட ‘சிப்காட்’ மற்றும் ‘சிட்கோ’ தொழிற்பேட்டைகள் இப்பகுதி மக்களுக்கு பல ஆண்டுகளாக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கின்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2004ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தை பிரித்து, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கி இந்தப் பகுதிக்கு பெருமை சேர்த்தவர்.

மாம்பழத்திற்கு மிகவும் பிரபலமான கிருஷ்ணகிரியில், அகில இந்திய மாங்கனி கண்காட்சி, 1993ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன்–ஜூலை மாதங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்று உயர்ரக மாம்பழங்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணகிரி–பாகலூரில் உள்ள ரோஜா தோட்டங்களில் மலரும் ரோஜா மலர்கள், உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமன்றி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. ஆகவே, இப்படி புகழ் பெற்ற ரோஜா, மல்லிகை சாமந்திப் பூ அதிகமாக உற்பத்தியாகின்ற மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். அதனாலேதான் இங்கிருக்கின்ற நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பகுதியிலே ஒரு சர்வதேச மலர் ஏல மையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கடந்த ஆண்டு, மரியாதைக்குரிய அண்ணன் கே.பி.முனுசாமி அவர்கள் என்னைச் சந்தித்து, மக்களுடைய, விவசாயிகளினுடைய எண்ணங்களை என்னிடத்திலே பிரதிபலித்தார், நீங்கள் அவசியம் வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே 110 விதியின் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க, இந்த விவசாய பெருங்குடி மக்களுடைய எண்ணங்களை ஈடேற்றுகிற வகையிலே, 20 கோடி ரூபாய் செலவிலே சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டேன். சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டது.

விலங்கு மற்றும் பூச்சிகளால் மனிதர்களுக்கு ஏற்படும் நோய் கட்டுப்பாட்டு நிறுவனம் இம்மாவட்டத்திலுள்ள ஓசூரில் இயங்கி வருகிறது.

நெடுங்கல் மற்றும் கிருஷ்ணகிரி நீர் தேக்கம், ராம நாயக்கன், பாரூர் உள்ளிட்ட ஏரிகளும், தென் பெண்ணையாறு, மார்கண்டேய ஆறு போன்ற ஆறுகளும், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த இம்மாவட்டத்தில் பள்ளிகள், கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் அதிக அளவில் உள்ளன. ஆனால் இந்த

மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரி இல்லை.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழிக்கு ஏற்ப செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, இம்மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய அரசின் ஆணையைப் பெற்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரியையும் சேர்த்து 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கிட குறுகிய காலத்தில் மத்திய அரசின் ஆணையைப் பெற்று, சாதனை படைத்த ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த மருத்துவக் கல்லூரி 2021–2022ஆம் கல்வி ஆண்டு முதல் 150 மாணவர் சேர்க்கையுடன் தொடங்கப்படும். இக்கல்லூரி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு அலுவலரை நியமனம் செய்தும், இந்த ஆண்டு கட்டடப் பணிகளுக்காக 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இப்பணிகள் விரைவாகத் தொடங்கப்பட்டு அடுத்த ஆண்டு இந்தக் கல்லூரி தொடங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன். சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து 2011 வரை தமிழகத்திலே 1,945 இடங்கள் தான் புதிதாக மருத்துவம் படிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற வரை சுமார் 885 இடங்களை அதிகமாக உருவாக்கினார்கள். அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா வழியிலே வந்த அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 350 இடங்கள் அதிகமாக உருவாக்கியது. தற்போது 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கியதன் மூலமாக 1,650 இடங்கள் கிடைக்கும். ஆக மொத்தம், 2,000 மருத்துவ இடங்களை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு புதிதாக உருவாக்கியிருக்கிறது. குறுகிய காலத்தில் இவ்வளவு எண்ணிக்கையுள்ள மருத்துவர்கள் படிக்கக்கூடிய சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகளாகவும், மருத்துவமனைகளாகவும் திகழும் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இப்பொழுது அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச்சென்றால் வெளிப்புறத்தில் காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிலையைப் போக்குவதற்காக சுமார் 250 நபர்கள் வரை அமரக்கூடிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு ஹாலும் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். இதை எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், கிராமப்புறத்திலே மக்கள் தரும ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்று சொல்வார்கள். தற்போது, அரசு மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனையைவிட கூடுதல் மருத்துவ வசதியுடைய மருத்துவமனையாக உருவாகி வருகின்றன. இனி எதிர்காலத்தில் மக்கள் தனியார் மருத்துவமனைக்கு போவதற்குப் பதிலாக அரசு மருத்துவமனையை நாடி வருகின்ற காலம் விரைவில் உருவாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

நானும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் இலண்டன் சென்றிருந்தபொழுது, அங்கே சுமார் 90 சதவிகிதம் பேர் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை அறிந்தோம். அதேபோல, தமிழ்நாட்டிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனைகளை 11 மருத்துவக் கல்லூரிகளிலும் உருவாக்கப்படும். ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற மருத்துவமனைகளிலும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டால் அதனைக் கண்டுபிடித்து உயர்தர சிகிச்சை அளிக்கக்கூடிய சுமார் 20 கோடி மதிப்புள்ள கேன்சரை குணப்படுத்தக்கூடிய கருவியை நம்முடைய 10 மருத்துவக் கல்லூரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். சென்னை, ஓமந்தூரார் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் வழங்கியிருக்கிறோம். இந்த வசதி தனியார் மருத்துவமனையில்கூட கிடையாது. இது முற்றிலும் இலவசம். ஏழை, எளிய மக்களுக்கு கேன்சர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதைக் குணப்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு இரண்டு கையையும் பொருத்தி சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு.

அதேபோல, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிலே பல்வேறு அறிவிப்புகளை நான் வெளியிட்டேன். அந்த அறிவிப்புகளை எல்லாம் நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலே ஓசூர் நகரம் மாநகராட்சியாக அறிவிக்கப்படும் என்று சொன்னோம், அதை அறிவித்திருக்கிறோம்.

கிருஷ்ணகிரி நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்படும் என்று சொன்னோம், செய்திருக்கின்றோம்.

தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரை கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள வறட்சியான

18 கிராமங்களில் உள்ள 35 ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்வதற்கும், தும்பளஹள்ளி அணைக்குக் கூடுதல் நீர் கொண்டு வருவதற்கும் எண்ணேகோள் அணைக்கட்டின் வலது மற்றும் இடதுபுறங்களில் புதிய வழங்கு கால்வாய் அமைக்க ரூபாய் 276 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணி நிறைவு பெற்றவுடன் கால்வாய் அமைக்கும் பணி துரிதமாக நிறைவேற்றப்பட்டு, இந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயிகளுக்கு நீர் வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். தென்பெண்ணை ஆற்றிலிருந்து உபரி நீரைக் கொண்டு மாவட்டத்திலுள்ள ஏரிகளை நிரப்புவதற்காக ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் அழியாலம் வாய்க்கால் திட்டமும் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் 33 ஏரி பாசனத் திட்டமும் செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நில எடுப்புப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் நீர் மேலாண்மைத் திட்டத்தைக் கொண்டு வந்து அதற்காக ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தி, அதற்காக ஓய்வு பெற்ற 5 பொறியாளர்களை நியமித்திருக்கின்றோம். இரண்டு ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர்கள், 3 ஓய்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்களை அமைத்து ஒன்றரை ஆண்டு காலமாக தமிழ்நாடு முழுவதும் சுற்றி, எங்கெங்கெல்லாம் நீர் ஆதாரம் இருக்கின்றதோ அதனை பாதுகாக்கும் வகையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. அதேபோல, பருவ காலங்களில் பெய்கின்ற மழை நீர் ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் இருப்பதற்காக தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. இதற்காக மூன்றாண்டு காலத் திட்டமாக ரூபாய் 1,000 கோடி ஒதுக்கி, தற்போது ரூபாய் 650 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு வேளாண் பெருமக்களுடைய நீண்ட காலக் கோரிக்கைகள் எங்களுடைய அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, வானிஒட்டு, திண்டல், கொட்டாவூர் வாய்க்கால், கொடியாலம் நீரேற்றுத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அரசம்பட்டி மற்றும் பெண்டரஹள்ளி ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

“இந்தியாவின் முதன்மை மாநிலம் மட்டுமின்றி, முன்னோடி மாநிலமான தமிழ்நாடு, சுகாதார சேவைகளை வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நலவாழ்வு குறியீடுகளை அடைய அரசு உறுதி ஏற்றுள்ளது” என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, தொலைநோக்குப் பார்வையுடன் சுகாதாரத் துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் இத்துறைக்கு 75 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ஊரகப் பகுதியில் உள்ள மக்களின் நலனைப் பேணுவதற்காக, அம்மாவினுடைய அரசு 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்திருக்கின்றது. அதேபோல, 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைக்கு நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

- மாவட்டந்தோறும், ஆரம்ப சுகாதார நிலையங்களில், நவீன இணையவழி கண் பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் கண் பரிசோதகர்கள், நோயாளிகளை பரிசோதித்து அதன் விவரங்களை வலைதள சேவை மூலம், மாவட்ட மருத்துவமனையில் உள்ள கண் மருத்துவர்களுக்கு அனுப்பி, அவர்கள் வழங்கும் அறிவுரையின் பேரில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையால் சர்க்கரை நோயால் ஏற்படும் விழித்திரை நோய், கண் புரை நோய், கண் நீர் அழுத்த நோய் ஆகிய நோய்களுக்கு, கிராமப் பகுதி மக்கள் அவர்கள் வாழும் பகுதிக்கு அருகிலேயே உயர் சிகிச்சை பெறலாம்.

- மாண்புமிகு அம்மா அவர்கள், மருத்துவப் பணியாளர்கள் தேர்வுக்கென தனியே மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றினை அமைத்திருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 13 ஆயிரத்து 537 பணியாளர்கள் இத்தேர்வாணையத்தின் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

- கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனை, 5 வட்டார மருத்துவமனைகள், ஒரு வட்டம் சாரா மருத்துவமனை, 56 கிராமப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 13 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 239 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ மற்றும் சுகாதாரச் சேவைகளை வழங்கி வருகின்றது.

இது தவிர, மாண்புமிகு அம்மாவின் அரசு, இம்மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மலைப் பிரதேசம் நிறைந்த இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 18 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கியிருக்கின்றோம்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக விவசாய பெருங்குடி மக்கள் தேவையான நீரை பெறக்கூடிய அளவிற்கு, 651 பணிகள் 14 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விவசாய பெருங்குடி மக்களின் முழு ஒத்துழைப்போடு இந்த மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆகவே, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் அங்கேயே தேக்கி வைப்பதற்காக முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ், மாவட்டம் முழுவதும் 30,273 மனுக்கள் பெறப்பட்டது. அனைத்து மனுக்கள் மீது தீர்வு காண்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு, தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அவற்றில் 5,460 ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற மனுக்களுக்கு, அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

நான் செல்கின்ற இடத்திலெல்லாம், சட்டப்பேரவை உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள், முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை நீங்கள் துவக்குங்கள், அதன் மூலமாக மக்கள் அரசை நாடி மனு கொடுப்பதற்கு பதிலாக அரசாங்கமே நேரடியாக சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுடைய பிரச்சினையை தீர்ப்பதுதான் இந்த சிறப்பு முகாமினுடைய நோக்கம். அதனடிப்படையிலே இந்த மாவட்டத்தில் 30,273 மனுக்கள் பெறப்பட்டு, தகுதி வாய்ந்த மனுக்கள் தீர்வு காணப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு மூன்றே மாதங்களில் சுமார் 5,460 முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கி உள்ளது. உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு அம்மாவின் அரசு மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் 5 இலட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு கொடுத்து, இந்த மாவட்டத்தில் 5,460 முதியோர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்திருக்கிறோம்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே ஏழை, எளிய மக்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். புரட்சித்தலைவி அம்மா கொடுத்த திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மாணவச் செல்வங்களுக்கு கொண்டு சென்று, அந்த மாணவச் செல்வங்கள் நல்ல முறையிலே கல்வி கற்கும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு, புத்தகப்பை, உரிய நேரத்தில் பள்ளிக்கு செல்வதற்கு விலையில்லா சைக்கிள், அறிவுபூர்வமான கல்வி பெறுவதற்கு விலையில்லா மடிக்கணினி ஆகியவற்றைக் கொடுத்த அரசு அம்மாவின் அரசு. இந்தியாவில் எந்த அரசும் கொடுக்கவில்லை. ஆகவே தான் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமான கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. 2011 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கின்றவரை 100க்கு 34 பேர் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே கொண்டு வந்த புரட்சி, மறுமலர்ச்சியின் காரணமாக, மற்ற துறையைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கியதன் விளைவாக, கிராமம் மற்றும் நகரத்தில் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஏழை, எளிய குடும்பத்தில்

பிறந்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்கும் எண்ணிக்கை உயர்ந்ததன் விளைவாக இன்றைக்கு கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 49 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே, உயர்கல்வி படிப்பதிலே முதல் மாநிலம் தமிழ்நாடு தான். அதுமட்டுமல்ல, புரட்சித்தலைவி அம்மா இருக்கும்பொழுது, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு 12 அரசு கலைக் கல்லூரிகளை கொடுத்து, மொத்தம் 77 அரசு கலைக் கல்லூரிகளை அம்மாவின் அரசு கொடுத்துள்ளது.

அதேபோல, மருத்துவக் கல்லூரி, வேளாண் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என்று ஏராளமான கல்லூரிகளைக் கொடுத்ததன் விளைவு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன். இம்மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 12 ஆயிரத்து 273 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

நான்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் 72 கோடியே 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒசூர் மாநகராட்சியில் குடிநீர் பணிகளை மேம்படுத்திட 87 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அம்ருத் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 27,379 பயனாளிகளுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுது, ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றால், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக 2 இலட்சம் ரூபாய்க்கு மருத்துவ வசதி பெறலாம். இது போதாது என்று மக்களிடத்திலேயிருந்து கோரிக்கை வந்தது. கூடுதலாக செலவாகின்றபொழுது அந்த ஏழை, எளிய மக்கள் தங்கள் கையிலிருந்து பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, இதை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்தவுடனே அம்மாவினுடைய அரசு, மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் 2 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 17,000 குறு, சிறு விவசாயிகளுக்கு 133 கோடியே ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2,057 பேர் பசுமை வீடுகளை பெற்றிருக்கின்றார்கள்.

- கிராமப்புறத்தில் இருக்கும் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கினார்கள். அதன் மூலமாக **13,263 சுயஉதவிக் குழுக்களுக்கு** அம்மாவினுடைய அரசு 685 கோடி ரூபாய் கடனுதவி வழங்கி அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு உயர வழிவகுத்த அரசு அம்மாவினுடைய அரசு.
- 1,000 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- படித்த பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் அரை பவுன் இருந்ததை ஒரு பவுன் உயர்த்தியிருக்கிறோம். திருமண நிதியுதவியாக ரூ.25,000 மற்றும் ரூ.50,000 வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 23,569 விவசாயிகளுக்கு 1,000 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக வழங்கப்படுகின்றது.
- இந்த மாவட்டத்தில் மட்டும் 21,629 முதியோர்களுக்கு 1,000 ரூபாய் மாத ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.
- 10 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் காலணி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை பர்கூர் சிப்காட் தொழில் வளாகத்தில் 360 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது.
- கிருஷ்ணகிரி கே.ஆர்.பி அணையில் மதகுகளை சீரமைக்க 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இது விவசாய பெருமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.
- கிருஷ்ணகிரி நகராட்சியில் சுமார் 37 கோடி ரூபாய் மதிப்பிலான பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- ஒசூரில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவின் அரசால் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மார்க்கண்டையன் ஆற்றின் குறுக்கே குப்பச்சிபாறையை இணைக்கும் வகையில் ஒரு உயர் மட்டப் பாலமும், தென்பெண்ணையாற்றின் குறுக்கே **காமன்தொட்டியில்** ஒரு உயர்மட்டப் பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி பல திட்டங்கள் இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது போன்ற எண்ணற்ற திட்டங்கள் இந்த மாவட்ட மக்களின் நலனுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

> **“முன்னேற்ற பாதையிலே மனது வைத்து**
> **அதற்காக முழுவீச்சாய் தினம் உழைத்து**
> **மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ**
> **வழங்கும் குணம் உடையோன் விவசாயி”**

என்ற புரட்சித்தலைவரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, ஒரு விவசாயின் உணர்வோடு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மக்கள் அமைதியுடன், வளமையுடன் வாழ்வதற்கு திட்டங்களை தீட்டியும், நாள்தோறும் அயராத பாடுபட்டுக் கொண்டிருக்கும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் திட்டங்களின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ளாமல், தவறான கண்ணோட்டத்துடன் பார்த்து, பொய்யான தகவல்களை சில எதிர்க்கட்சிகள் மக்களிடம் பரப்பி வருகிறார்கள். அவர்களும் குழம்பி, மக்களையும் குழப்பி வருகிறார்கள். இதை கூறும் நேரத்தில், கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு சமயம், பாண்டவர்களுக்காக துரியோதனனிடம் தூது வந்துவிட்டு திரும்பி கொண்டிருந்தார் பகவான் கிருஷ்ணர். அவர் ஊரை தாண்டி விட்டாரா என்று அறியும் ஆவலில், மாடிக்கு சென்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெருவையே பார்த்துக் கொண்டிருந்தான் துரியோதனன்.

அந்தச் சமயம், துரியோதனனுடைய குருவான துரோணரின் மகன் அஸ்வத்தாமன் வெளியூர் சென்று திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது வழியில் பகவான் கிருஷ்ணரைக் கண்ட அஸ்வத்தாமன், மரியாதை நிமித்தமாக வணக்கம் தெரிவித்தான். பதிலுக்கு வணக்கம் செலுத்தும்போது, பகவான் கிருஷ்ணரின் மோதிரம் கீழே விழுந்தது.

உடனே அஸ்வத்தாமன், அதனை எடுத்து, பகவான் கிருஷ்ணரிடம் நீட்டினான். அப்பொழுது அதனை கவனிக்காத அவர், வானத்தை பார்த்துக் கொண்டிருந்தார். மேலும், **“அஸ்வத்தாமா, வானத்தைப் பார், மேகங்கள் சூழ்ந்துள்ளது. இன்று மழை வருமா ?”** என்று கேட்டார்.

உடனே வானத்தை நோக்கி பார்த்து அஸ்வத்தாமன் **“இன்று மழை வரும்”** என்று கூறியபடி, பகவான் கிருஷ்ணரிடம், அந்த மோதிரத்தை கொடுத்தான். அன்பின் வெளிப்பாடாக அவனது கரத்தை பிடித்துக் கொண்டு பகவான் கிருஷ்ணர் வாழ்த்து கூறினார்.

இதனை அரண்மனை மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த துரியோதனன் தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டான். துரியோதனன் மனதில் ஓடிய

வஞ்சனைக்கேற்ப வசனங்களை தவறாகவே கற்பனையும் செய்து கொண்டான்.

“ஆஹா இந்த அஸ்வத்தாமனை நண்பன் என்று நினைத்தேன். அவன் கிருஷ்ண பகவானிடம் பணிந்து பேசுகிறான். இவன் எப்படி அவரிடம் அவ்வாறு பேசலாம்,” என எண்ணிக் கொண்டான்.

மேலும், கீழே கிடந்த மோதிரத்தை எடுக்க அஸ்வத்தாமன் கீழே குனிந்ததையும், மழை வருமா என்ற கேள்விக்கு பதில் அளிக்க வானத்தை நிமிர்ந்து பார்த்ததையும், மோதிரம் கொடுக்க நீட்டிய கையை கிருஷ்ண பகவான் பற்றிக் கொண்டதையும், தவறாக கற்பனை செய்து கொண்டு,

“கிருஷ்ண பகவானிடம் மண்ணறிய, விண்ணறிய துணையாக நிற்பேன் என்று கையை பிடித்து அஸ்வத்தாமன் சத்தியம் செய்வதாக கற்பனை செய்து கொண்டான்” துரியோதனன்.

இக்கதையில் வரும் துரியோதனனை போலத்தான், சில எதிர்க் கட்சியினர் மாண்புமிகு அம்மா அரசின் நல்ல பல திட்டங்களின் உண்மைத்தன்மை புரியாமல், **எதிர்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில்** தாங்களும் குழம்பி, மக்களையும் குழப்பி, அரசியல் ஆதாயத்திற்காக அவதூறுகளை பரப்பி வருகின்றனர். அவர்கள் யார் என்பது உங்களுக்கு புரியும், தெரியும்.

இங்கே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதையெல்லாம் அரசின் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, படிப்படியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து, புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

அறிவிப்புகள்

1. கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் உள்ள 5 முக்கிய சாலைகளில் விபத்தை குறைக்கும் வகையில் மைய தடுப்பு மற்றும் விளக்கு வசதி 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

2. கிருஷ்ணகிரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள சின்னஏரியை, சுமார் 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை பூங்கா மற்றும் மின்விளக்குகள் அமைத்து, நிலத்தடி நீரினை சேமித்து சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படும்.

3. புதிய மருத்துவக் கல்லூரி அருகிலுள்ள போலுப்பள்ளி கிராமத்தில் சுமார் 72 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வனக் களஞ்சியம் (Eco-Tourism Park) அமைக்கப்படும்.

4. ஒசூர் கால்நடை மருத்துவமனை, சுமார் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பன்முக கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

5. ஒசூர் – கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் புதிய மருத்துவமனை அருகே நோயாளிகள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய தரைவழி மேல்மட்ட பாலம் அமைக்கப்படும்.

6. மருத்துவக் கல்லூரியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, தென்பெண்ணை ஆற்றின் அருகில் சுத்திகரிப்பு நிலையத்துடன் திறந்தவெளி கிணறு அமைத்து, 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் தனியே ஓர் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. கிருஷ்ணகிரி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காட்டிநாயனப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தென்னையன்கொட்டா என்ற இடத்தில் சாலை விபத்துகள் தடுக்கும் வகையில், 14.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலம் அமைத்துக் கொடுக்கப்படும்.

8. கிருஷ்ணகிரி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பர்கூரை அடுத்த அங்கிநாயனப்பள்ளி என்ற இடத்தில் சாலை விபத்துகள் தடுக்கும் வகையில், 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஓர் உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.

9. கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்ததாளப்பள்ளி மற்றும் கட்டிகானபள்ளி ஊராட்சிகளில் அடங்கிய 39 குக்கிராமங்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, தென்பெண்ணை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, தனியே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

10. கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெல்லம்பள்ளி, செம்படமுத்தூர் ஊராட்சிகளில் அடங்கிய 11 குக்கிராமங்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தென்பெண்ணை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு, திறந்தவெளி கிணறு அமைத்து, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தனியே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

11. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் சுமார் 2 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் கிருஷ்ணகிரி

மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும்.

12. காவேரிப்பட்டிணம் ஒன்றியத்தில், சந்தாபுரம் – சௌட்டஹள்ளி ஊராட்சி, பள்ளிப்பட்டி கிராமத்தை இணைக்கும் வகையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.

13. கட்டிகானப்பள்ளி, பெத்ததாளப்பள்ளி, செங்கடாபுரம் ஆகிய கிராமங்களில் 13 சாலை மேம்பாட்டுப் பணிகள் 1 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

14. ஓசூர் நகராட்சியில், பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், சுமார் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படும்.

15. கிருஷ்ணகிரி நகரத்தில் உள்ள கால்நடை மருந்தகம், சுமார் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

பெங்களூரு நகரத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக மெட்ரோ இரயில் திட்டம்–1 பெங்களூர் நகரை ஒட்டி வரை அமைக்கப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த கருநாடக எல்லைப் பகுதியிலிருந்து நம்முடைய ஓசூர் நகரம் வரை மெட்ரோ இரயில் திட்டத்தை நீட்டிப்பதற்காக அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் குறித்து உலகமே அஞ்சும் நிலை வருகிறது. சீனா போன்ற நாடுகளில் இதன் பாதிப்பு அதிகமாக உள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் பரிசோதிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் சில நபர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் கொரோனா பாதிப்பு யாருக்கும் இருப்பதாக இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும், நோய் தடுப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மருத்துவமனைகளை ஆயத்த நிலையில் வைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் முழு வீச்சில் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றனர். பொதுமக்கள் இதுபற்றி அச்சப்படத் தேவையில்லை, என்றாலும், அடிக்கடி கைகளை சோப்பு போட்டு சுத்தம் செய்து கொள்வதன் மூலமும், சளி, இருமல் பாதிக்கப்பட்டவர்கள் கைக்குட்டை, முகக்கவசம் போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலமும் இதுபோன்ற தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க முடியும். அதுமட்டுமல்லாமல், காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத் திணறல் ஏதாவது ஏற்பட்டால், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். நம்முடைய தமிழகத்தில் கொரோனா நோய் இதுவரை வரவில்லை, அந்த பயம் நமக்குத் தேவையில்லை. இருந்தாலும், நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காக இதை நான் தெரிவிக்கின்றேன். அதேபோல, இதுபற்றி எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகள் பற்றி ஆய்வை நானும் நேரடியாக மேற்கொள்ள உள்ளேன். எனவே, பொதுமக்கள் தனிநபர் சுகாதாரத்திற்கு அதிக அளவு முக்கியத்துவம் தரவேண்டும் என இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் நலனை பேணிக் காப்பதிலே முதன்மை மாநிலமாக விளங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் இருந்தாலும் கூட, இப்பொழுது மத்திய அரசின் மூலமாக அறிவிக்கப்பட்டது மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனுள்ள தரவரிசையில் முதலிடம் பெற்ற மாநிலம் தமிழ்நாடு. அதேபோல, துறைகள் வாரியாக மிகச் சிறப்பான முறையிலே நிருவாகத் திறமையின் அடிப்படையில் இன்றைக்கு பல்வேறு சாதனைகளை புரிந்ததன் விளைவாக, இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் தான், பல துறைகளிலே தேசிய விருதுகளைப் பெற்று சாதனை படைத்த அரசாக நம்முடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். எங்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்காக நன்மை செய்யக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வழியிலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியிலே பீடுநடை போட்டு, தமிழகத்திலே ஏழை என்ற சொல் இல்லை என்ற நிலையை உருவாக்குவது தான் எங்களுடைய இலட்சியம்.

இந்த அரசு மருத்துவக் கல்லூரி வருவதற்கு பேருதவியாக இருந்த நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்குத் துணையாக நின்ற துறை செயலாளர் அவர்களுக்கும் இந்த மருத்துவக் கல்லூரி உதயமாவதற்கு உறுதுணையாக நின்ற வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் ரூ.573.33 கோடி மதிப்பீட்டில், அடுக்குமாடிக் குடியிருப்புகள், பன்னடுக்கு அலுவலகக் கட்டடம் மற்றும் அம்மா திருமண மண்டபம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
19.02.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை, திருவொற்றியூர், நல்ல தண்ணீர் ஓடை குப்பம் திட்டப் பகுதியில் 58 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 480 அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், சென்னை, கோயம்பேட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பன்னடுக்கு அலுவலகக் கட்டடம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா திருமண மண்டபம் மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 399 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4,748 அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமான ஒன்றாக விளங்கும் உறைவிடத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் நோக்கிலும், தமிழகத்தின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் இன்றி வாழும் நலிவுற்ற ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார நிலையினை மேம்படுத்திடவும், **தமிழ்நாடு**

குடிசை மாற்று வாரியம் மூலம் பல்வேறு குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, திருவொற்றியூர், நல்ல தண்ணீர் ஓடை குப்பம் திட்டப் பகுதியில் 58 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 480 அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் சேலம், கோட்ட கவுண்டம்பட்டி திட்டப் பகுதியில் 18 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 216 அடுக்குமாடி குடியிருப்புகள்; நாமக்கல் மாவட்டம், ஆலம்பாளையம் – சத்யா நகர் திட்டப் பகுதியில் 22 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நில வங்கி திட்டம் பகுதி–III திட்டப் பகுதியில் 76 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 960 அடுக்குமாடி குடியிருப்புகள்; கரூர் மாவட்டம், கரூர், சணப்பிரட்டி திட்டப் பகுதியில் 16 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்புகள்; கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர், கோவை புதூர் திட்டப் பகுதியில் 56 கோடியே 41 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 672 அடுக்குமாடி குடியிருப்புகள்;

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் – அளுக்குளி திட்டப் பகுதியில் 24 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகள்; திருப்பூர் மாவட்டம், திருப்பூர், பாரதி நகர் திட்டப் பகுதியில் 22 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகள்; திருப்பூர், ஜெயா நகர் திட்டப் பகுதியில் 20 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

சென்னை, புரசைவாக்கம், கேசவப்பிள்ளை பூங்கா பகுதி–I திட்டப் பகுதியில் 71 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 864 அடுக்குமாடி குடியிருப்புகள்; சென்னை, எர்ணாவூர், இந்திரா காந்தி குப்பம் திட்டப் பகுதியில் 10 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 128 அடுக்குமாடி குடியிருப்புகள்; சென்னை, காலடிப்பேட்டை, டோபிகானா பகுதி–I திட்டப் பகுதியில் 10 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 128 அடுக்குமாடி குடியிருப்புகள்; சென்னை, மணலி புதுநகர் பகுதி–I திட்டப் பகுதியில் 31 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நில வங்கி திட்டம் பகுதி–I திட்டப் பகுதியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 92 அடுக்குமாடி குடியிருப்புகள்; கோவில்பட்டி நில வங்கி திட்டம் பகுதி–II திட்டப் பகுதியில் 10 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 120 அடுக்குமாடி குடியிருப்புகள்;

சென்னை, கோயம்பேட்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலப்பரப்பில், 3 அடித்தளங்கள், தூண் தளம் மற்றும் 9 மேல் தளங்களுடன் 1,88,237 சதுர அடி கட்டட பரப்பளவில், குளிர்சாதன வசதி, தீயணைப்புக் கருவிகள், குடிநீர் சுத்திகரிப்பு வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், சூரிய மின்சக்தி வசதியுடன் கூடிய மின்விளக்குகள், வாகனங்கள் நிறுத்துமிடம், 1,500 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் உள்ளிட்ட வசதிகளுடன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்ககம் ஆகிய துறைகளின் பயன்பாட்டிற்காக 105 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பன்னடுக்கு அலுவலகக் கட்டடம்;

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், பருத்திப்பட்டு கிராமத்தில் 10 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அம்மா திருமண மண்டபம்;

என மொத்தம் **573 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள், பன்னடுக்கு அலுவலகக் கட்டடம், அம்மா திருமண மண்டபம், ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.**

நாட்டிலேயே சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
விருதுநகரில் நடைபெற்ற விழாவில்
புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு
அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை – 01.03.2020.

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு மத்திய சுகாதாரம், குடும்ப நலம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் அவர்களே!

முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சுருக்கமாகச் சொன்னாலும், அற்புதமான கருத்துக்களை சொல்லி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே!

இம்மண்ணின் மைந்தர் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் திரு. K.T. ராஜேந்திரபாலாஜி அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி முன்னாள் அமைச்சர் சகோதரர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய கா.நவாஸ் கனி அவர்களே! மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி மு.சந்திரபிரபா அவர்களே! சட்டப்பேரவை உறுப்பினர் எம்.எஸ்.ஆர்.ராஜவர்மன் அவர்களே! மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி மா.வசந்தி அவர்களே! மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.எஸ்.கே.மயில்சாமி அவர்களே! மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு.வி.ஆரோக்கியராஜ் அவர்களே! மாவட்ட அறங்காவல் குழுத் தலைவர் திரு.எஸ்.பலராமன் அவர்களே! மாவட்ட பால்வளத் தலைவர் திரு.பா.கண்ணன் அவர்களே! மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவர் திரு.எம்.சித்திக் அவர்களே! மாவட்ட கூட்டுறவு பண்டக சாலைத் தலைவர் திரு.சரவணன் அவர்களே!

நாடாளுமன்ற முன்னாள் துணைத் தலைவர், முன்னாள் மத்திய அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் தம்பிதுரை அவர்களே! நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ரவீந்திரநாத் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மக்கள்

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் செயலாளர் திருமதி பீலா ராஜேஷ் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இரா.கண்ணன் அவர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே! பெரியோர்களே, தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக் கண் திறந்து கல்விப் புரட்சி செய்த கர்ம வீரர் காமராஜர், ஆன்மீக தொண்டாற்றிய ரமண மகரிசி, திருப்பாவை தந்து தமிழுக்கு தொண்டாற்றிய கோதை நாச்சியார், சதுரகிரி மலையில் வாசம் செய்யும் சித்தர்கள் போன்றவர்களால் பெருமை பெற்ற விருதுநகர் மாவட்டத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விருதுநகரில் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்ற நெடுநாளைய எதிர்பார்ப்பு எங்கள் அரசால் நனவாகி உள்ளது.

அதிலும், தேசிய நெடுஞ்சாலையில் அமைய உள்ள மருத்துவக் கல்லூரி ஒரு வரப்பிரசாதமாக அமைய இருக்கிறது. கல்விக்கும், கடின உழைப்புக்கும் பெயர் பெற்ற விருதுநகருக்கு, இந்த கல்லூரி மேலும் சிறப்பூட்டும்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, புதிதாக விருதுநகர் மாவட்டம் 1985ஆம் ஆண்டு மார்ச் 15இல் உருவாக்கப்பட்டது.

இம்மாவட்டத்திலுள்ள சிவகாசி ‘தொழில் நகரமாகவும்’, விருதுநகர் ‘வியாபார நகரம்’ ஆகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான நகராட்சிகளில் விருதுநகர் நகராட்சியும் ஒன்றாகும். இந்த நகராட்சி நூற்றாண்டு விழா காண உள்ளது என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில், விவசாயம், பட்டாசு, தீப்பெட்டி, அச்சு, ஸ்பின்னிங் மற்றும் விசைத்தறித் தொழில்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இங்கு உணவு தானிய பொருட்கள் வியாபாரமும், மலைத் தோட்ட விளை பொருட்கள் வியாபாரமும் பெரிய அளவில் நடைபெற்று வருகின்றன. உயர்ந்த ரக கருங்கண்ணி பருத்தி பல ஊர்களில் உள்ள ஆலைகளுக்கும், இங்கிருந்து தான் ஏற்றுமதியாகிறது.

தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட வேண்டும் என்று கோரிய தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் இம்மண்ணின் மைந்தர் ஆவார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், திருச்சுழி திருமேனிநாதர் திருக்கோயில், இருக்கன்குடி மாரியம்மன் கோயில், சவேரியார் தேவாலயம் போன்ற ஆன்மீகத் திருத்தலங்களும் விருதுநகருக்கு புனிதத்தன்மை தருகின்றன.

தமிழ்நாடு அரசின் சின்னத்தில் உள்ள கோபுரம், இம்மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோயில் கோபுரம் தான் என்பது பெருமைக்குரியது. அதிக செலவின்றி எளிதாக பராமரிக்கக் கூடியதாகவும், காவலுக்கு சிறந்ததாகவும் விளங்கும் நமது நாட்டின நாய்களில் மிகவும் பெயர் பெற்ற இராஜபாளையம், சிப்பிப்பாறை போன்ற நாட்டு இன நாய்கள் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவை.

அவற்றின் இனத் தூய்மையை பராமரிக்க மாண்புமிகு அம்மாவின் அரசு சமீபத்தில் தலைவாசலில் கால்நடை பூங்காவில் இதற்கென தனியாக ஒரு ஆராய்ச்சி மையமும், இனப்பெருக்க மையமும் ஒன்றினை அமைத்துள்ளது என்பதனை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிளவக்கல் அணை, சதுரகிரி சஞ்சீவி மலை, செண்பகத்தோப்பு காட்டு அணில் சரணாலயம், தேவதானம் அணைக்கட்டு, அய்யனார் அருவி போன்ற சுற்றுலாத் தலங்களைக் கொண்டது விருதுநகர் மாவட்டம்.

இத்தகைய பெருமை வாய்ந்த இம்மாவட்டத்தில், பள்ளிகள், கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் அதிக அளவில் உள்ளன.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழிக்கு ஏற்ப செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, விருதுநகர் மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க, மத்திய அரசின் ஆணையை பெற்று, இன்று அடிக்கல் நாட்டியுள்ளது.

இம்மாவட்டத்தில் தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரியையும் சேர்த்து 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கிட குறுகிய காலத்தில் மத்திய அரசின் ஆணையைப் பெற்று சரித்திர சாதனை படைத்த அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவக் கல்லூரி 2021–2022ஆம் கல்வி ஆண்டு முதல் 150 மாணவர் சேர்க்கையுடன் செயல்படத் துவங்கும். இக்கல்லூரி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு அலுவலரை நியமனம் செய்தும், கட்டடப் பணிகளுக்காக

இந்த ஆண்டு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய அரசு அம்மாவின் அரசு .

“ஏழையாக இருக்கிறோம் என்று கவலைப்பட வேண்டாம். நானும் ஏழையாகத்தான் பிறந்தேன், வளர்ந்தேன். அந்த ஏழ்மைதான் என்னை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றது என்றார்” ஒரு மேலை நாட்டு அறிஞர்.

மருத்துவக் கல்வி கற்க பணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, மருத்துவக் கல்லூரிகளை மாவட்டம் தோறும் தொடங்கி வருகிறது.

இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்களுக்கும் தரமான மருத்துவக் கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

“நோயை முற்றிலும் தவிர்ப்பது இயலாத ஒன்று ஆகும். எனவே தான், நோய் ஏற்படும்போது, அந்த நோயை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளித்து, அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்ற உயரிய இலக்குடன், சுகாதாரச் சேவைகளை அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், தகுதி வாய்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 18,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

★ இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் மட்டுமே 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனையில், அதிலும் குறிப்பாக 65 சதவீதம் அரசு மருத்துவமனைகளில் பிரசவங்கள் நடைபெறுகிறது. இது இந்தத் திட்டத்தின் வெற்றியைக் காட்டுகிறது.

★ தரமான உயர்நிலை மருத்துவ சிகிச்சைகளை அனைத்து பிரிவு மக்களும் சமமாக பெற வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ மருத்துவக் காப்பீட்டுத் தொகை தனியார் மருத்துவமனைகளில் நீங்கள் சிகிச்சை பெறவேண்டுமென்றால், 2 இலட்சம் ரூபாயாக காப்பீட்டுத் தொகை நிருணயம் செய்யப்பட்டது. அது போதாது என்று மக்களிடத்திலிருந்து கோரிக்கை வந்தவுடன், அரசு அந்த ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று உயர்தர சிகிச்சை பெறுவதற்கு ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி ஆணை வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

நாட்டிலேயே சுகாதாரத் துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. அரசின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் விளைவாக 2010ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகளுக்கு 24ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் தற்போது 16ஆக குறைந்துள்ளது. 90ஆக இருந்த தாய்மார்களின் இறப்பு விகிதம் தற்போது 57ஆக குறைந்துள்ளது. ஆகவே,

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இது சாத்தியமாகியிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக குறிப்பிட விரும்புகிறேன்.

நான் இந்த மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு அறிவித்த அறிவிப்புகள் சிலவற்றை இங்கே கோடிட்டு காட்டுகிறேன், சில பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

★ விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி நிறுவப்பட்டுள்ளது.

★ மூப்பியல் பிரிவு மற்றும் புற்றுநோய் பிரிவில் எக்கோ கார்டியோகிராம் கருவி வழங்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் டயாலிசிஸ் கருவியும் நிறுவப்பட்டுள்ளது.

★ DNB–மருத்துவ பட்ட மேற்படிப்பு தொடங்க அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

★ ஸ்ரீவில்லிபுத்தூர் மருத்துவமனையில் டயலாசிஸ் கருவி நிறுவப்பட்டுள்ளது.

★ சிவகாசி சுகாதார மாவட்டத்தில் துணை இயக்குநர் அலுவலகத்தில் தடுப்பு ஊசி மருந்துகள் சேமிப்பு கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது.

இது தவிர இந்த மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் கடந்த 3 ஆண்டுகளில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நீர் நிலைகளுக்கு புத்துயிர் ஊட்டிய குடிமராமத்து திட்டத்தின் கீழ், 47 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 146 ஏரிப் பணிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. குடிமராமத்து திட்டம் சிறப்பான திட்டம். பருவகாலங்களில் பெய்கின்ற பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு, விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, இந்த குடிமராமத்துத் திட்டத்தை கிராமங்களில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள், குட்டைகள், ஊரணிகளெல்லாம் தூர்வாரப்பட்டு, அதில், பெய்கின்ற மழைநீர் முழுவதும் தேங்கியிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றோம். அந்த வகையில் ஏற்கெனவே 146 பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. 15 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 35 பணிகள் தற்போது இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

★ முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை நான் ஏற்கெனவே அறிவித்தேன். மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் தங்களது பிரச்சினைகளை அலுவலகத்திற்கு சென்று மனு கொடுக்க வேண்டும். அதற்குப் பதிலாக, முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம், அந்தந்த பகுதியிலே மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரிலே அங்கிருக்கின்ற அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக மனுக்களைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தீர்வு காண்கிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் 8 ஆயிரத்து 251 மனுக்கள் பெறப்பட்டு, 4 ஆயிரத்து 9 மனுக்களின் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மூன்றே மாதங்களில் தீர்வு காணப்பட்டுள்ளது என்று சொன்னால், இந்த அரசின் நடவடிக்கை எப்படி இருக்கிறது என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். **இவற்றில் முதியோர் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த 3,009 விண்ணப்பங்களில் 2,263 விண்ணப்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற ஒரே ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.**

★ பள்ளி, கல்லூரி, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி பயிலும் 79 ஆயிரத்து 675 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படுகிறது. இது சாதாரண விஷயமல்ல, ஒரு மடிக்கணினி 12,000 ரூபாய். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

அரசு மருத்துவமனைகளில் பிறந்த 6 ஆயிரத்து 321 குழந்தைகளுக்கு, 16 பொருட்கள் அடங்கிய “அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்” கொடுத்தது அம்மாவினுடைய அரசு தான்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

தமிழகத்தில் படிக்கின்ற மாணவ, மாணவியருக்கு விஞ்ஞானக் கல்வி கொடுக்க வேண்டும், உலகத் தரத்திற்கேற்ற கல்வி கொடுக்க வேண்டும், அப்பொழுதுதான் நம்முடைய மாணவர்கள் பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, உயர்கல்வி போகின்றபொழுது, ஒரு தரமான கல்வி கிடைக்கும். அப்படி தரமான கல்வி கிடைக்கின்றபொழுது, அவர்கள் வேலைவாய்ப்பை பெற முடியும். அதற்காக அம்மாவினுடைய அரசு கொண்டு வந்த அற்புதமான திட்டம் மடிக்கணினி திட்டம். இந்த மடிக்கணினித் திட்டத்தை இன்றைக்கு தமிழகம் முழுவதும் ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியருக்கும் விஞ்ஞானக் கல்வி கொடுத்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு தான்.

★ அரசு மருத்துவமனைகளில் பிறந்த 6 ஆயிரத்து 321 குழந்தைகளுக்கு, 16 பொருட்கள் அடங்கிய "அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்" கொடுத்தது அம்மாவினுடைய அரசு தான்.

★ மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் 59 ஆயிரத்து 504 குறு, சிறு விவசாயிகளுக்கு 398 கோடி ரூபாய் பயிர்க்கடனை கொடுத்திருக்கிறோம்.

★ பசுமை வீடுகள் 914 பேருக்கு கொடுத்திருக்கிறோம்.

★ மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கியின் மூலமாக, 820 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பு முகாம் மூலம் 2 ஆயிரத்து 749 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை தந்த அரசு அம்மாவினுடைய அரசு. 857 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

★ இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா 2016 சட்டமன்றத் தேர்தலின்போது, நான் மீண்டும் முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் வழங்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வாக்குறுதி அளித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்தாலும், மாண்புமிகு அம்மா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற விதமாக, இந்த மாவட்டத்தில் மட்டும் 5,976 உழைக்கின்ற மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையில் கொடுத்திருக்கிறோம். அதற்கு மட்டும் மானியம் 10 கோடியே 32 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம்.

★ 1,510 பேருக்கு கறவை பசுக்கள் கொடுத்திருக்கிறோம்.

★ 14,153 பெண் தொழிலாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் கொடுத்திருக்கிறோம்.

★ 5 ஆயிரத்து 371 பேருக்கு தாலிக்குத் தங்கம் கொடுத்திருக்கிறோம்.

★ திருமண உதவித் திட்டத்தின் கீழ் தாலிக்குத் தங்கம் 5 ஆயிரத்து 280 பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு 50,000 ரூபாய் நிதியுதவியுடன் கொடுத்திருக்கிறோம்.

★ சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், முதியோர் உட்பட 56 ஆயிரத்து 55 நபர்களுக்கு தலா 1,000 ரூபாய் ஓய்வூதியமாக இந்த மாவட்டத்தில் மட்டும் வழங்கியிருக்கிறோம்.

★ சுமார் 70 ஆயிரத்து 961 ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை 10 கோடியே 74 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ சாத்தூரில், மதுரை–கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் வைப்பாற்றின் குறுக்கே 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டப்பட்டுள்ளது.

★ அதேபோல, கட்டனூர் சாலை, சாத்தூர்–சிவகாசி–கழுகுமலை சாலை, சாத்தூர்–சிவகாசி–கழுகுமலை சாலை சத்திரப்பட்டி ஆகிய இடங்களில் புதிய பாலங்கள் அமைக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

★ சீரான, தடையற்ற மின்விநியோகத்தினை உறுதி செய்யும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, 36.9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சவாசுபுரத்தில் துணை மின் நிலையம் அமைத்துள்ளது.

★ அதேபோல, மல்லாங்கிணறு, நல்லமநாயக்கன்பட்டி, துலுக்கப்பட்டியில் 38.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ 14.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அருப்புக்கோட்டை, சாத்தூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது.

★ வைப்பாற்றின் குறுக்கே அச்சங்குளம் மற்றும் கோட்டைப்பட்டி கிராமத்தில் சுமார் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

இது தவிர, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. சுமார் 445 கோடி ரூபாய் மதிப்பிலான அருப்புக்கோட்டை, சாத்தூர் மற்றும் விருதுநகர் நகராட்சிகளுக்கான தாமிரபரணி ஆற்று நீரை நீராதாரமாக கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் உட்பட 828 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். நீங்கள் குடிநீர் வேண்டுமென்று கேட்கிறீர்கள். மாண்புமிகு இந்த மண்ணின் மைந்தர் மரியாதைக்குரிய சகோதரர் திரு.ராஜேந்திர பாலாஜி அவர்களும், உங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும் இந்தப் பகுதிக்கு நிலையான பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 445 கோடி ரூபாயில் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

விருதுநகர், சாத்தூர், சிவகாசி, அருப்புக்கோட்டை மற்றும் வெம்பக்கோட்டை ஒன்றியங்களுக்கு உட்பட்ட சுமார் 755 ஊரக குடியிருப்புகள் பயன்பெறும், 234 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தாமிரபரணி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்ட "கூட்டுக் குடிநீர் திட்டம்" உட்பட 253 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 25 பணிகளை நான் திறந்து வைத்துள்ளேன்.

கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக நான் குறிப்பிட்ட பகுதிகளுக்கு 725 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

அதே போல, 22,350 பயனாளிகளுக்கு சுமார் 47 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்று வழங்க உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் சுமார் 900 பட்டாசு தொழிற்சாலைகளின் மூலம், 8 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. பட்டாசு வழக்கு உச்சநீதிமன்றத்தில் வந்தபோது, பட்டாசு உற்பத்தியாளர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டுமென்று உங்களுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியிலிருக்கின்ற பட்டாசு தொழிலதிபர்களை அழைத்து வந்து என்னை சந்தித்தார். உச்சநீதிமன்றத்திலே வழக்கு நடைபெறுகின்றது, அந்த வழக்கில் அரசும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதன்படி, அரசும் அந்த வழக்கிலே சேர்த்துக் கொள்ளப்பட்டு, மூத்த வழக்கறிஞரை அரசின் சார்பாக வைத்து, உச்சநீதிமன்றத்தில் வாதாடி, நல்ல தீர்ப்பைப் பெற்றுத் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. சிவகாசி என்று சொன்னாலே, பட்டாசு தான் ஞாபகத்திற்கு வரும். ஆகவே, இன்றைக்கு பட்டாசு உற்பத்தி செய்கின்ற முதலாளிகளுக்கும், பணிபுரிகின்ற தொழிலாளிகளுக்கும் பாதுகாப்பு அளித்த ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை கோடிட்டுக் காட்ட விழைகின்றேன்.

அமைதி, வளம், வளர்ச்சி என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழியை பின்பற்றி கடந்த மூன்று

அமைதி, வளம், வளர்ச்சி என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழியை பின்பற்றி கடந்த மூன்று ஆண்டுகளாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ஆண்டுகளாக மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

★ காவேரி ஆற்றின் உபரி நீரை விருதுநகர் மாவட்டம் குண்டாற்றிற்கு கொண்டு வர திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

★ இதன்படி காவிரி உபரி நீர் மாயனூர் கதவணையிலிருந்து திருப்பப்பட்டு, கரூர், திருச்சி, சிவகங்கை, விருதுநகர் வரை – புதிய கால்வாய் வெட்டப்பட்டு தண்ணீர் கொண்டுவரப்பட்டு, குண்டாற்றில் இணைக்கப்பட்டு, இந்த மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பாசன வசதி பெறும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

★ அதேபோல உங்களுடைய மாவட்ட அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்த கோரிக்கைகளை ஏற்று, சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

புதிய அறிவிப்புகள்

1. பொது மக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய சேதமடைந்த சிறிய கட்டடத்தில் இயங்கி வரும் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் அமைத்துத் தரப்படும்.

2. பொதுமக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய கட்டடத்தில் இயங்கி வரும் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் அமைத்துத் தரப்படும்.

3. பொதுமக்கள் மற்றும் அலுவலர்களின் சிரமத்தை போக்கும் வண்ணம் பழைய கட்டடத்தில் இயங்கி வரும் விருதுநகர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் அமைத்துத் தரப்படும்.

4. சுமார் 77,000 மக்கள் தொகை கொண்ட திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு புகை, மாசு அல்லாத சுற்றுச் சூழலுக்கு உகந்த பொது எரிவாயு தகன மயானம் அமைக்கப்படும்.

5. சுமார் 55,000 மக்கள் தொகை கொண்ட திருத்தங்கல் நகராட்சிக்கு புகை, மாசு அல்லாத சுற்றுச் சூழலுக்கு உகந்த பொது எரிவாயு தகன மயானம் அமைக்கப்படும்.

6. மலைவாழ் பழங்குடியினரின் நலன் கருதி, வத்திராயிருப்பு வட்டம், கான்சாபுரத்திலிருந்து மலைவாழ்

புற்றுநோய் சிகிச்சைக்கு, உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல்முறையாக தலா 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 Linear Accelerator கருவிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

பழங்குடியினர் வசிக்கும் அத்திக்கோவிலுக்கு செல்லும் சாலையில் சிற்றாற்றின் குறுக்கே ஒரு உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும்.

7. சாத்தூர் வட்டம், மேலமடை வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள தென் மாவட்டங்களில் பிரசித்திபெற்ற அருள்மிகு இருக்கன்குடி மாரியம்மன் கோயிலுக்குச் செல்ல அர்ஜீனா நதி மற்றும் வைப்பாறு நதி ஆகியவற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

8. திருச்சுழி வட்டம், திருச்சுழி–பள்ளிமடம் கிராமங்களுக்கு இடையேயும் மற்றும் திபச்சேரி–பனையூர் செல்லும் சாலையிலும், அப்பகுதியிலுள்ள 40 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் குண்டாற்றின் குறுக்கே இரண்டு உயர்மட்டப் பாலங்கள் கட்டித் தரப்படும்.

9. கடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் போது சிவகாசி மாநகராட்சியாக்கப்படும் என அறிவித்தேன். அதற்கான பூர்வாங்க பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

10. நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தல் முடிவுற்றதும், இது நடைமுறைக்கு வரும் எனத் தெரிவித்து, சுமார் 3 இலட்சத்திற்கு மேலான மக்கள்தொகை கொண்ட சிவகாசி நகராட்சி உருவாக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நடைபெறும் நிலையில், அந்த நகராட்சிக்கு சாலை, பூங்கா, மின்விளக்கு, வடிகால் வசதி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும். அதுவும் இந்த மண்ணின் மைந்தர் மாண்புமிகு அமைச்சர் திரு. ராஜேந்திரபாலாஜி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இந்த சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

11. பக்தர்கள் மற்றும் சிவகாசி மக்களின் நெடுங்கால கோரிக்கையான காசி விசுவநாதர் திருக்கோவில் இராஜ கோபுரம் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

12. பக்தர்கள் மற்றும் திருத்தங்கல் மக்களின் நெடுங்கால கோரிக்கையான திருநின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் இராஜ கோபுரம் அமைக்க 3 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும்.

மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது, தமிழகத்தை 2025க்குள் காசநோய் இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நிச்சயமாக மாண்புமிகு அம்மாவுடைய அரசு துரிதமான நடவடிக்கைகளை எடுத்து 2025க்குள் காசநோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உருவாக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, கடந்த 16 ஆண்டு காலமாக போலியோ இல்லாத மாநிலம் தமிழ்நாடு என்ற நிலையை எட்டியிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். அதேபோல, உறுப்புமாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து 6 ஆண்டுகளாக தேசிய விருதினை பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை பெற்றிருக்கிறது. **உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற்று வருகிறது.**

இரண்டு கைகளும் இல்லாத திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த திரு. நாராயணசாமி என்ற தொழிலாளி தனக்கு இரண்டு கையும் பொருத்த வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கையை ஏற்று நம்முடைய மருத்துவக் குழு இரவு பகல் பாராமல் பணி செய்து அவருக்கு இறந்தவரின் உடலிருந்து இரண்டு கைகளை எடுத்து, அவருக்கு பொருத்தி சாதனை படைத்த அரசு அம்மாவுடைய அரசு. மருத்துவத் துறையிலே இதனை ஒரு மைல்கல் என்று சொல்லலாம். அந்தளவுக்கு தமிழகத்திலே மருத்துவத்துறை சிறந்து விளங்கி கொண்டு இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு **இருதய மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் எல்லாம் தமிழ்நாட்டிலேயே பல்வேறு மருத்துவமனைகளிலே ஏழை, எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன** என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், Heart Attack வந்தால் Stent வைத்து காப்பாற்றக் கூடிய அளவிற்கு எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இன்றைக்கு கேத்லாப் கருவிகளை நாங்கள் கொடுத்திருக்கின்றோம். இதனால் ஏழை, எளிய மக்கள் உடனடியாக Stent வைக்கக் கூடிய அளவிற்கு நமது மருத்துவமனைகள் உயர்ந்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டால் தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் டயாலிசஸ் செய்வதற்கு பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவாகும்.

அதைப் போக்குவதற்காக தாலுகா மருத்துவமனைகள் வரை டயாலிசஸ் சிகிச்சை அளிக்க கருவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய திரு. நரேந்திர மோடி அவர்கள் மதுரைக்கு வந்து அடிக்கல் நாட்டினார்கள். மிக விரைவாக, அந்தப் பணிகள் விரைவிலேயே துவங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மருத்துவமனை டெல்லியில் இருக்கின்ற எய்ம்ஸ் மருத்துவமனைக்கு நிகராக இருக்கும் என்று நம்முடைய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே, இவையெல்லாம் மத்தியிலே இணக்கமான உறவு இருக்கின்ற காரணத்தினாலே, மத்திய அரசிடமிருந்து நம்முடைய மக்களுக்கு உயர்தர சிகிச்சை அளிப்பதற்காக தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதோடு, புற்றுநோய் சிகிச்சைக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல்முறையாக தலா 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 Linear Accelerator கருவிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை ஓமந்தூரார் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனைகளில் Linear Accelerator கருவிகள் பொருத்தப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் மேலும் 9 மருத்துவமனைகளில் Linear Accelerator கருவிகள் அமைக்கப்படவுள்ளன. அதுபோல புற்றுநோயை கண்டுபிடிக்க PET CT Scan கருவி தலா 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 மருத்துவமனைகளில் அமைக்கப்படவுள்ளன. இதை எல்லாம் எதற்காக சொல்கிறேன் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் மறைவிற்கு பிறகு, அம்மா அவர்களின் வழியிலே வந்த அம்மாவுடைய அரசு எந்தளவிற்கு ஏழை, எளிய மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தனியார் மருத்துவமனைகளைவிட கூடுதல் வசதிகளை கொண்ட மருத்துவமனைகளாக அரசு மருத்துவமனைகளை உருவாக்கி இருக்கின்றோம். உயர்ரக மருத்துவக் கருவிகளை அமைத்து, நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசின் தைரியமான, விவேகமான நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில் ஒவ்வொரு துறையும் தொடர்ந்து பல்வேறு விருதுகளை பெற்று, தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உரிமையடா"

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடலை நினைவு கூர்ந்து, இந்த நிகழ்வினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் சிறுபான்மை மக்களுக்கு சிலர் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மாவுடைய அரசு சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அரசாக திகழ்ந்து வருகிறது. இன்றைக்கு என்.பி.ஆர்., தேசிய மக்கள் தொகை பதிவேடு, மக்கள் தொகை கணக்கெடுப்பு, அதாவது சென்செஸ். இதனை கணக்கெடுக்க இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டை பொறுத்த வரைக்கும் இந்த என்.பி.ஆர்.–இல் பல்வேறு சந்தேகங்கள் சிறுபான்மை மக்களுக்கு இருந்து கொண்டு இருக்கின்றன. அந்த என்.பி.ஆர்.இல் தான் 2011இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே முதல்முதலாக கணக்கெடுக்கப்பட்டது. அந்த 2011இல் கணக்கெடுக்கப்பட்ட அந்த பட்டியலிலே இப்பொழுது மூன்று கேள்விகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. ஒன்று எந்த மொழி பேசுகிறீர்கள் என்று, இரண்டாவது தாய் தந்தையர் பிறந்த இடம், மூன்றாவது ஆதார் அட்டை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை குறித்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. ஆனால், மத்திய அரசு தெளிவாக சொல்லிவிட்டது, இவை இருந்தால் வழங்கலாம். இல்லாவிட்டால் வழங்க தேவையில்லை என்று. இந்த மூன்றும் உங்களுக்கு தெரிந்தால் சொல்லலாம், இல்லாவிட்டால் தேவையில்லை என்று தெளிவாக சொல்லப்பட்டு விட்டது.

ஆகவே, சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையே இல்லை. வேண்டுமென்றே சில எதிர்க்கட்சியினர் தூண்டிவிட்டு சிறுபான்மை மக்களை குழப்பி, பொய்யான செய்தியை, அவதூறான செய்தியை நாள்தோறும் சொல்லி, சொல்லி அவர்களது மனதில் ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்திவிட்டார்கள்.

நாங்கள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சொல்லி கொள்கிறோம். சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையில்லை. எந்தவிதத்திலும் தமிழ்நாட்டில் பிறந்த, தமிழ் மண்ணில் பிறந்த எந்த ஒரு சிறுபான்மை மக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற உறுதியை இந்த அரசு தருகிறது. அமைதியான மாநிலம் தமிழ்நாடு. அமைதிப் பூங்காவாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது. ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்கி இன்றைக்கு அரசியல் ஆதாயம் தேட எதிர்க்கட்சிகள் முயல்கின்றன. அதற்கு நீங்கள் துணை போக வேண்டாம் என்று சிறுபான்மை மக்களை தாழ்மையோடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, வண்ணாரப்பேட்டையில் இருந்து இஸ்லாமிய அமைப்பை சேர்ந்த நிருவாகிகளும், இஸ்லாமிய மதத்தை சேர்ந்த சகோதர, சகோதரிகளும் என்னை வந்து சந்தித்தார்கள். அதேபோல பல்வேறு மாவட்டத்திலிருந்து இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர்கள் என்னை சந்தித்தார்கள். ஒரு அச்ச உணர்வை தெரிவித்தார்கள். நான் அவர்களிடத்திலே தெளிவாகச் சொன்னேன். தமிழ் மண்ணில் பிறந்த எந்த ஒரு இஸ்லாமியரும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று தெளிவாகச் சொன்னேன். ஆகவே, நீங்கள் அச்சப்பட வேண்டியதே இல்லை. நமது பக்கத்து மாநிலங்களான ஆந்திரா மாநிலம், தெலுங்கானா மாநிலம், போன்ற மாநிலங்களிலேயே எப்படி என்.பி.ஆர். எடுக்கின்றார்களோ, அதையே நாங்கள் கடைப்பிடிப்போம் என்பதை தெளிவுபடுத்தி விட்டோம். மத்திய அரசும் தெளிவுப்படுத்தி விட்டது. என்.பி.ஆர். எடுக்கின்றபோது நீங்கள் எந்த ஆதாரமும் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விரும்பினால் சொல்லலாம், விருப்பம் இல்லாவிட்டால் அந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் சொல்லத் தேவையில்லை என்று தெரிவித்து விட்டார்கள். ஆனால், சிலர் வேண்டுமென்றே திரும்ப திரும்ப இஸ்லாமிய மக்களிடையே ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தி, இன்றைக்கு அவர்களுக்கு ஒரு நிம்மதியில்லாத வாழ்க்கையை உருவாக்கி இருக்கிறார்கள்.

சிறுபான்மை மக்களை நாங்கள் கேட்டுக் கொள்வது எல்லாம், எங்களுடைய அரசு, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலும் சரி, இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் காலத்திலும் சரி, எங்களது ஆட்சி காலத்திலும் சரி, நாங்கள் உங்களுக்கு துணை நிற்போம். உங்களுக்கு அரணாக இருப்போம். உங்கள் பாதுகாவலராக இருப்போம். ஆகவே, சிறுபான்மை மக்கள் அச்சப்பட தேவையில்லை. நீங்கள் இயல்பு வாழ்க்கை வாழுங்கள். இஸ்லாமிய பெண்கள் இரவு நேரங்களில் கூட சாலையிலே அமர்ந்து போராடிக் கொண்டு இருக்கிறார்கள். தயவு செய்து, அன்புகூர்ந்து நான் கேட்டுக் கொள்வது எல்லாம், அதை தவிர்த்து விட்டு, அரசிற்கு ஒத்துழைப்பு நல்குங்கள். நீங்கள் எண்ணுகின்றபடி இந்த அரசாங்கம் உங்களுக்கு ஒத்துழைக்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, என்.ஆர்.சி. பற்றி மத்திய அரசு கேட்கவில்லை. அதைப்பற்றி நமக்கு தேவையில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த, அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்து, அதோடு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடத்திலே தமிழகத்தின் 11 மாவட்டங்களுக்கு புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் வேண்டும் என்று கேட்டோம். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி 11 மாவட்டங்களுக்கும் புதிய மருத்துவக் கல்லூரிகளை வழங்கிய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடிஜி அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, இந்த மருத்துவக் கல்லூரி வருவதற்கு எனக்கு துணையாக நின்ற நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக நின்ற துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும், மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து, விடைபெறுகின்றேன்,

நன்றி! வணக்கம்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 2020ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் வழங்கினார்கள் – 09.03.2020.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 09.03.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ரா.கண்ணகி அவர்களுக்கு, மகளிர் சுயஉதவிக் குழுக்களை அமைக்க ஊக்கப்படுத்தியது, ஆதரவற்ற சடலங்களுக்கு இறுதி சடங்குகளை மேற்கொண்டது, குடிசை வீடுகளை ஒட்டு வீடுகளாக மாற்ற நடவடிக்கைகள் எடுத்தது போன்ற பல்வேறு சமூகநலப் பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றியதற்காக 2020ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதினை வழங்கி சிறப்பித்தார்கள்.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம், சமூகத்திற்கு தனித்துவமான பங்களிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கௌரவப்படுத்தும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில், ஒருவரை தேர்ந்தெடுத்து அவருக்கு அந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி “அவ்வையார் விருது” எனும் உயரிய விருது வழங்கப்படும் என்றும், இந்த விருது பெறுபவருக்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, 2012ஆம் ஆண்டு முதல் “அவ்வையார் விருது” வழங்கப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ரா.கண்ணகி அவர்கள் 1992ஆம் ஆண்டு முதல் பல்வேறு சமூகப் பணிகளில் முழுமையாக தன்னை அர்ப்பணித்து தொண்டாற்றி வருகிறார். சுமார் 350க்கும் மேற்பட்ட குடிசை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றுவதற்கு பெரும் பங்காற்றியுள்ளதோடு, மகளிர் சுயஉதவிக் குழுக்களை அமைப்பதிலும் முன்னோடியாக திகழ்ந்து வருகிறார்.

திருமதி ரா.கண்ணகி அவர்கள், கடந்த 12 ஆண்டுகளாக திருவண்ணாமலை நகராட்சி, வார்டு 16இல் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்கப்படுத்துபவராக பணியாற்றி, 528 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒருங்கிணைப்பாளராக செயலாற்றி வருவதோடு, விழுதுகள் என்ற பகுதி அளவிலான கூட்டமைப்பையும் துவக்கி நடத்தி வருகிறார்.

தகன மேடைகளில் சடலங்களை எரிக்கும் பணிகள் ஆண்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழலில், அதனைத் தகர்த்து, பெண்களாலும் அப்பணியை மேற்கொள்ள இயலும் என்பதை நிரூபிக்கும் வகையில், துணிச்சலுடன் திருமதி ரா.கண்ணகி அவர்கள் திருவண்ணாமலை நகராட்சியில் எரிவாயு தகன மேடை பொறுப்பாளராக பணியாற்றி வருகிறார். மேலும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதரவற்ற சடலங்களுக்கு சட்ட விதிமுறைகளின்படி இறுதி சடங்கினை மேற்கொண்டுள்ளார். இவரின் தன்னலமற்ற சேவைகளுக்காக மாவட்ட அளவில், 2016ஆம் ஆண்டின் மகளிர் தின விருது, 2018ஆம் ஆண்டிற்கான குடியரசு தின விருது, மண்கழிவுகள் மேலாண்மைக்காக 2018ஆம் ஆண்டிற்கான சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான விருது ஆகிய விருதுகளை பெற்றுள்ளார்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் சமூகசேவை புரிந்துவரும் திருமதி ரா.கண்ணகி அவர்களை கௌரவிக்கும் பொருட்டு, 2020ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதுக்கு தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்டார். அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், திருமதி ரா.கண்ணகி அவர்களுக்கு அவ்வையார் விருதுக்கான ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்கள். அவ்வையார் விருதினை பெற்றுக் கொண்ட திருமதி ரா.கண்ணகி அவர்கள், தனது சமூக சேவையினை அங்கீகரித்து விருது வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

படமும்/செய்தியும்

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஔவையார் சிலைக்கு மாலை அணிவித்தல்!

08.03.2020 அன்று சென்னை மெரினா, காமராசர் சாலையில், தமிழ்நாடு அரசின் சார்பில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, தமிழ்ப் பெரும்புலவர் ஔவை பெருமாட்டியாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை சார்பில் ரூ.14.13 கோடி மதிப்பீட்டில் காவலர் குடியிருப்புகள் மற்றும் இதர கட்டடங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் திறந்து வைத்தார்கள் – 19.02.2020.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் கடலூர் மாவட்டம், புவனகிரியில் 3 கோடியே 37 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 10 கோடியே 76 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவலர் குடியிருப்புகள், 3 காவல் நிலையங்கள், 2 காவல்துறை இதர கட்டடங்கள், 1 வட்டார தடய அறிவியல் ஆய்வகக் கட்டடம், 1 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 12 குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது.

மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடலூர் மாவட்டம், புவனகிரியில் 3 கோடியே 37 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 21 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இக்காவலர் குடியிருப்பு, 17 காவலர் மற்றும் தலைமைக் காவலர் குடியிருப்புகள், 3 உதவி ஆய்வாளர் குடியிருப்புகள் மற்றும் ஒரு ஆய்வாளர் குடியிருப்புகளை கொண்டது. மேலும், இக்குடியிருப்புகள், ஆழ்துளை கிணறு, நீர்தேக்க தொட்டிகள், கழிவுநீர் மற்றும் குடிநீர் வசதி, மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், திண்டுக்கல் மாவட்டம் – கன்னிவாடியில் 88 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவலர் குடியிருப்புகள்;

செங்கல்பட்டு மாவட்டம் – சதுரங்கபட்டினம், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர், சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை (போக்குவரத்து காவல் நிலையம்) ஆகிய இடங்களில் 2 கோடியே 40 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 காவல் நிலையங்கள்;

ஈரோடு மாவட்டம் – ஈரோட்டில் 94 இலட்சத்து 1 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகக் கட்டடம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் – தாழையூத்தில் 54 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

சேலம் மாவட்டம் – ஜாகீர் அம்மாபாளையத்தில் 3 கோடியே 1 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டார தடய அறிவியல் ஆய்வகக் கட்டடம்;

மதுரை மாவட்டம் – கொட்டாம்பட்டியில் 1 கோடியே 9 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடம்;

ஈரோடு மாவட்டம் – ஈரோட்டில் 1 கோடியே 87 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 12 குடியிருப்புகள்;

என மொத்தம், 14 கோடியே 13 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, தடய அறிவியல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

படமும்/செய்தியும்

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கான புதிய கட்டடங்கள் திறப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.03.2020 அன்று மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற விழாவில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கான புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தார்கள். உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ.பன்னீர்செல்வம்**, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முன்னாள் மக்களவை துணைத் தலைவர், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

ஹஜ் விண்ணப்பங்கள் - தமிழகத்துக்கு கூடுதல் இடங்கள் ஒதுக்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 24.02.2020.

இந்த ஆண்டு ஹஜ் புனித யாத்திரை செல்வதற்காக 7 குழந்தைகள் உள்பட 6,028 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டிக்கு வந்துள்ளன. ஆனால், இந்திய ஹஜ் கமிட்டியால், தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஹஜ் புனித யாத்திரைக்கான ஒதுக்கீட்டு இடங்கள் 3,736 மட்டுமே.

தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும், புனித யாத்திரைக்கான தங்களுடைய விண்ணப்பங்கள் இறுதி செய்யப்படும் என்று நம்பிக்கையோடு இருக்கின்றனர். பல மாநிலங்கள் ஹஜ் ஒதுக்கீட்டுக்கான தங்களுடைய ஒதுக்கீடுகளை முழுமையாக பயன்படுத்தாமல், பல்வேறு காரணங்களால் ரத்து செய்திருப்பதால் ஹஜ் புனித யாத்திரைக்கான ஒதுக்கீட்டு இடங்கள் காலியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டி பரிந்துரை செய்யும் புனித யாத்திரை செல்வதற்காக 6,028 விண்ணப்பங்களையும் இறுதி செய்ய வேண்டும் என்று சிறுபான்மை நலத்துறை அமைச்சகத்தை அறிவுறுத்த வேண்டும்.

கிராமம் முதல் நகரம் வரை மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிப்பதிலே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது!

சென்னையில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத் துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 03.03.2020.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்பான தலைமை உரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே சிறப்பான முன்னிலை உரை ஆற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு வனத் துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களே!

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களே!

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என். நடராஜன் அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்களே!

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி அவர்களே!

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்களே!

மாண்புமிகு புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி மற்றும் முன்னாள் அமைச்சர் திரு.என்.தளவாய் சுந்தரம் அவர்களே!

World Bank Country Director for India Respected Mr. Junaid Kamal Ahmad!

World Bank Task Team Leader Dr. Rifat Hasan!

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மரியாதைக்குரிய நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களே!

மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அப்போலோ நிருவாக இயக்குநர் மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களே!

டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழக வேந்தர், புதிய நீதிக் கட்சியின் தலைவர் திரு.ஏ.சி.சண்முகம் அவர்களே!



சவிதா பல்கலைக்கழக வேந்தர் மரியாதைக்குரிய திரு.வீரையன் அவர்களே!

வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் மரியாதைக்குரிய திரு.ஐசரி கணேஷ் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுச் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களே மற்றும் அனைத்து மருத்துவ நிபுணர்களே!

வருகை தந்திருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத் துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நீடித்து நிலைக்கக்கூடிய வளர்ச்சி குறியீடுகளில், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் முயற்சிகளால் தமிழ்நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக இருந்து வருகிறது. மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து எங்களுடைய அரசும் சுகாதாரத் துறை மூலம் சிறப்பான மருத்துவ சேவைகளை வழங்கி வருவதால் நமது மாநிலத்தில் கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் ஒரு இலட்சம் பிரசவத்திற்கு 67ஆகவும், சிசு இறப்பு விகிதம் ஆயிரம் குழந்தை பிறப்பிற்கு 16ஆகவும் இங்கே உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். தேசிய அளவில் முறையே 122 மற்றும் 30ஆக உள்ளதைவிட தமிழ்நாட்டில் இவ்விகிதம் மிகவும் குறைவாக உள்ளது மாண்புமிகு அம்மாவின் அரசின் சாதனையாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், 2030ஆம் ஆண்டுக்குள் தாய்மார்கள் இறப்பு விகிதத்தை 30ஆக குறைப்பதே எங்களுடைய அரசின் நோக்கம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

Tamil Nadu has been gradually on the forefront in achieving the Sustainable Development Goals in

“மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் முயற்சிகளால் தமிழ்நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. இந்திய அளவில் தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக இருந்து வருகிறது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

Maternal Mortality Ratio (MMR) and Infant Mortality Rate (IMR).

It has also emerged as a model state to provide quality health care to its population, which is evident by the current MMR and IMR which are 67 per one lakh live births and 16 per 1000 live births respectively, which are well below the National Average of 122 and 30 respectively. We are aiming to achieve the MMR of 30 before 2030.

மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டும் என்பது இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நோக்கமாகவும் கொள்கையாகவும் இருந்தது. இது சம்பந்தமாக நாங்கள் **ஒரு சரித்திர சாதனையை நிகழ்த்தி உள்ளோம். இன்றைக்கு தமிழகத்தில் 11 மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள், 3 ஆயிரத்து 995 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவிட மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று அந்த மருத்துவக் கல்லூரிகள் எல்லாம் இன்றைக்குத் துவக்கப்பட்டு வருகின்றன.** அந்த விவரங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

01.03.2020 அன்று இரண்டு மருத்துவ கல்லூரிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மட்டும் தான் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், உயர்ந்த அளவாக 18,000 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 53.78 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5 ஆயிரத்து 223 கோடி ரூபாய் நிதி உதவியாக அரசால் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அண்டை மாநிலங்களும் நமது திட்டத்தைப் பின்பற்றத் தொடங்கி உள்ளன.

நமது மாநிலத்தில் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் மூலம், ஏழை, எளிய மக்கள் உயர்தர மருத்துவ சிகிச்சையை கண்டறிந்து, கட்டணமின்றி பெற முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஜனவரி 2012 முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் 1,027 மருத்துவ மற்றும் சிகிச்சை முறைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதுவரை, தமிழகத்தில் 42 இலட்சம் பயனாளிகள், 6 ஆயிரத்து 740 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும், இத்திட்டத்துடன் மத்திய அரசின் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா இணைக்கப்பட்டு, ஏற்கெனவே மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் ரூபாய் 2 இலட்சம் வரை அனுமதிக்கப்பட்டு வந்தது. அதைத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுகின்றவர்களுக்கு காப்பீட்டுத் தொகை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி அரசால் வழங்கப்படுகிறது.

இறந்தவர்களின் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்ந்து 5 ஆண்டு காலமாக தேசிய விருதை தமிழ்நாடு அரசு பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மாற்று அறுவை சிகிச்சை ஆணையத்தை நிறுவி, இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை திட்டத்தை செயல்படுத்துவதில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், **2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு சிறந்த மாநில விருதை மத்திய அரசிடமிருந்து பெற்று வருகிறது.**

நகர்ப்புறப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம் ஆயிரத்து 634 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிறுவனம் ஆயிரத்து 388 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியுள்ளது.

With a vision to specifically achieve the Sustainable Development Goals, I take pride in launching the Tamil Nadu Health System Reform Program. This reform programme supported by the World Bank at an estimated cost of 410 Million US dollars, roughly two thousand 857 crore rupees was possible due to the sincere efforts taken and the results achieved while implementing the Tamil Nadu Health Care Projects Phase I and Phase II by the Health Department of Government of Tamil Nadu. I appreciate the Project Team which was in place right from 2004 onwards. I also thank the World Bank for its continuous support. This 5 year Reform Program focuses on 3 key areas, namely Improved Quality of Care, Management of Non-Communicable Diseases and Injuries and Reduced equity gaps in Reproductive and Child Health.

இத்திட்டத்தின் கீழ், அனைத்து நிலைகளிலும் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு தரச்சான்றிதழ் வழங்கும்

பணி மேற்கொள்ளப்படும். இதனால் நமது மாநிலத்தில் சுகாதார வசதிகள் பெருகி, நோயாளிகளுக்கு மேலும் தரமான சிகிச்சை வழங்கப்படும்.

தேசிய அளவில் மக்களிடையே தொற்று நோய் அதிகமாக இருந்த நிலை மாறி, தற்பொழுது தொற்றா நோய் அதிகமாக உள்ளது. தமிழ்நாடு இதனை கவனத்தில் கொண்டு நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், கர்ப்பப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய், மனநலம் மற்றும் தலைக்காயம் ஆகியவைகளை, ஆரம்ப நிலையில் பரிசோதனை மூலம் கண்டறிந்து, சிகிச்சை மற்றும் தொடர் கவனிப்பு ஆகியவற்றை வழங்க தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் கவனம் செலுத்தும்.

அவசரம் மற்றும் தலைக்காய சிகிச்சை வழங்க, அரசு மருத்துவமனைகளில், மருத்துவமனை முன் கவனிப்பு மற்றும் மருத்துவமனைகளுக்கிடையேயான மாற்றம் ஆகிய சேவைகளை மேம்படுத்தி, 108 ஆம்புலன்ஸ் சேவை வலுப்படுத்தப்படும்.

மனநலம் பாதிக்கப்பட்டோர்களை மருத்துவமனையில் அனுமதிக்க, மீட்பு ஊர்திகளை பயன்படுத்துவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. மனநல நோயின் சுமையை குறைப்பதற்காக, தற்கொலை தடுப்பு அவசர தொலைபேசி Suicide Hotline ஒன்றை உருவாக்கி, 104 உதவி மையத்தை மேம்படுத்தப்படும்.

முன்னுரிமை தேவைப்படும் 9 மாவட்டங்களில், பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் கீழ், தாய் சேய் நலம், தடுப்பூசி மற்றும் குடும்ப நலம் ஆகியவைகள், தொலைதூர கிராமங்களுக்கும் கிடைக்கும் வண்ணம் தேவையான வசதிகள் செய்து தரப்படும்.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தமிழ்நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா வழியிலே நடைபெறுகின்ற எங்களுடைய அரசு, கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய மக்களுக்கு அங்கேயே உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டுமென்பதற்காக தமிழகத்திலே அதிகமான அளவு ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்திருக்கிறோம். அதேபோல, நல்ல சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதற்காக மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, எல்லா வகையிலும் **கிராமத்திலிருந்து நகரம் வரை மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சை அளிப்பதிலே முதன்மை மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது** என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருந்தால் கூட, இன்றைக்கு மருத்துவத் துறையில் சேவை புரிவதிலே தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வருகை புரிந்திருக்கின்ற மருத்துவ நிபுணர்கள் அர்ப்பணிப்புப் உணர்வோடு நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த செயல்பாடு, உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. ஏனென்று சொன்னால், எத்தனையோ துறைகள் இருக்கின்றன, எந்தத் துறையிலும், உயிரை காப்பாற்றக்கூடிய அளவிற்கு துறைகள் இல்லை. ஆனால், **உயிரை காப்பாற்றக்கூடிய துறையிலே இருக்கின்ற வல்லுநர்கள், மருத்துவ நிபுணர்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். நம்முடைய பணி சிறக்க, சேவை சிறக்க, அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.**

புதிய, புதிய நோய்கள் இப்பொழுது வந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு நன்றாகத் தெரியும், கொரோனா வைரஸ் அதற்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லையென்று உங்களைப் போல் இருக்கின்ற மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். அப்படிப்பட்ட வைரஸை தடுக்க உங்களுடைய திறமையால் நீங்கள் அதற்கு தமிழகத்தில் மருந்து கண்டுபிடித்து இந்த நாட்டிற்கே முன்னுதாரணமாக திகழவேண்டும் என மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

“தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தமிழ்நாடு விளங்கும் என்பதில் ஐயமில்லை.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

ரூ.27.65 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டடங்கள்!

112 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு மீன்வளத்துறைக்கென கடல் மீன்பிடி சட்ட அமலாக்கப் பிரிவு துவக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் துவக்கி வைத்தார்கள்–19.02.2020.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், மீன்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் 27 கோடியே 65 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், மீன்வளத்துறை சார்பில், பாக் வளைகுடா பகுதி மீனவர்களின் இழுவலைப் படகுகளை மாற்றி ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக பரவலாக்கும் திட்டத்தின்கீழ், 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் 8 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக 7 மீனவர்களுக்கு அப்படகுகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாவிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மீன்வளக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க கல்வி மூலம் தமிழகத்தின் மீன் உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டை மேம்படுத்தி வருகிறது. இப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் என்று 16.02.2018 அன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இப்பல்கலைக்கழகம், மீன்வள அறிவியல் சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தரமான தொழிற் கல்வியை வழங்குதல், மீன்வள அறிவியலில் உள்ள முதன்மையான பிரிவுகளில் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு முறையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், மீன்வளர்ப்போர், மீனவர், வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு மீன்வள இணை தொழிற் கல்வியை வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு, ஒரடியம்புலத்தில் 4.78 ஏக்கர் நிலப்பரப்பில் 44,800 சதுர கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், வரவேற்பறை, வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகம், கணினி ஆய்வகம், கருத்தரங்கக்கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கட்டடம்;

நாகப்பட்டினம், வட்டார் நதிக்கரையில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 7 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 400 இருக்கைகள் கொண்ட நவீன வசதியுடன் கட்டப்பட்டுள்ள கருத்தரங்கக்கூடம்;

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், அரியமானில் 3.46 ஹெக்டேர் நிலப்பரப்பில், 12,000 சதுரடி பரப்பளவில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் தொழில்நுட்பப் பயிற்சி நிலையக் கட்டடம்;

செங்கல்பட்டு மாவட்டம், வாணியஞ்சாவடியில், தமிழ்நாடு மீன்வள முதுகலை பட்டமேற்படிப்பு நிலையத்தில் 3 கோடியே 20 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 27 கோடியே 65 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பாக் வளைகுடா மீனவர்களின் வாழ்வாதாரத்தினை உறுதி செய்திட மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் பாக் வளைகுடா பகுதியிலுள்ள 2,000 இழுவலைப் படகுகளுக்கு பதிலாக புதிதாக ஆழ்கடல் தூண்டில் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள்வலை படகுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் முதல்கட்டமாக, 500 இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிடும் இத்திட்டத்தை செயல்படுத்திட தமிழ்நாடு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி, மத்திய அரசு பங்குத்தொகையுடன் 286 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு படகின் விலையான 80 இலட்சம் ரூபாயில், 50 சதவிகிதம் **மத்திய அரசின் மானிய உதவியுடனும், 20** சதவிகிதம் **மாநில அரசு நிதியுதவியுடனும்,** 10 சதவிகிதம் பயனாளியின் பங்களிப்புடனும், மீதமுள்ள 20 சதவிகிதத் தொகை **வங்கி கடனுதவி மூலமாகவும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக படகு கட்டும் நிறுவனம், மீன்வளத்துறை மற்றும் மீனவ பயனாளிகளுக்கிடையே முத்தரப்பு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தின் கீழ், கொச்சி கப்பல் கட்டும் நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்களால் 6 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 8 ஆழ்கடல் மீன்பிடி படகுகளை இராமநாதபுரம் மாவட்ட மீனவப் பயனாளிகளின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக 7 மீனவர்களுக்கு அப்படகுகளுக்கான பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் சாவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

தமிழ்நாடு கடல் மீன்பிடி முறைப்படுத்தும் சட்டம் செயலில் இருந்தாலும், அதற்கான உட்கட்டமைப்பு, ரோந்து கலன்கள், மனித ஆற்றல் போன்றவை போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தினால், கடலில் சட்டம் ஒழுங்கை பராமரிப்பது மட்டுமின்றி, சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தை பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவதில் பெரும் தடைகள் உள்ளன. இத்தடைகளை களையும் வகையில், ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு காவல் துணை கண்காணிப்பாளர், 10 காவல்துறை ஆய்வாளர்கள், 8 காவல்துறை சார் ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 17 காவல்துறை ஓட்டுநர்கள் உட்பட மொத்தம் 112 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டு, மீன்வளத்துறைக்கென தனியே கடல் மீன்பிடி சட்ட அமலாக்கப் பிரிவு (Marine Enforcement Wing) புதிதாக தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டுள்ளது. இந்த பிரிவின் கீழ் பணியாற்றும் காவல்துறை அலுவலர்கள் அவர்தம் பதவிக்கான சீருடையுடன், வலது மேற்கையில் இப்பிரிவிற்கென வடிவமைக்கப்பட்ட குறிவில்லையை (Badge) அணிவார்கள்.

அதன்படி, தமிழ்நாடு கடல் மீன்பிடி முறைப்படுத்தும் சட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்திட, கடல் மீன்பிடி சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கடல் மீன்பிடி சட்ட அமலாக்கப் பிரிவின் கொடியை காவல் துணை கண்காணிப்பாளர் திரு. பி. இராதாகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடல் மீன்பிடி சட்ட அமலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கென வடிவமைக்கப்பட்ட குறிவில்லையை வெளியிட்டு, 6 காவலர்களுக்கு குறிவில்லையை அணிவித்தார்கள்.

❖ ❖ ❖

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 161ஆவது பிறந்த நாள்

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுலக வளாகத்தில், 18.02.2020 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் அவர்களின் 161ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

படமும்/ செய்தியும்

தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் சிறப்பிடம் பெற்று நல் ஆளுமையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்கிறது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 21.02.2020 அன்று சென்னையில் நடைபெற்ற பொருளாதார மற்றும் முதலீடு வாய்ப்புகளை மையமாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு தூதுக்குழு – தொலைத் தொடர் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை.

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

உலகில் உள்ள மொழிகளில் பழமையான, இலக்கிய வளம் கொண்ட தமிழ் மொழியை தன்னகத்தே கொண்ட, தொன்மையான நாகரீகங்களின் பிறப்பிடமாக விளங்கும் தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்துள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களே! தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம் அவர்களே! இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளர் திரு. திருமூர்த்தி அவர்களே! இந்திய வெளியுறவுத் துறையின் கூடுதல் செயலாளர் திரு. ஹரிஷ் அவர்களே! தேசிய தொழில் பெருந்தடத் திட்ட மேம்பாடு மற்றும் செயலாக்கக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சஞ்சய் மூர்த்தி அவர்களே! தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம் அவர்களே! GUIDANCE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் நீரஜ் மித்தல் அவர்களே! டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி காகர்லா உஷா அவர்களே! இந்திய வெளியுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர்களே! தொழில் தலைவர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறையினரே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என கனியன் பூங்குன்றனார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே உலகத்து மக்கள் அனைவரும் உறவினர்களே என்ற கருத்தின்படி தான் வாழ்ந்து வருகிறார்கள் எங்கள் தமிழ்நாட்டு மக்கள். பாரம்பரிய சிறப்பு வாய்ந்த தமிழ்நாட்டில் நிலவும் தொழில் சூழல் குறித்தும், சமூக கலாச்சார சிறப்புகள் குறித்தும்

அறிந்து கொள்ள உலக நாடுகள் பலவற்றிலிருந்து பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கும் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழர்கள் பண்டைய காலத்தில் கடல் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். தமிழ்நாட்டிலுள்ள கயல், கொற்கை, பூம்புகார், வஞ்சி போன்ற பண்டைய துறைமுகங்களின் வழியாக கிரேக்கம், சீனா, ரோமானியம் உள்ளிட்ட நாடுகளில் உள்ளவர்களுடன் தமிழ்நாடு அன்றைய காலக்கட்டத்திலே வாணிகம் செய்தது என்பதை பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பன்னெடுங்காலமாக விவசாயம், தொழிற்சாலைகள், கல்வி, கலாச்சாரம், வணிகம் என அனைத்துத் துறைகளிலும் சிறப்பிடம் பெற்று நல் ஆளுமையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு இன்று பெற்றுள்ளது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே முதலிடத்தில் இருக்கும் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றி இங்கே விரிவாக எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன்.

- ✦ திறன்மிக்க மனிதவளத்தின் இருப்பிடம்.
- ✦ வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி, துணிநூல் உற்பத்தி, காற்றாலை மின்சார உற்பத்தி, தகவல் தொழில்நுட்பச் சேவைகள் என அனைத்திலும் தமிழ்நாடு தான் முதலிடம்.
- ✦ இந்தியாவின் இரண்டாவது பெரும் பொருளாதார மாநிலமான தமிழ்நாட்டில் தான், “ஃபார்ச்சூன் 500”இன் 62 நிறுவனங்கள் அமைந்துள்ளன.
- ✦ “அமைதி, வளம், வளர்ச்சி” என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்த பாதையில் பயணித்து, சட்டம் ஒழுங்கை செம்மையாகப் பராமரித்து, சமூக மேம்பாடு மற்றும் பொருளாதார வளர்ச்சி என அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்திருக்கும் இந்தியாவின் ஒரே மாநிலம், தமிழ்நாடுதான்.
- ✦ **இந்தியா டுடே பத்திரிகையின் ஆய்வின்படி, ஒட்டுமொத்த வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை இரண்டாவது முறையாக தேர்வு செய்துள்ளது.**
- ✦ Frost and Sullivan நிறுவனம் வெளியிட்ட பொருளாதார வளர்ச்சி குறியீடு, நிதி ஆயோக் வெளியிட்டுள்ள புத்தாக்கக் குறியீடு, NCEAR அமைப்பு வெளியிட்டுள்ள முதலீட்டு வாய்ப்புகளுக்கான தரவரிசை ஆகியவற்றில் இரண்டாம் இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.
- ✦ இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமான தமிழ்நாடு, இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை, இங்குள்ள நான்கு பெரும்

“விவசாயம், தொழிற்சாலைகள், கல்வி, கலாச்சாரம், வணிகம் என அனைத்துத் துறைகளிலும் சிறப்பிடம் பெற்று நல் ஆளுமையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு இன்று பெற்றுள்ளது.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

துறைமுகங்கள் மற்றும் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் மூலமாக, உலகெங்கும் ஏற்றுமதி செய்கிறது.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்பி வரும் இடமும் தமிழ்நாடுதான். கல்லிலே கலைவண்ணம் கண்ட மாமல்லபுரம், தரணி போற்றும் தஞ்சை பெரிய கோவில், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், சித்தன்னவாசல், மதுரை, சிந்துவெளி விட்ட இடமும், சங்கத்தமிழ் தொட்ட இடமும் ஒன்றே என அறிஞர் பலரையும் கூற வைத்திருக்கும் கீழடி, ஆதிச்சநல்லூர், இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் என, உள்ளத்தை பரவசப்படுத்தும் இடங்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. இவற்றை எல்லாம் கண்டு களிக்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றேன்.

- உலகெங்கும் உள்ள தொழில் முனைவோரை தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்க்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில், ஜப்பான், கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, பின்லாந்து உள்ளிட்ட பல நாடுகளின் நிறுவனங்கள் **304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை** தமிழ்நாட்டில் மேற்கொள்ள உறுதியளித்துள்ளன. இவற்றில், 59 நிறுவனங்கள் ஏற்கெனவே தமது வணிக உற்பத்தியை துவங்கிவிட்டன. மேலும், 219 நிறுவனங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.

- இந்தியாவில் மிகப்பெரிய கழிவுநீரை நன்னீராக்கும் ஆலைகள், கடல் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், மழைநீர் சேகரிப்புத் திட்டம், குடிமராமத்து திட்டம், நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் என நீர் மேலாண்மையில் தன்னிறைவு பெறும் வகையிலான பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

- வணிகம் புரிதலை எளிதாக்க பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள், இணையவழி ஒற்றைச் சாளர முறை, பசுமை வகைப்பாட்டு தொழில் நிறுவனங்களுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடம் அனுமதி பெறும் வழிவகைகளை எளிதாக்குதல், முதலீடுகளைக் கண்காணித்து விரைவுபடுத்த எனது தலைமையிலான உயர்மட்டக் குழு என தொழில் துறையை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வந்துள்ளது.

- எனது தலைமையிலான உயர்மட்ட குழுவினர், அரசு முறைப் பயணமாக இங்கிலாந்து, அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்குச் சென்றதன் பயனாக **8 ஆயிரத்து 835 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்பட்டுள்ளன.** இதில் பல திட்டங்கள் தற்போது துவக்கப்பட்டுள்ளன.

- குறிப்பாக நான் துவக்கி வைத்த ஜோஹோ ஹெல்த் நிறுவனம் உறுதியளித்த முதலீட்டை விட 16 மடங்கு அதிக முதலீட்டை மேற்கொண்டுள்ளது.

- தற்போது துவக்கி வைக்கப்பட்ட கொரியாவின் ஹெனான் மற்றும் ஜப்பானின் மிட்சுபா சைகால் ஆகிய நிறுவனங்கள் தங்களுடைய தொழிற்சாலைகளை இங்கு அமைத்துள்ளது, தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழிற் சூழலுக்கு மேலும் ஒரு சான்றாக அமைந்துள்ளது.

- தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள தமிழ்நாடு பாலிமர் தொழிற்பூங்கா, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுக்காவில் 250 ஏக்கர் பரப்பளவில் 217 கோடி ரூபாய் மதிப்பீட்டில் டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படுகிறது. நவீன வசதிகளுடன் கூடிய இப்பூங்கா 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்து சுமார் 7,000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

- **எனது அரசின் இதுபோன்ற சிறப்பான முயற்சிகளுக்கு உறுதுணையாக உங்களைப் போன்ற வெளிநாடுகளின் தூதுவர்கள் பலர் ஆற்றிவரும் சிறப்பான பங்களிப்பை மறக்க முடியாது. எனது அரசு முறை பயணத்தின்போது** இந்திய வெளியுறவுத் துறையும், அந்தந்த நாடுகளின் பல்வேறு துறைகளும் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கின.

- ஃபோர்டு, ஹுண்டாய், யமஹா போன்ற நிறுவனங்கள் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படுவதற்கும், புதிய பல முதலீடுகளை தமிழ்நாட்டில் செய்வதற்கும், இங்குள்ள வெளிநாடுகளின் தூதரகங்கள் சிறப்பான வழிகாட்டுதல்களையும், பெரும் பங்களிப்பையும் வழங்கி வருகின்றன.

- ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் தமிழ்நாடு அரசு கூட்டுப்பணி குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இக்குழு, குறிப்பிட்ட கால இடைவெளியில் கூடி, அந்நாட்டு தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை களைந்து வருகிறது. பிரான்ஸ், அமெரிக்கா, கொரியா, ஆகிய நாடுகளின் தூதரகங்களும் தொழில்துறையுடன் தொடர்ந்து இணைந்து செயல்பட்டு வருகின்றன.

- உலக நாடுகள் பலவற்றிலும் இருந்து வந்திருக்கும் நீங்கள், தமிழ்நாட்டிற்கும் உங்கள் நாட்டிற்கும் நல்லதொரு இணைப்புப் பாலமாக திகழ வேண்டும். தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, உங்கள் நாட்டின் அரசு நிறுவனங்களும், உட்கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு நீங்கள் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

- சூழல் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் நம் நாடுகளுக்கு இடையே உள்ள ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்.

- உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதை வரவேற்க **"யாதும் ஊரே"** என்ற திட்டத்தை நியூயார்க் நகரில் நான் துவக்கி வைத்துள்ளேன். இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

- மின்சார வாகனப் பூங்கா, வானூர்தி தொழில் பூங்கா, நிதி சேவைகளுக்கான நகரம், பாலிமர் பூங்கா, உணவுப் பூங்கா என முதலீடுக்குப் பல வாய்ப்புகள் இங்கு உள்ளன. ஆழ்கடல் மீன்பிடி திட்டங்கள் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளை வழங்கியுள்ளது. சேலம் அருகே தலைவாசலில் அமைய உள்ள உலகத்

தரத்திலான கால்நடை பூங்கா, பால் மற்றும் பால் பொருட்கள் ஏற்றுமதிக்கான வாய்ப்பினை வழங்கும்.

✦ சேலம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் மத்திய அரசு உதவியுடன் விரைவில் அமைய இருக்கும் மெகா ஜவுளி பூங்காவிலும் நீங்கள் பங்கு பெறலாம், பயன் பெறலாம் என நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

✦ தகவல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறையிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. குறிப்பாக, சென்னை **இந்தியாவின் Saas Capital of India என்று கூறும் அளவிற்கு பல புதிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சென்னையில் தொடங்கப்பட்டு வருகின்றன.** மிகப் பெரிய நிறுவனங்களும் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. இதற்குக் காரணம், தமிழ்நாடு ஒரு அமைதியான மாநிலமாகவும், நவீன தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவிற்கு மனிதவள ஆற்றல் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. இங்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணவர்கள் தங்கள் உயர் கல்வியை முடித்துவிட்டு, திறமை மிக்க பொறியாளர்களாக வெளி வருகின்றனர்.

✦ தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் அடுத்த கட்டமாக தொழில் பெருந்தடத் திட்டங்கள் அமையும். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சியில் நவீன உலக சூழலுக்கு ஏற்ப, அடுத்தக் கட்டத்திற்கு முன்னேற்றும் சூழலை இத்திட்டங்கள் உருவாக்கும். இன்று சென்னை பெங்களூர் தொழில் பெருந்தட திட்ட செயலாக்கத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாக தேசிய தொழில் பெருந்தட மேம்பாட்டுக் கழகத்திற்கும், தமிழ்நாடு அரசின் டிட்கோ நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

✦ உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியை கொண்டுள்ள இந்தியாவின் வளர்ச்சி, உலகத்தை புதிய யுகத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு பெரும் பங்கினை வகித்து வருகிறது. எனவேதான், ஆசியாவிலேயே முதலீட்டுக்கு ஏற்ற சிறந்த இடமாக தமிழ்நாடு உயர்வடைய வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நிர்ணயித்த இலக்கை நோக்கி, எனது தலைமையிலான அரசு பயணித்து வருகிறது.

✦ எங்களின் இந்த பயணத்தில், உங்கள் அனைவரின் அன்பையும், ஒத்துழைப்பையும் நான் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில், இந்த பயணம், நாளைய நமது வெற்றியின் துவக்கமாய் அமையட்டும் என வாழ்த்தி, என் அன்பான விருந்தினர்களாகிய உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

Dear Investors, Be assured, I am here to take care you. Most Welcome.

இந்த நல்ல நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த இந்திய வெளியுறவுத் துறையின் செயலாளர், கூடுதல் செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

சிதறிய முத்துக்கள்

தென்னை மரத்தை நட்டுப் பயிராக்கி வளர்க்கிறவர்கள், எப்படிப் பிற்காலச் சந்ததியின் நலனுக்காகச் செயல்படுகிறார்களோ, அதுபோல தமிழக அரசு வருங்கால நலனை மனத்தில் கொண்டு திட்டம் தீட்டிச் செயல்படுகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்

மழைபெய்யும் போது மழை நீர் சேகரிப்பது என்பது ஒருபுறம் இருக்க, நல்ல மழை பொழிய வேண்டும் என்றால், அதற்கு எது ஆதாரம் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மரங்களே மழைக்கு ஆதாரம். எனவே, "மரங்களை வளர்ப்போம்! மழையினைப் பெறுவோம்"

புரட்சித்தலைவி செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள்

ஒரு நாட்டிற்கு அழகையும், அழகுடன் சேர்த்து செல்வத்தையும் கொடுக்கின்ற இயற்கை வளங்களைக் காப்பது என்பது இந்நாட்டில் வசிக்கின்ற ஒவ்வொரு தனிமனிதனின் கடமையாகும்."

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள்

சிவகங்கை மாவட்டம் கீழடியில் ஆறாம் கட்ட தொல்லியல் அகழாய்வுப் பணிகள் துவக்கம்!

துவாக்குடியில், ரூ.5 கோடி மதிப்பீட்டில் மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் கூடுதல் கல்விக் கட்டடங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில் 19.02.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக தொல்லியல் அகழ்வாய்வுப் பணிகளை துவக்கி வைத்து, கல்விக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.02.2020 தலைமைச் செயலகத்தில், சிவகங்கை மாவட்டம், கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளவுள்ள ஆறாம் கட்ட தொல்லியல் அகழாய்வுப் பணிகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கல்விக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

பழந்தமிழரின் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தும் பணிகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிச்சந்தை திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் இந்திய தொல்லியல்துறை 2014–2015, 2015–2016, 2016–2017 ஆகிய மூன்று ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்டு உள்ளது. இந்த அகழாய்வுகளில்

7,818 தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு கீழடியில் சங்ககால (வரலாற்றுத் தொடக்ககாலம்) மக்கள் வாழ்ந்ததற்கானச் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

இச்சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல்துறை கீழடியில் அகழாய்வினை மேற்கொள்ள மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றது. இந்த நான்காம் கட்ட அகழாய்விற்கு தமிழ்நாடு அரசு 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது. அகழாய்வு நெறிமுறைகளின்படி 2018–2019ஆம் ஆண்டில் நான்காம் கட்ட தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் 34 குழிகள் அமைக்கப்பட்டு 5,820 தொல்பொருட்களும், பழந்தமிழரின் கட்டுமானப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டன. இவற்றில் தங்கத்திலான அணிகலன்களின் உடைந்த பாகங்கள், செம்பிலான பொருட்கள், பல்வேறு வகையான மணிகள், சுடுமண்ணாலான உருவங்கள், தந்தத்திலான பொருட்கள், ஆட்டக்காய்கள், தக்களிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். மேலும், தமிழி எழுத்துப்பொறிப்பு கொண்ட 56 பானை ஓடுகள், 1,001 குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டன. அத்துடன் இரண்டு உறை கிணறுகளும் வெளிப்படுத்தப்பட்டன.

இந்த நான்காம் கட்ட அகழாய்வினை அடுத்து, 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு கீழடியில் ஐந்தாம் கட்ட அகழாய்வினை விரிவாகவும் சீரிய முறையிலும் மேற்கொள்வதற்காக 47 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தது. தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால், ஐந்தாம் கட்ட அகழாய்வு செய்வதற்குரிய இடங்களை தேர்வு செய்வதற்கு பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, களஆய்வுகளை மேற்கொண்டு, அதன்படி இடங்களை தேர்வு செய்து, அகழாய்வு நெறிமுறைகளின்படி அகழாய்வு செய்யப்பட்டன. இந்த ஐந்தாம் கட்ட அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இக்கட்டுமானங்கள் செங்கல்லிலான திறந்த நிலையிலான வாய்க்கால், மூடிய நிலையிலுள்ள வடிகால், சுருள் வடிவிலான சுடுமண் குழாய் போன்ற வடிகால் அமைப்புகள் கண்டறியப்பட்டன. இவை அன்றைய நீர் மேலாண்மையை எடுத்துக்காட்டுகின்றன. மேலும், 16 மீட்டர் நீளத்தில் ஒற்றை அடுக்குடன் கூடிய சுவர், இரண்டு உறைகிணறுகள், செங்கல் கொண்டு கட்டப்பட்ட தொட்டி போன்றவை வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சுடுமண் உருவங்கள், மணிகள், செப்புக்காசுகள், இரும்புப் பொருட்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், எலும்பு முனைகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தந்தத்திலான பொருட்கள் போன்ற ஏறத்தாழ 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் ஆய்வில் அகழ்வாய்வு ஒரு முக்கியப்பணி என்றால் அகழ்வாய்வில் வெளிக்கொணரப்பட்ட பொருள்களை காலக் கணிப்புக்கு உட்படுத்துவது மற்றொரு முக்கிய பணியாகும். உலகத்தரம் வாய்ந்த ஆய்வகங்களில் இவை ஆய்வு செய்யப்படுகின்றன. கீழடியில் கீழ்மட்ட அடுக்கில் எடுக்கப்பட்ட கரிப்பொருள் ஒன்று அமெரிக்க ஐக்கிய நாட்டில் புளோரிடா மாநிலத்தில் மியாமி என்ற நகரிலுள்ள பீட்டா பகுப்பாய்வு ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டது. இக்கரிமத்தின் காலம் கி.மு.580 என்பது ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கீழடியில் 2,600 ஆண்டுகள் பழமையான நாகரிகம் நிலவியது என்பதையும், இவை முதிர்ச்சியடைந்த சமூகத்தின் முன்னேறிய தொழில்நுட்ப வளர்ச்சி என்பதையும் பறைசாற்றுகின்றது. இக்கீழடி அகழாய்வினை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் நேரில் பார்வையிட்டுள்ளனர்.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை பொதுமக்கள் அனைவரும் நேரடியாக பார்வையிட்டுப் பயனடையும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 01.11.2019 அன்று மதுரை, உலகத் தமிழ்ச் சங்க வளாகத்தில் கீழடி அகழாய்வு தொல்பொருட்கள் கண்காட்சி காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைக்கப்பட்டது. இச்சிறப்புமிக்க கண்காட்சியினை இதுவரை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் பார்வையிட்டுள்ளனர்.

கீழடி, கோயில் நகரமான மதுரைக்கு மிக அருகிலுள்ள பகுதியாகும். இங்கு வரலாற்றுத் தொன்மை கொண்ட பொருட்கள் கிடைக்கப்பெற்றதன் மூலம், பண்டைய **தமிழர் நாகரிகத்தின் பண்பாட்டு வளம் சுட்டிக் காட்டப்படுவதால் கீழடியில் மறைந்துள்ள பண்பாட்டு மதிப்புறுப் பொருட்களை தேடும் பணிகளை எதிர்காலத்தில் தொடர்வதும், பண்டைய சமூகத்தின் பண்பாட்டு வளங்களை வெளிப்படுத்துவதும் காலத்தின் அவசியத் தேவை** என்ற அடிப்படையில் கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம் மற்றும் கொந்தகை ஆகிய இடங்களில் ஆறாம் கட்ட அகழாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய (CABA) நிலைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், அகரம் மற்றும் கொந்தகை ஆகிய

இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளவுள்ள ஆறாம் கட்ட தொல்லியல் அகழாய்வுப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

அதுமட்டுமின்றி, 2019–2020ஆம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை, ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல் ஆகிய நான்கு இடங்களில் முறையான தொல்லியல் அகழாய்வுகளை மேற்கொள்ளவும், புதிய கற்கால இடங்களை கண்டறிய கிருஷ்ணகிரி, வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை, சேலம் ஆகிய மாவட்டங்களில் முறையான தொல்லியல் கள ஆய்வு மேற்கொள்ளவும், தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகத்தினை கண்டறிய திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தொல்லியல் கள ஆய்வு மேற்கொள்ளவும் மத்திய தொல்லியல் ஆலோசனை வாரிய நிலைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தற்போது மேற்கண்ட **அனைத்து இடங்களிலும் தரை ஊடுருவல் தொலையுணர்வி மதிப்பாய்வு (Ground Penetrating Radar), ஆளில்லா வான்வழி வாகனம் மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle - UAV Survey) போன்ற பல்வகை தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அகழாய்வு செய்வதற்குரிய சரியான தொல்லியல் இடத்தை அடையாளம் கண்டறியும் பணியும் நிறைவடைந்துள்ளது.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் மூன்றாண்டு பட்டப்படிப்பு, ஒன்றரை ஆண்டு பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் அளிக்கப்படுவதுடன், ஓட்டல் பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் மற்றும் திறன்சார் பயிற்சித் திட்டங்களின் கீழ், திறன் சாராத நபர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இந்த நிறுவனம் அனைத்து விதமான சுற்றுலா விருந்தோம்பல் கல்விக்கான சிறப்பு மையமாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில், 5 கோடி ரூபாய் செலவில், ஸ்மார்ட் வகுப்பறை, கலந்தாய்வு கூடம், ஆசிரியர்கள் அறை, பயிற்சி உணவுக்கூடம், மாணவர் செயல்பாட்டு அறை, மாணவர் சமையல் பயிற்சிக் கூடம், அடுமனை பயிற்சிக் கூடம், விருந்தினர் முன்மாதிரி ஓய்வறை. மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள், புதிய உபகரணங்கள் மற்றும் மரச்சாமான்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு, 125 கிலோவாட் திறன் கொண்ட புதிய ஜெனரேட்டர் போன்ற நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் கல்விக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

நினைவில் நின்றவை

உயர் முன்னுரிமை

தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனில் நான் எப்போதுமே உயர் முன்னுரிமை அளித்து வருகிறேன். தமிழ்நாட்டில் எந்த நேரத்திலும், இரத்தப் புற்றுநோய் மற்றும் தலசீமியா (இரத்த அழிவு சோகை) நோயால் பல நூறு நோயாளிகள் பல்வேறு மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். இதன் தாக்கத்தால் ஏற்படும் வலி, பயம், வேதனை, மனஉளைச்சல் ஆகியவற்றால் நோயாளிகளும் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பங்களும் இன்னலுக்கு ஆளாவதுடன் செலவுப் பிரச்சினைகளும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. அவர்கள் சராசரி வாழ்க்கையை மேற்கொள்வதற்கு மாட்சிங் ஸ்டேம் செல்கள் (Matching Stemcell) உதவுகிறது. நோயாளிகளின் தேவைக்கேற்ப அனைத்து மருத்துவ கிசிச்சை வசதிகள் கொண்ட சாதனங்கள், மருத்துவ செயல்திறன்கள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதே என்னுடைய அரசின் தலையாய நோக்கமாகும் "ஒருவருடைய சிறந்த உடல்நிலை, அவருக்கு நம்பிக்கையை வளர்க்கிறது. அந்த நம்பிக்கை அவருக்கு எல்லாவற்றையும் வழங்குகிறது" என்பது ஒரு அரேபிய பழமொழியாகும்"

– மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின்
எழுச்சிமிகு உரைகள் (2013–2014)
எனும் நூலிலிருந்து...

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களிலேயே இவ்விரு சமையல் கூடங்கள் அமைய மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதி அளித்துள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் அட்சய பாத்திர மைய சமையல் கூடம் அமைப்பதற்கான பூமி பூஜை விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை – 15.02.2020.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

அட்சய பாத்திரா ஃபவுண்டேஷன் சார்பில் பள்ளிக் குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட உள்ள அட்சய பாத்திர மைய சமையல் கூடத்திற்கான பூமி பூஜை விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

விருந்தினராக பங்கேற்று சிறப்பான கருத்துக்களை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

சிறப்பு அழைப்பாளர்களாக பங்கு பெற்று இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்களே!

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் திருமதி வி.சரோஜா அவர்களே!

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே! மரியாதைக்குரிய உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் அவர்களே!

முன்னாள் வாரியத் தலைவர் அவர்களே! பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களே!

அட்சய பாத்திரா பவுண்டேஷன் தலைவர் திரு. மது பண்டிட் தாசா அவர்களே! அட்சய பாத்திரா பவுண்டேஷன் துணைத் தலைவர் திரு.சஞ்சலபதி தாசா அவர்களே! அட்சய பாத்திரா பவுண்டேஷன் வட்டாரத் தலைவர் திரு.ஜெய் சைதன்ய தாசா அவர்களே!

அட்சய பாத்திரா பவுண்டேஷன் நிருவாகிகளே! வருகை தந்திருக்கின்ற மாணவ, மாணவிகளே! பெரியோர்களே! தாய்மார்களே!

நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற நண்பர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே”

அதாவது உலகில் வாழ்கின்றவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர் என்கிறது மணிமேகலை காப்பியம்.

“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு”

என்றார் வள்ளுவப் பெருந்தகை.

“அன்னக் குவளையில் தான் இறைவன் ஏழைக்கு காட்சியளிக்கிறான்” என்றார் தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் அவர்கள்.

“ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்கிறேன்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தமிழ்நாட்டில் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் மற்றும் ஏழை மக்களின் பசியினை போக்க தமிழ்நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

“கொடிது கொடிது வறுமை கொடிது,
அதனினும் கொடியது இளமையில் வறுமை”

ஆம், **“பசித்தால் அழ மட்டுமே தெரிந்த வயதில் பசியின் கொடுமைக்கு ஆளாகும் அனுபவத்தை நான் இளமையில் அனுபவித்தேன். பக்கத்து வீட்டில் இருந்த ஒரு தாய் முறத்தில் அரிசியை தந்து கஞ்சி காய்ச்சி எங்களுக்கு உதவியிருக்காவிட்டால் மூன்று நாட்களாக பட்டினியாக கிடந்த எங்கள் தாயும், நாங்களும் என்றோ இந்த உலகை விட்டு போயிருப்போம் என்றார் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அன்று எங்களை வாழ வைத்தது ஒரு தாய். இன்று அத்தகைய தாய்க்குலம் தான் முழு நம்பிக்கையோடு என்னை முதலமைச்சர் ஆக்கியுள்ளது என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஏழ்மை நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் பல குடும்பங்களில் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பிசைந்து ஊட்டுவதற்கு சோறு இல்லாமல் கை பிசைந்து நிற்கும் அவல நிலையை போக்கச் சிறிதேனும் முயற்சி செய்வது எனது அவசர, அவசிய கடமை என்பதை உணர்ந்தேன். இந்த அடிப்படையில் தான் 2 முதல் 10 வயது வரை உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மதியம் ஒரு வேளையாவது சத்துணவு**

கிடைப்பதற்கு வழிவகை செய்யும் சத்துணவு திட்டம் என்ற ஒரு அற்புதமான திட்டத்தை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்தார்.

குழந்தைகள் தான் தேசத்தின் எதிர்காலம் என்பதாலும், பின்தங்கிய சூழ்நிலையில் வளர்ந்து வரும் குழந்தைகள் அறிவாற்றலுடன் கூடிய சத்தான குடிமகனாக வளர்ந்திட வழிவகுத்திட வேண்டும் என்று உணர்ந்ததாலும், மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் 1982ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்டு, இந்தத் திட்டத்தை துவக்கியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

இந்தத் திட்டம் **“புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்”** என்று மாண்புமிகு அம்மா அவர்களால் பின்னர் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஏற்கெனவே பல தலைவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய இந்தத் திட்டம் நாடு முழுவதும் பரவி சிறப்பான திட்டம் என்று அனைத்து மக்களாலும் வரவேற்கப்பட்ட திட்டம் சத்துணவுத் திட்டம். மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்திற்கு மேலும் மெருகேற்றி, சத்துணவில் வழங்கப்படும் உணவு வகைகளை மாற்றியமைத்து, கலவை சாதங்கள் உள்ளிட்ட 13 வகையான உணவுகளுடன் மசாலா முட்டைகளும் வழங்க உத்தரவிட்டார். சத்துணவுடன் வாரம் ஒரு முறை கருப்பு கொண்டைக் கடலை, பச்சைப் பயறு மற்றும் உருளைக் கிழங்கும் வழங்கப்படுகிறது. முட்டை உண்ணாத மாணாக்கர்களுக்கு முட்டைக்குப் பதிலாக வாழைப்பழம் வழங்கப்படுகிறது.

சத்துணவு திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு தனியாக நிருவாக அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம், 43 ஆயிரத்து 283 சத்துணவு மையங்கள் மூலம் சுமார் 50 இலட்சம் மாணவ, மாணவியர்கள் இதன் மூலம் பயன் பெறுகின்றனர்.

படிக்கும் ஏழை மாணாக்கர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்தாலும், நகர்ப் பகுதிகளில் வாழும் சமுதாயத்தின் ஏழை, அடித்தட்டு மக்களுக்கும் பசியில்லா நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது தான் **‘அம்மா உணவகம்’**. முதலில் சென்னையில் துவக்கப்பட்ட இந்தத் திட்டம், பின்னர் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது, இத்திட்டம் மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

“குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம், பெரியோர்களுக்கு கோயில்களில் அன்னதானத் திட்டம், நகர்ப்புற ஏழைத் தொழிலாளர்களுக்காக அம்மா உணவகம் என மக்களின் பசியைப் போக்கும் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம், பெரியோர்களுக்கு கோயில்களில் அன்னதானத் திட்டம், நகர்ப்புற ஏழைத் தொழிலாளர்களுக்காக அம்மா உணவகம் என மக்களின் பசியைப் போக்கும் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில சிறுவர்கள் தங்கள் பசியை போக்க சாலையோரங்களில் வீசப்பட்ட உணவுகளை உண்பதற்காக தெரு நாய்களுடன் சண்டையிடும் நிகழ்வினைக் கண்ட திரு. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதா அவர்கள் மிகவும் வருத்தமடைந்தார் அதன் விளைவாக, சமுதாயத்தில் பசியில் வாடும் குழந்தைகளே இருக்கக் கூடாது என்று கருதி, குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டத்தினை **‘அட்சய பாத்திரா பவுண்டேஷன்’** என்ற பெயரில் ஒரு தொண்டு நிறுவனமாகத் தொடங்கி, அதன் மூலம், தனது எண்ணத்தை செயல்படுத்தி வரும் இந்த நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்க காலத்தில், மணிமேகலை காப்பியத்தில் **“அமுதசுரபி”** என்ற அள்ள அள்ளக் குறையாத பாத்திரத்தின் மூலம் மக்களின் பசியினை மணிமேகலை போக்கி வந்தார் என்பதை படித்திருக்கிறோம். அதைப் போன்று, பள்ளியில் படிக்கும் ஏழைக் குழந்தைகள் தங்களது கல்வியினை தொடர, பசி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்காக 2000ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனத்திற்கு **“அட்சய பாத்திரா”** என்று பெயர் வைக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இந்தியா முழுவதும் தினந்தோறும் 16 ஆயிரத்து 856 பள்ளிகளில் பயிலும் சுமார் 18 இலட்சம்

குழந்தைகளுக்கு இந்த நிறுவனம் உணவு அளித்து வருவது ஒரு உன்னதமான மனிதநேயச் செயலாகும்.

இந்த நிறுவனம் 2019ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து **"காலை உணவுத் திட்டம்"** என்ற திட்டத்தினை செயல்படுத்தி, தற்போது சென்னையில் உள்ள 24 மாநகராட்சி பள்ளிகளில் படிக்கும் 5,785 மாணவர்களுக்கு உணவு வழங்கி வருகிறது என்பதையும், இத்திட்டத்திற்கு உணவு தயாரிப்பதற்காக, சுமார் 2 கோடி ரூபாய் செலவில் திருவான்மியூரில் ஒரு சமையலறை அமைத்து, அங்கு இட்லி, பொங்கல், உப்புமா போன்ற உணவு வகைகளை தயாரித்து விநியோகம் செய்து வருகிறது என்பதையும் அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த காலை உணவு திட்டத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில், இந்த ஆண்டு கிரீம்ஸ் சாலையில் சுமார் 20 ஆயிரம் சதுர அடி பரப்பிலும் மற்றும் பெரம்பூர் பாரக்ஸ் சாலையில் சுமார் 35 ஆயிரம் சதுர அடி பரப்பிலும், முறையே 12 ஆயிரம் மற்றும் 15 ஆயிரம் மாணாக்கர்களுக்கு உணவு வழங்கும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய சமையல் கூடம் அமைப்பதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இந்த நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டுள்ளது. சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்காக இங்கு சுகாதாரமான முறையில் உணவு தயார் செய்யப்படுவதைக் கருத்தில் கொண்டு, **பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களிலேயே இவ்விரு மைய சமையல் கூடங்கள் அமைய மாண்புமிகு அம்மாவின் அரசு அனுமதி அளித்துள்ளதுடன், இதற்கு குடிநீர், மின் இணைப்பு மற்றும் மின்சார கட்டணத்தையும் பெருநகர சென்னை மாநகராட்சியே செலுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்துள்ளது.**

கிரீம்ஸ் சாலையில் அட்சய பாத்திரா நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட உள்ள நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய சமையல் கூடத்திற்கு உண்டான செலவினத்திற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தனது விருப்புரிமை நிதியின் மூலம் நிதி உதவி வழங்கியுள்ளதற்கு எனது பாராட்டுதல்களை மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். காரணம், பிற எந்த பொருளையும் தானம் பெறுபவர்கள், மன நிறைவு அடையாமல் இன்னும் வேண்டும் என்றே சொல்வார்கள். ஆனால், போதும் என்ற மன நிறைவை பெறுபவருக்குத் தரும் தானம் அன்னதானம் மட்டுமே.

அட்சய பாத்திரா என்ற இந்த நிறுவனம், சென்னை மட்டுமன்றி, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பசியின்றி படிப்பினை தொடர, உங்களது காலை உணவு திட்டத்தினை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இந்த நிறுவனத்தை கேட்டுக் கொள்கிறேன்.

நான் முதலமைச்சராக பதவியேற்று மூன்று ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. இந்த நன்னாளில் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். பள்ளி மாணவர்களின் பசியை போக்க, எங்கள் இயக்கத்தின் தலைவர் புரட்சித்தலைவர் அவர்களால் துவக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு அம்மா அவர்களால் மெருகேற்றப்பட்ட மதிய சத்துணவுத் திட்டத்தினை போன்று, அட்சய பாத்திரா நிறுவனத்தால் நடத்தப்படும் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் சமையல் கூடங்கள் அமைக்க நடத்தப்படும் பூமி பூஜை விழா என்ற ஒரு அன்னதானம் வழங்குதல் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில், இந்த இனிய நாளில் கலந்துக் கொள்வதை நான் பெருமையாகக் கருதுகின்றேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அட்சய பாத்திரா ஃபவுண்டேஷன் நிருவாகிகளுக்கும், அதனுடைய தலைவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து, மென்மேலும் இந்த நிறுவனம் வளர்ச்சியடைந்து ஏழை, எளிய மாணவ, மாணவியர் பசியை போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

தானத்தில் சிறந்தது அன்னதானம் என்பார்கள். காரணம், பிற எந்த பொருளையும் தானம் பெறுபவர்கள், மன நிறைவு அடையாமல் இன்னும் வேண்டும் என்றே சொல்வார்கள். ஆனால், போதும் என்ற மன நிறைவை பெறுபவருக்குத் தரும் தானம் அன்னதானம் மட்டுமே.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 22.02.2020 அன்று, தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், வீரபாண்டியபட்டணத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்பட்டுள்ள டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தை திறந்து வைத்தார்கள்.
உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ.பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS